திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

407/ω.

மலர் ௨] விகாரி தை [மணி 5
பிப்ரவரி 1960

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.

பொருளடக்கம்

1. ஆலய வழிபாட்டு முறை
2. சிவாய மலை
3. சைவம்
4. ஸ்ரீவைஷ்ணவம்
5. திருக்கடம்பந்துறை
6. நம்பி மூத்தபிரான்
7. விறன்மிண்ட நாயனுர்
8. ஆணை நமதே
9. நவதிருப்பதி யநுபவம்
10. திருக்கடிகை
11. திருஈங்கோய் மலை
12. திருவெம்பாவை, திருப்பாவை மாநாடுகள்
13. திருவெறும்பியூர்

முகப்புப்படம் : குடந்தை இராமசாமி கோயில்—இராமர், சீதை.

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை -6.

டெண்டர் நோட்டீஸ்

வலிவலம் ஸ்ரீ ஹிருதயநாதசுவாமி கோயிலில் 18½ அடி உயரத்திலிருக்கும் கொடிமரத்திற்குச் சுமார் சேர் 400-ல் செப்புத்தகடு போடவேண்டியதற்கு சேர் 1-க்கு கூலிரேட்டுக்கு டெண்டர் கோரப்படுகிறது. மேற்படி வேலைக்குள்ள ஜாடா சாமான்களும் கோயிலில் சப்ளை செய்யப்படும். கூலிக்கு மட்டில் சீலிட்ட டெண்டர்கள் 8-2-60-ந் தேதி மாலை 5 மணிக்குள் அடியிற் கையொப்பமிட்டவருக்கு வந்து சேரும்படி அனுப்பவேண்டும்.

ஹிருதய கமலநாதசுவாமி
தேவஸ்தானம், வலிவலம்,
23-1-60

எஸ். தியாகராஜத் தேவர்,
சேர்மேன், போர்டு ஆப் டிரஸ்டீஸ்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி தை - 1960 பிப்ரவரி [மணி 5

GAZETTEER UNIT 407/ RECORD OFFICE BUILDINGS

ஆலய வழிபாட்டு முறை

ஆலய வழிபாட்டுக்குச் செல்பவர்கள் நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து சமயச் சின்னங்களைத் தரித்துக்கொண்டு இறைவன் நினைவன்றி வேறொரு நினைவும் இல்லாமல் செல்லவேண்டும். ஆலய வழிபாட்டுக்குப் புறப்படும் நேரத்திலிருந்து திரும்ப வீட்டுக்கு வரும்வரையில் இறைவனைப்பற்றிய பேச்சைத் தவிர வேறு வீண்பேச்சுக்கள் பேசுதல் கூடாது.

தூரத்திலிருந்து கோபுரத்தைக் கண்டவுடன் வணங்கவேண்டும்.

சிவாலயங்கள்

கோபுரத்துக்குட் சென்றவுடன் ஆலயத்தின் வெளிப் பிரகாரத்தை யொரு முறை வலம்வந்து கொடிமரத்தருகில் நிலத்தில் வீழ்ந்து வணங்கவேண்டும். கோயிலுக்குள் வேறு எந்த இடத்திலும் கீழே விழுந்து வணங்குதல் கூடாது. திருஞானசம்பந்தர்,

"தேடுமா லயனுக்கரியவர் மகிழ்ந்த
திருவாலவாய் மருங்கணைந்து,
நீடுயர் செல்வக் கோபுர மிறைஞ்சி
நிறை பெருவியப்புடன்புக்கு
மாடு சூழ் வலங்கொண்டு, உடையவர்
கோயில் புகுந்தார்"

—பெரியபுராணம்.

கொடிமரத்தருகேயுள்ள பலிபீடத்தில் நம்முடைய உலகபரமான எண்ணங்களையெல்லாம் விட்டுவிட்டு தூய மனத்தினராய் நந்தியெம்பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டு உள்ளே செல்லவேண்டும். 'துள்ளுமறியா மனதைப் பலிகொடுத்தேன்'—தாயுமானவர். சுவாமிகோயிலின் திருமுன்பு உள்ள திருவாயில்இருபாலரையும் வணங்கி உள்ளே சென்று விநாயகப் பெருமானை முதலில் வணங்கவேண்டும். அவர்முன் நின்று சிரசின்மேல் கைகூப்பி வணங்கி, தலையில் மூன்று முறையோ, ஐந்து முறையோ குட்டிக்கொண்டு, தோப்புக்கரணமும் போட்டு வணங்கவேண்டும். காதுக்கும் மூளைக்கும் பல முக்கியமான நரம்புகளின் தொடர்பு உண்டெனவும் இவைகளைத் தொட்டு செய்கின்ற வழிபாட்டினால் மூளை சுறுசுறுப்பும், தேக ஆரோக்கியமும் உண்டாகுமென்றும் உடற்கூறுவல்லுநர் கூறுவர். ஆண்டவனிடத்தில்நாம்அறிந்தும் அறியாமலும் செய்த குற்றங்களுக்காக உண்மையோடு மன்னிப்புக்கேட்டு அவன் கருணையை வேண்டுதலையும் குறிக்கும்.

உட்பிரகாரத்தை ஒருதரம் வலமாக வந்து மூலத்தானத்தை நோக்கிச் செல்ல

வேண்டும். கிழக்கு, தெற்கு நோக்கிய சந்நிதிகளில் ஆண்கள் வலது பக்கமும், பெண்கள் இடது பக்கமும் நின்று வழிபடவேண்டும். மேற்கு, வடக்கு நோக்கிய சந்நிதிகளில் ஆண்கள் இடது பக்கமாகவும், பெண்கள் வலது பக்கமாகவும் நின்று வணங்கவேண்டும். சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உள்ளன. அவற்றுள் ஈசான்யம் என்ற ஐந்தாவது முகம் எப்போதும் ஈசான்ய திக்கையே நோக்கியிருக்கும். அதற்குத் தகுந்தாற்போல் குருக்களும் கிழக்கு, தெற்கு நோக்கிய சந்நிதிகளில் வலதுபுறம் நின்றும், மேற்கு, வடக்கு நோக்கிய சந்நிதிகளில் இடதுபுறம் நின்றும் பூசை செய்வார். நமது நாட்டில் வடக்கு நோக்கிய சந்நிதி திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள கடம்பர்கோயில் என்ற ஒரு தலத்தில்தான் இருக்கிறது. மேற்குப் பார்த்த சந்நிதிகள் அரசிலி, ஆனைக்கா, கடலூர், காளத்தி, கோகர்ணம், சிராப்பள்ளி, மயிலாப்பூர் முதலிய நாற்பது பாடல்பெற்ற தலங்களில் உள்ளன. தெற்குபார்த்த சுவாமி சந்நிதிகள் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

158336

மூலஸ்தானத்துக்கு அணுக்கமாக இருக்கும் நந்திக்குப் பின்புறம் பலிபீடம் அமைக்கப்பட்டிருக்கும். வெளியேயுள்ள நந்திக்கு முன்னும் பின்னும் பலிபீடம் இருக்கும். மூலத்தானத்தை யடுத்திருக்கும் நந்தியும் பலிபீடமும் பசுபாசம் என்பவற்றைக் குறிக்கும்.

"ஆய பதிதான் அருள்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறென நிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்க்கே."

—திருமந்திரம்.

இந்த நந்திக்கும் மூலத்தானத்துக்கும் குறுக்கே செல்லுதல் கூடாது.

சுவாமி சந்நிதியிலிருந்து நடராஜப் பெருமான் சந்நிதிக்குச் சென்று வணங்க வேண்டும். அதன்பின் நால்வர் சந்நிதிக்குச் சென்று அவர்களையும், அறுபத்து மூவர் உள்ள கோயிலாக இருந்தால் அறுபத்து மூவரையும் வணங்கி, தட்சிணாமூர்த்தி சந்நிதியில் உட்கார்ந்து பஞ்சாட்சர ஜபம் செய்யவேண்டும். பிறகு கன்னி விநாயகரையும், உற்சவ மூர்த்திகளையும் சுப்பிரமணியரையும், இலட்சுமியையும், துர்க்கையையும் வணங்கவேண்டும். கடைசியாக சண்டேசுரப்பெருமானிடம் சென்று கையை உதறி அவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று அவரை வலம் வராமல் திரும்பிச் செல்லவேண்டும்.

அம்பிகை சந்நிதி சுவாமி கோயிலிலேயே பல இடங்களில் தெற்கு நோக்கியமைக்கப்பெற்றிருக்கிறது. சில இடங்களில் அம்பிகைக்குத் தனிக்கோயில்கள் சுவாமிக்கு இடது பக்கமும், சில இடங்களில் வலது பக்கமும் இருக்கின்றன. அங்கே சென்று அம்பிகையை வணங்கி, அம்பிகை கோயிலுக்குத் தனிப்பிரகாரம் இருந்தால் இருமுறை வலம் வந்து சண்டிகேசுவரியிடம் விடைபெற்று, பைரவரைத் தெரிசித்து மீண்டும் கொடிமரத்தருகே வந்து நிலத்தில் விழுந்து வணங்கி ஓரிடத்தில் அமர்ந்து, வணங்கிவந்த மூர்த்தி பேதங்களையெல்லாம் அகக்கண்ணால் கண்டு பஞ்சாட்சர ஜபம் செய்யவேண்டும். பிறகு எழுந்து இறைவன் நினைவாகவே வீட்டிற்குத் திரும்பவேண்டும். மதுரைக்கோயிலில் அம்பிகை சந்நிதி சுவாமிக்கு வலப்பக்கம் இருக்கிறது. இக்கோயிலில் முதலில் அம்பிகையை வழிபட்டு அதன்பின் சுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்டு மீண்டும் அம்பிகை சந்நிதி வழியாகவே வெளியேறுவது வழக்கமாக இருந்து வருகிறது.

கோயிலில் வாங்கும் விபூதி குங்குமப் பிரசாதத்தை உபயோகித்ததுபோக மீதியிருந்தால் அதற்கென அமைக்கப்பெற்றிருக்கும் இடங்களில் வைக்கவேண்டும். இல்லாவிட்டால் சிறு காகிதங்களில் மடித்து வைத்துக்கொள்ள வேண்டும். கண்ட இடங்களில் போடக்கூடாது. சண்டேசுரப்பெருமானை வணங்கும்போது அப்பெருமான்மீது நூலையோ வேறு பொருள்களையோ போடுதல் கூடாது. மூர்த்திகளுக்கு நெருக்கமாகக் கற்பூரம் ஏற்றுதல் கூடாது. கற்பூரத்தைக் குருக்களிடமோ ஆலய ஊழியர்களிடமோ கொடுக்கவேண்டும். வீடு சேர்ந்ததும் உடனே கால்களைச் சுத்தம்செய்து கொள்ளாமல் வெளிப்புறம் உட்கார்ந்து குறைந்தது பதினொருமுறை ஐந்தெழுத்தை ஓதி அதன்பின் கால்களைக் கழுவிக்கொள்ளலாம்.

விஷ்ணு கோயில்கள்

விஷ்ணு கோயில்களில் கோபுரத்துக்குட்சென்று கொடிமரம், பலிபீடம், கருடன் இருக்குமிடத்தில் வணங்கி, தாயார் சந்நிதி தனியாக இருக்குமிடங்களில் தாயார் சந்நிதிக்குச்சென்று வழிபடவேண்டும். பின்பு வலம்வந்து ஆண்டாள் சந்நிதி தனியே இருக்கும் இடங்களில் ஆண்டாளை வழிபட்டு, பின்னர் மூலஸ்தானத்திலுள்ள பெருமாள் சந்நிதிக்குச் சென்று வணங்கவேண்டும். தீர்த்தப் பிரசாதம் வாங்கும்போது தீர்த்தம் கீழே சிந்தாமல் மேல்துண்டையோ, வஸ்திரத்தையோ அடியில் வைத்து வலது கையில் வாங்கவேண்டும். சடாரி சாத்தும்போது தலைவணங்கிக் கைகூப்பிப் பெற்றுக் கொள்ளவேண்டும். இராமர் சந்நிதி, ஆஞ்சநேயர் சந்நிதி, வேணுகோபாலர் சந்நிதி, விஷ்வக்சேனர் சந்நிதி, சக்கரத்தாழ்வார், ஆழ்வாராதியர், ஆச்சாரியர்கள் முதலியோர் சந்நிதிகள் தனியே இருக்குமிடங்களில் அங்கெல்லாம் சென்று வழிபடவேண்டும். அதன்பின் கோயிலை மீண்டும் ஒருமுறை வலம்வந்து வெளியே வரவேண்டும். கூடுமானால் நாலுபிரதட்சிணங்களும் செய்யலாம். குறைந்தது இரண்டு பிரதட்சிணங்களாவது செய்தல் வேண்டும்.

சில சிவாலயங்களில் விஷ்ணு சந்நிதிகளும், விஷ்ணு ஆலயங்களில் சிவ சந்நிதிகளும் இருக்கின்றன. விஷ்ணு சந்நிதியுள்ள சிவாலயங்கள்:—

1. சிதம்பரம் (கோவிந்தராஜப் பெருமாள்)
2. கச்சியேகம்பம் (நிலாத்துண்டப் பெருமாள்)
3. காஞ்சி காமாட்சி கோயில் (திருக்கள்ளவனூர்)
4. திருவோத்தூர் (ஆதிகேசவப் பெருமாள்)
5. திருச்செங்குன்றூர் (,,)
6. திருநணா—பவானி (,,)
7. திருப்பாண்டிக்கொடுமுடி (அரங்கநாதர்)
8. சிக்கல் (கோலவாமனப் பெருமாள்)
9. திருநாவலூர் (வரதராஜப் பெருமாள்)
10. திருநெல்வேலி (நெல்லை கோவிந்தர்)
11. திருப்பழனம்
12. திருப்புத்தூர்
13. திருவக்கரை
14. திருமுதுகுன்றம்
15. திருவண்ணமலை
16. திரு இராமேசுவரம்
17. திருச்செந்தூர்
18. ஆத்தூர் (திருநெல்வேலி மாவட்டம்)
19. பேரூர்
20. காஞ்சி குமரகோட்டம்
21. சென்னமல்லேசுவரர்—சென்னகேசவர்
22. திருப்பரங்குன்றம் முதலியன.

விஷ்ணு கோயில்களில் சிவன்கோயில்கள் இருப்பவை

1. திருக்குறுங்குடி
2. திருக்கோஷ்டியூர்
3. உத்தமர்கோயில்
4. கம்பராயப் பெருமாள் கோயில், கம்பம் முதலியன.

அறநிலையத்துறை ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

27-12-59	ஆதிகும் பேசுவரர் கோயில் கும்பகோணம்	கும்பகோணம் வட்ட கோயில்கள்— திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு.
29-12-59	கரவந்தீசுவரர் கோயில், உடையார் கோயில்	பாபநாசம் வட்ட கோயில்கள்— திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு.
29-12-59	பஞ்சநதீசுவரசுவாமி கோயில் திருவையாறு	திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு.
31-12-59	காளகத்தீசுவர சுவாமி கோயில் திண்டுக்கல்	,, ,, ,,
2- 1-60	திருமறைநாத சுவாமி கோயில் திருவாதவூர்	,, ,, ,,
2- 1-60	மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மதுரை	திருப்புகழ்க் கல்வெட்டுத் திறப்பு விழா.
3- 1-60	நன்மை தருவார் கோயில் மதுரை	திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு.
3- 1-60	திருமூலநாத சுவாமி கோயில் தென்கரை மதுரை மாவட்டம்	,, ,, ,,
3- 1-60	ஏடகநாத சுவாமி கோயில் திருவேடகம் மதுரை மாவட்டம்	தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா.
8- 1-60	கலியுக வரதராஜப் பெருமாள் கோயில் கல்லக்குறிச்சி	திருப்பாவைக் கல்வெட்டுத் திறப்பு விழா.
8- 1-60	அரங்கநாதசுவாமி கோயில் திருவரங்கம்	திருப்பாவை—திருவெம்பாவை மாநாட்டை கனம் அறநிலையத்துறை அமைச்சர் துவக்கி வைத்தல்.
9- 1-60	தாயுமானசுவாமி கோயில் திருச்சிராப்பள்ளி	,, ,, ,,
9- 1-60	சாமவேதீசுவரர் கோயில் திருமங்கலம் திருச்சிராபபள்ளி மாவட்டம்	ஆனயநாயனர் பற்றிய சேக்கிழார் பாடல் கல்வெட்டுத் திறப்பு விழா.
13- 1-60	சுப்பிரமணியசுவாமி கோயில் பரமக்குடி	திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு.

விருதுநகர் ஸ்ரீ சொக்கநாதசுவாமி கோயிலில் 11-1-60 அன்று, மதுரை ஆதீனகர்த்தரின் தலைமையில் பாவை மகாநாடு நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்ட உதவி ஆணையர் திரு. பி. அரங்காச்சாரி அவர்களும், ஷி மாவட்ட ஏரியாக்கமிட்டி அங்கத்தினர்குழுத் தலைவர் திரு. சங்கரபாண்டிய நாடார் அவர்களும் கலந்துகொண்டனர்.



சிவாயமலை

(இரத்தினகிரி - வாட்போக்கி)

மாறு கொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்கு
ஊறிஊறி உருகுமென் னுள்ளமே

—திருநாவுக்கரசர்.

காலையில் கடம்பந்துறை கோயிலை வழிபட்டவர்கள் கடும்பகலில் வாட்போக்கியை வணங்க வேண்டும், மாலையில் திருஈங்கோய் மலையைத் தரிசிக்க வேண்டும் என்பது மக்களால் பண்டு தொட்டே போற்றப் பெற்று வருகிறது. இதனால் "காலைக்கடம்பர், மத்தியானச்சொக்கர், அந்தித் திருவேங்கிநாதர்" என்ற பழமொழியும் வழங்குகிறது. சிவாயமலை அல்லது ஐயர்மலை என்று இப்போது வழங்குவதே வாட்போக்கி என்ற பாடல் பெற்ற சிவத்தலம். இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து மணப்பாறைக்குச் செல்லும்சாலையில் ஆறுகல் தொலைவிலுள்ளது. பஸ் மூலமாக இவ்வூரை யடையலாம். தங்குவதற்கு நால்வர் குருபூசை மடம் என்ற ஒன்றிருக்கிறது.

சிவாயமலை, ஐயர்மலை, இரத்தினகிரி, இரத்தினசலம், இரத்தினவெற்பு, மணிகிரி, வாட்போக்கி முதலிய பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. ஓம் என்னும் பிரணவ எழுத்தைப் போலும் திருவைந்தெழுத்தைப் போலும் படிகளும் பிரகாரங்களும் அமைந்திருப்பதால் சிவாயமலை என்ற பெயர் ஏற்பட்டது. மலையில் ஒருபுறம் கீழே சமண முனிவர்கள் படுக்கைகள் கல்லில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பஞ்சபாண்டவர்மலை அல்லது ஐவர்மலை என்று வழங்கி, இப்போது

ஐயர்மலை என்றே மக்கள் அழைக்கின்றனர். ஆரியமன்னன் ஒருவனுக்கு இறைவன் இரத்தினம் கொடுத்த காரணத்தால் இரத்தினகிரி முதலிய பெயர்களும், ஆரிய மன்னன் பெருமான் முடி மீது வாளை வீசித்தழும்பு உண்டாக்கியதால் வாள்போக்கி என்னும் பெயரும் வழங்கலாயின. கல்வெட்டுக்களில் திருமாணிக்கமலை என்ற பெயர் குறிக்கப்படுகிறது.

இரத்தினகிரி என்ற மலை வெகு செங்குத்தாய் வானுற நிமிர்ந்து நிற்கும் காட்சி வெகு தொலைவு வரையில் தெரிகிறது. அதன் மேல்கோயில் அமைந்திருப்பது ஒரு கோட்டைபோல் தோன்றும். மலையடிவாரத்தில் ஊரில் திருக்குளம் இருக்கிறது. படிகள் ஏறும் இடத்தில் பெரிய மண்டபம் இருக்கிறது. அதில் கருப்பண்ணர், வைர மேகப் பெருமாள், கோடங்கி நாயக்கர் இவர்கள் சந்நிதிகள் உள்ளன. மலையின் உயரம் 1178 அடி. சுமார் 1000 படிகள் ஏறி உச்சியை அடைய வேண்டும்.

அடிவாரத்திலிருந்து மலையேறும் இடத்தில் முதலில் ஒரு பெரும் உருண்டைப்பாறையின் மேல்பாகத்தில் ஒரு விநாயகர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விநாயகருக்குப் பூசை செய்தால் மழை பெய்யும் என்று சொல்லப்படுகிறது. கொஞ்சம் மேலே பொன் விடும்பாறை என்ற பாறை இருக்கிறது. மேலே மலையேறிச் சென்ருல் சத்தமாதர் கோயில் இருக்கிறது. அது பெரும் மலைப் பாறைப் பிளவுக்கிடையில் உள்ளது. அப்பாறைகளின் இரு பகுதிகளையும் ஒன்று சேர்த்தால் நன்ருக இசைந்துவிடும். இதற்குப் பக்கத்தில் வசந்த மண்டபம் இருக்கிறது. மலை உச்சியை அடைவதற்குச் சற்று கீழே அம்பாள்கோயில் கிழக்கு நோக்கி இருக்கிறது. அதற்கு முன்னல் விநாயகர் சந்நிதியிருக்கிறது. அம்மன் கோயில் உள்ளே ஒரு பிரகாரம் உண்டு. வெளியில் தலவிருட்சமான வேப்பமரம் இருக்கிறது. அம்பிகைக் கோயிலிலிருந்து சுமார் 70 படிகள் ஏறிச் சென்ருல் சுவாமி கோயிலை யடையலாம். மேல் பிரகார மண்டபம் வட்டமாக இருக்கிறது. அதை ஓங்கார மண்டபம் என்கின்றனர். சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. சுவாமி சந்நிதிக்குக் கீழே ஒரு பிரகாரமும், மேலே ஒரு பிரகாரமும் சங்குச் சுழிபோல் அமைந்திருக்கின்றது. மேல் பிரகாரத்தில் விநாயகர், முருகன், வைரமேகப் பெருமாள், நடராஜர், ஆரிய மன்னன் முதலியோர் சந்நிதிகள் இருக்கின்றன. கீழ்ப்பிரகாரத்தில் அறுபத்து மூவர் எழுந்தருளியுள்ளனர்.

மலைமேல் வீற்றிருக்கும் பெருமானுக்கு இரத்தினகிரீசர், வாட்போக்கிநாதர், இராசலிங்கம், முடித்தழும்பர், மலைக்கொழுந்தீசர், சொக்கர் முதலிய திருநாமங்கள் உண்டு. இறைவியின் திருநாமம் சுரும்பார்குழலி என்பது. கல்வெட்டுக்களில் பெருமானுக்கு திருமாணிக்கமலை உடைய நாயனுர், திருமாணிக்க மகாதேவர் என்றும், தேவிக்கு ஹரலட்சேஸ்வரி என்றும் பெயர்கள் காணப்படுகின்றன.

இத்தலத்தின் தீர்த்தம் காவிரி. ஆறு கல் தொலைவிலுள்ள குளித்தலையிலிருந்து நாள்தோறும் ஐந்து பண்டாரங்களும் ஒரு வைணவ அந்தணரும் குடங்களில் காவிரி நீரைக்கொண்டு வருகின்றனர். அதையே மலைமேல் மூர்த்திகளுக்கு திருமஞ்சன நீராகப் பயன்படுத்துகின்றனர். இம்மலையைச் சுற்றி சிவாயதீர்த்தம், இந்திரதீர்த்தம், வாயு தீர்த்தம், நாகதீர்த்தம், சூரியதீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், உரோமசதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், துர்க்காதீர்த்தம் என்ற ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. ஊர் நடுவேயுள்ள தெப்பக்குளமே சிவாய தீர்த்தம் அல்லது பஞ்சாட்சரதீர்த்தம் என்பது. மலைமேல் சுனைகளும் இருக்கின்றன.

ஆரியமன்னன் ஒருவனுடைய மணிமுடி மறைந்துவிட்டது. நல்லமணியைத் தேடி இப்பதியை யடைந்தான், இறைவன் ஒரு அந்தணன்போல் தோன்றி ஒரு தொட்டியைக் காட்டி அதில் காவிரி நீரை நிறைக்கச் சொன்னுன். எவ்வளவு நீரைக்கொட்டியும் தொட்டி நிறையவில்லை. கோபங்கொண்ட மன்னன் அந்தணன் முடியில் வாளால் வெட்ட அவன் மறைந்தான். அவ்வெட்டு சிவலிங்கத்தின் மீது பட்டுத் தழும்பு உண்டாயிற்று. அரசன் வாளைப் போக்கித் தன் முடியில் வாளின் தழும்பு ஏற்படச் செய்ததால் தலத்திற்கு வாட்போக்கி யென்றும், பெருமானுக்கு முடித்தழும்பர் என்றும் பெயர்கள் வந்தன.

காஞ்சிப்பதியிலிருந்த ஆயர்குலத்தினர் ஒருவர் தன் தங்கைக்கும் மைத்துனனுக்கும் குழந்தை பிறந்தால் தன் தலையைத் தருவதாக இத்தலத்திறைவன்முன் உறுதி பூண்டார். அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. ஆயரும் உறுதி கூறிய வண்ணமே இத்தலத்தில் தன் தலையைப் பலியாகக் கொடுத்தார். அவரையே இப்போது வைரமேகப் பெருமாள் என்று மக்கள் வழிபடுகின்றனர். அவர் உருவம் மலைமேலும் மலையடிவாரத்திலும் இருக்கிறது. மலைமேல் அவர் முன்பு துப்பாக்கிகளும் இருக்கின்றன. அவரே மலைக்குக் காவல் தெய்வமாக மக்கள் கருதுகின்றனர்.

ஒரு காலத்தில் 11 வணிகர்கள் தாங்கள் வாணிகம் செய்துவந்த தொகையை இங்கு கொண்டு வந்து பதினொரு பிரிவாகப் பிரித்தார்கள். 12 பங்குகள் காணப்பட்டன. பல முறை செய்தும் அவ்வாறே காணப்பட்டது. இறைவன் மனித உருவில் தோன்றி தனக்கு ஒரு பங்கு கொடுத்தால் பிரித்துக் கொடுப்பதாகச் சொல்ல, வணிகர்களும் இசைந்தனர். இறைவன் பிரித்துக் கொடுத்து ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மறைந்தனர். அதுமுதல் அவ்வகுப்பினர் பன்னிரண்டாஞ் செட்டியார்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

அபிஷேகத்திற்குக் கொண்டுவந்த பால் குடத்தைக் காகம் கவிழ்க்க, அது எரிந்து போய்விட்டது. ஒரு. எல்லை உயரத்திற்கு மேல் இம்மலையருகே காகம் பறப்பதில்லை. ஆதலின் 'காகம் அணுகாமலை' என்று இம் மலைக்குப் பெயர்.

இப்பதியில் சித்திரை மாதம் பெருவிழா நடைபெறுகிறது. தைப்பூசத்தில் கடம்பந் துறைக்குச் சென்று சுவாமி காவிரியில் தீர்த்தம் கொடுத்துவிட்டு மறுநாள் திரும்பி வருகிறது. பங்குனி உத்திரத்தில் குளித்தலையிலுள்ள தெப்பக்குளத்திற்குத் தெப்ப விழாவிற்காக இங்கிருந்து எழுந்தருளி காட்சி கொடுத்துவிட்டு மறுநாள் திரும்புவதுண்டு.

திருநாவுக்கரசர் பத்துப் பாடல்களையுடைய திருக்குறுந்தொகைப்பதிகம் ஒன்று அருளியுள்ளனர். ஒவ்வொரு பாடலிலும், எமதூதர் வருமுன்னர் வாட்போக்கியாரை வணங்குங்கள் என அறிவுரை கூறுகின்றார். 'பார் முழுதாய்' என்று தொடங்கும் திருத்தாண்டகத்தில் "வாட்போக்கி அம்மானை எம்மானென்று" கூறியிருக்கிறார். அருணகிரிநாதர் மூன்று திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். 'ஆசைநாலு' என்று தொடங்கும் பாடலில் 'காசி இராமசுரம் இரத்தினகிரி சர்ப்பகிரி' என்று சொல்கிறார். மற்ற இரண்டு பாடல்களிலும் இரத்தினவெற்பு, மணிக்கிரி என்று கூறியிருக்கிறார். திருவாரூர்-வைத்தியநாத தேசிகர் முதலியோரால் இயற்றப் பெற்ற 'திருவாட் போக்கிப்புராணம்' என்ற நூலில் நைமிசச் சருக்கம் முதல் பொன்னிடும் பாறைச் சருக்கம் வரையில் 14 சருக்கங்களில் இத்தலமகிமை கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர் பெயர் தெரியாத இரத்தினகிரி உலா என்ற நூலும் இத்தலத்தைப் பற்றியதே. அது 408 கண்ணிகளையுடையது. அதில் மலைச்சிறப்பு, மூர்த்திப் பெருமை, பிற செய்திகள் சொல்லப்படுகின்றன. திரிசிரபுரம் — மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வாட்போக்கிக் கலம்பகம் என்ற அரிய நூலை இயற்றியுள்ளார்கள். அது 100 பாடல்களையுடையது. அதில் ஒரு பாடல் பின்வருமாறு:—

ஆனவனு காதவனென்
　　றன்புடையார் பாலரயா
னுனவனு காதவனே
　　நானுக உட்குறிக்கும்
கோனவன்மு னுகியல்லாக்
　　கோமான்மா ணிக்கமலை
வானவன்சீர் பாடாதார்
　　வாயென்ன வாயே
மலைக்கொழுந்தென் றுரையாதார்
　　வாயென்ன வாயே.

வாட்போக்கி மலைக்குத் தெற்கே ஒன்றரை கல்தொலைவில் சிவாயம் என்ற ஊர் இருக்கிறது. கோபுரமுடைய பெரிய பழைய சிவன்கோயில் அங்கு இருக்கிறது. சுவாமி பெயர் சிவபுரீசர்; அம்பிகை பெயர் பெரிய நாயகி.

இரத்தினகிரியிலும், சிவாயம் கோயிலிலும் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இரத்தினகிரி மலைப்படிக்கட்டுகளிலும், அம்மன்சுவாமி கோயில்களின் கர்ப்பக்கிரகச்

சுவர்களிலும், விநாயகர் கர்ப்பக்கிரகச் சுவர்களிலும், அம்மன் பிரகாரச்சுவர் வெளிப்புறத்திலும், மலைமேலுள்ள ஒரு பாறையிலும் கல்லெழுத்துக்கள் காணப்படுகின்றன. இராஜகம்பீர வள நாட்டுக் குறுநாகை நாட்டினுள்ள திருமாணிக்கமலை, வாள் போக்கி என்று குறிக்கின்றன. இறைவனை திருமாணிக்கமலை உடைய தம்பிரானார், வாட்போக்கிமலை மகாதேவர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது. படிக்கட்டுகள், மண்டபங்கள் முதலிய திருப்பணிகளுக்கும், தை, மாசித் திருவிழாக்களுக்கும், மார்கழித் திருவாதிரைக்கும், காவிரியிலிருந்து திருமஞ்சன நீர்கொண்டு வருவதற்கும், எழு நூற்றுவர் மடத்தில் தேவரடியார், சிவயோகிகள், தபசிகள் முதலியவர்களுக்கு உணவளிக்கவும், திருப்பள்ளியறை நம்பிராட்டியார், திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார், தட்சிணமூர்த்தி இவர்களின் உருவச்சிலைகள் எடுப்பிக்கவும் பொன், நிலம் முதலியவைகள் வழங்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன. சோழ மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், ஹொய்சன அரசர்கள், விஜயநகர வேந்தர்கள் முதலிய பலர் ஆட்சிக்காலத்திய கல்வெட்டுக்கள் அங்கே காணப்படுபவை.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

—அருணகிரிநாதர்.

திருத்தம்

1959 அக்டோபர் 'திருக்கோயில்' இதழில் 'விநதாசுதவாகனம்' என்ற கட்டுரையில் பதினொரு கருடசேவை என்ற பகுதியிலுள்ள கோயில் மூர்த்திகளின் பெயர்களைக் கீழ்க்காணுமாறு வாசிக்கவும் :

1. மணிமாடக் கோயில்—நந்தாவிளக்குப் பெருமாள்
2. வைகுந்த விண்ணகரம்—வைகுந்தநாதன் (தாமரைக்கண்ணுடையபிரான்)
3. அரிமேய விண்ணகரம்—குடமாடுங்கூத்தர்
4. வண்புருடோத்தமம்—புருடோத்தமன்
5. செம்பொன் செய்கோயில்—பேரருளாளன்
6. திருத்தெற்றியம்பலம்—செங்கண்மால்
7. திருமணிக்கூடம்— மணிக்கூடநாயகன்
8. பார்த்தன்பள்ளி—தாமரையாள்கேள்வன்
9. திருக்காவளம்பாடி—கோபாலகிருஷ்ணன்
10. திருவெள்ளக்குளம்—நாராயணன்
11. திருத்தேவனார்தொகை—தெய்வநாயகப்பெருமாள்

—ஆசிரியர்.

சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சிவதீக்கை

வேதம் ஓதுதற்கும் வைதிக ஒழுக்கம் மேற்கொண்டு நடத்துதற்கும் தகுதியை உண்டுபண்ணுவது பூணூல் அணிவிப்பதாகிய உபநயனச் சடங்கு. அவ்வாறே, சைவத் திருமுறைகளை ஓதுதற்கும் சைவ ஒழுக்கம் மேற்கொண்டு ஒழுகுதற்கும் தகுதியை உண்டுபண்ணுவது சிவதீக்கை ஆகும்.

தீக்கையாவது உயிர்க்குப் பாசத்தைக் கெடுத்து மெய்யுணர்வை ஏற்றுக் கொள்ளும் செவ்வியைப் பயக்கும், முதல்வனது கிரியா சத்தியின் தொழிற்பாடு எனக் கொள்ளப்படுகின்றது. தீக்ஷா என்னும் சொல்லில் தீ என்பது **கொடுத்தல்** எனவும், க்ஷா என்பது **கெடுத்தல்** எனவும் பொருள்படும். இது முதல்வன் செய்யும் ஐந்தொழில்களுள் அருளல் என்பதன் பாற்படும்.

முதல்வனால் தரப்படும் தீக்கையாகிய இவ்வருட்செயல் **நிராதாரம், சாதாரம்** என இருவகைப்படும். மூவகைப்படும் உயிர்களுள் மூலமலம் ஒன்றே உடைய விஞ்ஞானகலர்க்கு முதல்வன் அவர்தம் உயிர்க்குயிராய் நின்றவாறே மலசத்தியைக் கெடுத்துத் தன்னையுணரும் மெய்யுணர்வைத் தோற்றுவிப்பன். மலம், கன்மம் என்னும் இரண்டாலும் கட்டுற்று நிற்கும் பிரளயாகலர்க்கு முதல்வன் நாற்றோளும் கறைக்கண்டமும், சடைமுடியும் முதலிய திருவடையாளம் உள்ள தனது அருட்டிருமேனி காட்டி, திருநோக்கு, பரிசம், உரை என்னும் மூன்றாலும் மலங்கெடுத்து மெய்யுணர்வு அளிப்பன். இங்ஙனம் இவர்களுக்கு முறையே தன்மையிலும் முன்னிலையிலும் நின்று, வேறு ஓர் ஆதாரத்தைக் கொள்ளாது, முதல்வன்தானே செய்யும் அருட்செயல் நிராதார தீக்கை எனப்படும். தேவார ஆசிரியர்கள் மூவருக்கும் முதல்வன் அருளிய முறை நிராதார தீக்கையே ஆகும்.

இனி, மலம், கன்மம், மாயை என்னும் மூன்றனும் கட்டுப்பட்ட சகலர்க்கு, முதல்வன், தன்னால் நிலவுலகில் நிறுவப்பட்ட திருக்கயிலாய பரம்பரையில் இடையறவுபடாதுவரும் உபதேசத்தோடு உண்மையநுபவமும் உள்ள ஞான ஆசாரியனை இடமாகக் கொண்டு செய்வதே சாதார தீக்கை எனப்படும். ஆதாரம்—இடம். திருவாதவூர் அடிகளுக்கு முதல்வன்தானே வந்து அருள்செய்தது உண்மையே யாயினும், சாதார தீக்கையின் இயல்பை மக்கள் உணர்ந்து கடைப்பிடித்தற் பொருட்டு, அதற்கு உரிய முறையால் அருள் செய்யப்பட்டது என்பது மரபு.

சாதார தீக்கை ஏழு வகைப்படும். அவை திருநோக்கு, பரிசம், உரை, பாவனை, சாத்திரம், யோகம், ஔத்திரி என்பவை ஆகும்.

1. இவற்றுள் திருநோக்கு என்பது, மீன் தன் சினையை நோக்கி அதிலிருந்து தன் குஞ்சை வெளிவரச் செய்யுமாறுபோல், ஆசிரியன் தன் அருள் நோக்கத்தால் மாணக்கனைப் பாசபந்தத்திலிருந்து விடுவித்தல்.

2. பரிசமாவது, கோழி தன் முட்டையைச் சிறகால் பரிசித்துக் குஞ்சை வெளிவரச் செய்தல் போல், ஆசிரியன் சிவசொரூபமாகப் பாவிக்கப் பெற்ற தன் திருக்கையை மாணக்கன் முடியில் வைத்து, அவனைப் பாசப்பிணிப்பிலிருந்து விடுவித்தல். திருவடியை முடியில் வைத்தலும் இதன்கண் அடங்கும்.

3. உரையாவது திருவைந்தெழுத்து முதலிய மந்திரங்களைப் பொருளுடன் உபதேசித்தல். இது வாசக தீக்கை எனவும்படும்.

4. பாவனையாவது, ஆமை தன் முட்டையை மனத்தால் நினைத்து உதவுதல் போல, ஆசிரியன் மாணுக்கனைச் சிவமாக நினைத்தருளல். பாவனை—நினைவு.

5. சாத்திர தீக்கையாவது சித்தாந்த சாத்திரங்கள் வாயிலாக முப்பொருள் இயல்பை உளங்கொளச் செய்து அவ்வாற்ருல் அகவிருள் தீர்த்தல்.

6. யோகமாவது மாணுக்கனது ஆன்மாவை யோக நெறியால் தன் உயிர்ப்போடு சேர்த்துக்கொண்டுபோய், தன் முடியின்மேல் துவாதசாந்தத் தலத்துள்ள பரஞ்சோதியுடன் ஒன்றுவித்துத் தூய்தாக்கி, மீளவும் மாணுக்கன் இதயத்தில் நிறுவுதல். இதனை மாணுக்கனை யோகம் புரியும்படி பயில்வித்தல் எனக் கூறி விளக்குவாரும் உளர்.

இவை ஆறும், தனித்தனி, மாணுக்கர்கள் பக்குவங்களுக்குத்தக்கபடி செய்யப்படும்போது, சுதந்திரம் எனப்படும். அவ்வாறன்றிப் பின் கூறப்படும் ஔத்திரி தீக்கைக்கு அங்கமாகவும் இவற்றுள் ஒன்றும் பலவும் செய்யப்படும்.

7. ஔத்திரி எனப்படுவது குண்டமண்டலங்களோடு கூடிய ஓமத்தோடு செய்யப்படுவது. ஹோத்திரம்—ஓமம்; ஹோத்திரத்தோடு கூடியது ஹௌத்திரி அல்லது ஔத்திரி.

இறுதியிற் கூறப்பட்ட ஔத்திரி சமயம், விசேடம், நிர்வாணம் என மூவகைப்படும்.

(அ) சமய தீக்கையாவது வேள்விச்சாலை அமைத்து, தீயுருவாய் விளங்கும் முதல்வனை மாணுக்கன் வழிபடும்படி செய்து, அவனை ஓமத்தால் தூய்மைப்படுத்துவது. இதனுல், அவன் திருவைந்தெழுத்து எண்ணுதல் முதலிய சரியை நெறி நிற்றற்குத் தகுதியுடையோன் ஆவன். "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்னும் திருவாக்கின்படி இறைவன் திருப்பெயரைக் கேட்டுச் சிந்திக்கும் வாய்ப்பு அளித்தலின், இத்தீக்கை மந்திராதிகாரை எனப்படும்.

(ஆ) விசேட தீக்கையாவது சமய தீக்கை பெற்ற மாணுக்கனைச் சிவபுத்திரன் ஆகச் செய்வது. இதனுல், "மூர்த்தி அவனிருக்கும்வண்ணங் கேட்டாள் பின்னை" எனவும், "அவனுடைய ஆரூர்கேட்டாள் பெயர்த்தும்" எனவும் எழுந்த திருவாக்கின்படி, இறைவன் ஐம்பெருமனுக்களால் உருக்கொண்ட நிலையைக்கருதி ஒழுகும் கிரியைக்கும், அவன்நெஞ்சக்கமலத்தை இடமாகக் கொண்டருளும் நிலையைக் கருதியொழுகும் யோகத்திற்கும் மாணுக்கன் தகுதியுடையவன் ஆகின்ருன். திருமுறைகள் முதலிய அருணூல்களை ஓதுதல், அவற்றின் நுண்பொருள்களைச் சிந்தித்தல் முதலியவை ஞானபூசை எனப்படுதலின், அவற்றுக்குரிய தகுதியும் விசேட தீக்கையால் வருவது எனவே கொள்ளப்படும். இக்காரணம்பற்றி இத்தீக்கை அர்ச்சனதிகாரை, யோகாதிகாரை என்னும் பெயர்களால் வழங்கப்படும்.

(இ) நிருவாண தீக்கையாவது சரியை கிரியாயோகங்களில் வழுவாது நின்ற மாணுக்கனுக்கு அவன்றன் சஞ்சிதகன்மத்தை வறுத்தவிதைபோல வலியிழக்கச் செய்து, மூலமலத்தின் வலியையும் நீக்கி, முப்பொருள் பற்றிய மெய்யுணர்வைப் பொது வகையால் விளங்கச் செய்வது. இது சைவ சாத்திரங்களின் உண்மைப் பொருளின் ஆராய்ச்சிக்குத் தகுதியைத் தருவது. இத்தீக்கை பெற்ருேர் மேற்கொள்ளும் நெறி ஞானநெறி ஆகும். இவர் தாமும் சிவபூசையினையும் யோகப்பயிற்சியினையும் கடைப்பிடித்து ஒழுகற்பாலர்.

மேற்கூறிய சமயம், விசேடம், நிருவாணம் என்னும் ஔத்திரியின்வகை மூன்றும் தனித்தனி நிர்ப்பீசம், சபீசம் என இருவகைப்படும். உபதேசிக்கும் மந்திரங்களை பீச அக்கரங்களின்றி உணர்த்துவது நிர்ப்பீசம். இது சமய ஆசாரங்களை முற்றிலும் ஓம்பி ஒழுக முடியாதவர்களுக்குச் செய்யப்படுவது. மந்திரங்களைப் பீசங்களுடன் உணர்த்துவது சபீசம் எனப்படும்,

சமய வழிபாடு நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்ருகப் பகுக்கப்படும். நித்தியம் என்பது அன்ருடம் மாருமல் செய்து வரும் அநுட்டானம், பூசை முதலியவை ஆகும். நைமித்திகம் எனப்படுவது நித்தியத்

தில் ஏற்படும் குறைவு தீர்தற் பொருட்டு விசேட காலங்களில் சிறப்பாகச் செய்யும் வழிபாடு. காமியம் என்பது சிற்சில பயன் களைக் கருதி நூல்களில் விதித்தபடி அவ் வப்போது செய்யும் வழிபாடு. இவற்றுள் நிர்ப்பீசதீக்கை உடையார் நித்தியம் ஒன் றற்கே உரியர், ஏனைச் சபீசதீக்கை உடை யார் நித்தியம், நைமித்திகம், காமியம் என் னும் மூன்றனையும் செய்தற்கும் செய்வித்தற் கும் உரியவர். இக்காரணம்பற்றி நிர்ப்பீச தீக்கை நிரதிகாரரை எனவும், சபீசதீக்கை சாதி காரரை எனவும் கூறப்படும். ச + அதிகாரை— அதிகாரத்தை உடன்கொண்டது. நிர் அதி காரை—அதிகாரத்தைக் கொள்ளாதது.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

என்னும் திருக்குறளில் பூசனை என்றது நித் தியத்தையும்; சிறப்பு என்றது நைமித்திகத்தை யும் குறித்தல் நினைக்கத்தக்கது. காமியத் தைத் திருவள்ளுவர் நைமித்திகத்தில் அடங் கக் கொண்டமை உணரத்தக்கது.

சைவ ஆசாரியர்

மேற்கூறிய மூன்று தீக்கைகளையும் சபீ சமாகப் பெற்றுச் சைவ நூல் உணர்வும் சைவ ஒழுக்கமும் குன்றாதவராய், ஆசாரிய அபிடேகமும் பெற்றோரே சைவ ஆசிரியர் ஆவர். இவை யெல்லாம் உடைய சிவவேதி யர் திருக்கோயில்களில் பரார்த்த வழிபாடு செய்தற்கு உரியர் என்பது சைவ ஆகமங் களின் துணிபு.

சைவர்க்கு உரிய இன்றியமையாத சிறப் பொழுக்கம்

"எவ்வுயிரும் நீங்கா(து) உறையும்
இறைசிவனென்(று)
எவ்வுயிர்க்கும் அன்பாய் இருத்"தலும்

சிவசின்னங்கள் அணிந்து கொள்ளுதலும், திருவைந்தெழுத்து எண்ணுதலும், திரு முறை ஓதுதல், மெய்கண்ட நூற்பொருள் கேட்டல், சிவபூசை, சிவத்தியானம் முதலி யவையும், குருலிங்க சங்கம வழிபாடும் சைவ ராவார் அனைவரும் மேற்கொண்டு ஒழுக வேண்டிய ஒழுக்க நெறி ஆகும்.

(1) எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தல் :

இஃது எல்லோருக்கும் உரிய பொது ஒழுக்கமே ஆயினும், சைவர்க்குத் தனிச் சிறப்பைத் தருவதாக உள்ளது. கொல் லாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை என்பவை இவ்வொழுக்கத்திற்கு அடையாள மாக உடனிகழ்வன ஆகும். புலால் கலவாத உணவைச் சைவ உணவு என்றலும், புலால் உண்ணாத அனைவரையும் சைவர் எனப் பொதுப்பட வழங்கும் வழக்கும் இதனை வலி யுறுத்தும்.

(2) சிவசின்னம் :

திருநீறும் கண்டிகை (உருத்திராக்கம்) யும் சிவநெறியினர் உடம்பில் அணிந்து கொள்ளும் சிவசின்னங்கள் ஆகும். சின்னம்- அடையாளம், குறி.

(அ) இவற்றுள் திருநீறுவது நல்ல ஆவின் சாணத்தைச் சிவாக்கினியில் மந்திரங்கள் சொல்லி இட்டுத் தகித்தலால் கிடைக்கும் பொடி. இதில் வெண்ணிறம் உடையதே அணியத்தக்கது. விபூதி, பசிதம், பஸ்மம், க்ஷாரம், ரக்ஷை என்னும் வடமொழிப் பெயர் கள் இதன் பெருமையை உணர்த்துவனவாய் வழங்குவன. விபூதி-விசேஷமான ஐச்வரியம். பசிதம்—ஒளியைத் தருவது, பஸ்மம்-பாவங் களை நீற்றுவது. க்ஷாரம்-ஆபத்தை நீக்குவது, ரக்ஷை - அச்சம் நீக்கிக் காப்பது.

திருநீற்றை அணியும்போது "சிவ, சிவ" என்னும் மனுவையோ, ஈசானம் முதலாகக் கூறப்படும் ஐம்பெருமனுக்களையோ (பஞ்சப் பிரஹ்ம மந்திரங்கள்) உச்சரித்து அணிதல் வேண்டும். இது குழந்தைகளுக்குக் காப்பு (ரக்ஷை) ஆகவும் அணியப்படும்.

திருநீற்றுக்காப்பு ஞான அனலால் எரிக்கப் பட்ட பசு மல நீக்கத்தில் விளங்கும் சிவத்துவப் பேற்றிற்கு அறிகுறி ஆகும். இதன் மேன்மை திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருநீற் றுப் பதிகத்தால் அறியத்தக்கது. "பராவணம் ஆவது நீறு" என அதன்கண்வரும் இருக்கு (தொடர்) கருதத் தக்கது,

(ஆ) இனி, கண்டிகை என்பது உருத்தி ராக்கமணி. தேவர்கள், ஒருகாலத்தில், திருக் கயிலை முதல்வன் முன் சென்று, திரிபுரத் தசுரர்களால் தங்களுக்கு நிகழ்ந்த துன்பங்

களை விண்ணப்பித்துக் கொண்டார்கள். அப்பொழுது, தேவர்கள் மாட்டு முதல்வனுக்கு இருந்த பேரிரக்கம் காரணமாக, அவன்றன் மூன்று திருக்கண்களினின்றும் நீர் பெருகிற்று. அந்நீரில் தோன்றியவை உருத்திராக்கமரமும், அதன்கண்மணியும் - என்பது புராணவுரை.

கண்டிகையைப் பூணுதல் உயிர்களுக்கு மும்மலங்களால் வரும் துயரங்களைக் களைதற்கு முதல்வனுடைய திருக்கண்களில் தோன்றும் திருவருளைப்பெறும் அருட்பேற்றிற்கு அறிகுறியாகும். அக்கமணிபூண்டு நீரில் முழுகும்போது, அம்மணியிற் பட்டு உடம்பில் விழும் நீர் கங்கையின் புனிதநீருக்குச் சமம் எனக் கருதப்படுகின்றது.

3. திருவைந்தெழுத்து எண்ணுதல்

"நமச்சிவாய வாஅழ்க!" என்னும் திருவாசகத் தொடரில் எழுவாயாக நிற்கும் பெயர் திருவைந்தெழுத்து எனப்படும். இது பிரணவத்தின் வேறொரு வடிவாயுள்ளது எனவும், எல்லா மந்திரங்களுக்கும் மூலமாவது எனவும், நால்வேத முடிபுணர்த்தும் மகாவாக்கியங்களுள் வைத்து மகாவாக்கியமாவது எனவும், பெரியோர்களால் கருதப்படுகின்றது. இது பெரும்பெயர், சிவமூலமந்திரம், திருநாமம் என்று குறிக்கப்படுகின்றது.

"வணக்கம் சிவனுக்கு" என்பது இதன் பொருள். ஆயினும், மெய்கண்ட நூல்கள் இம் மறைமொழியைச் சைவசித்தாந்தப் பொருணிலை முழுவதையும் இணைத்துக்காட்டும் ஒருவார்த்தை எனக்கொண்டு உரைக்கின்றன. இக்கருத்துத் திருமந்திரத்திலும் உள்ளது.

இவ்வாறு கருதுமிடத்து ந என்பது மூவகைப் பாசத்தைத் தொழிற்படுத்தும் முதல்வனது திரோதான சக்தியைக் குறிக்கும். மாயை கன்மங்கள் இதன்கண் அடங்கும். ம என்பது மூலமலத்தைக் குறிக்கும். ய உயிரைக் குறிக்கும். வா முதல்வனது சொரூபமாகவும் குணமாகவும் உள்ள திருவருள் ஒளியைக் குறிக்கும். சி என்பது அத்திருவருளுக்கு முதலாக உள்ள, மெய்யுணர்ந்தோர்க்கு அனுபவப்படும் தூய பேரின்பவடிவச் சிவனைக் குறிக்கும்.

இப் பெரும்பெயர் அருளாசிரியன் மாணுக்கனது ஆன்ம வளர்ச்சி நிலைகண்டு அறிவுறுத்தும்வரிசைமுறை, எழுத்துக்களின் எண்ணிக்கை என்பவற்றில் ஏற்படும் வேறுபாடுபற்றித் தூலம், நுட்பம், அதிநுட்பம், பிராசாதம் எனப் பல வடிவங்களில் அறிவுறுத்தப்பெற்று எண்ணப்படும்.

அவற்றுள் ஒரு வடிவம் "நானேயோ! தவம் செய்தேன்; சிவாய நம எனப் பெற்றேன்" என்னும் திருவாசக மறையில் வருவது. இதில் நம என்பது முதல்வன் உயிரைப் பிறப்பிறப்புக்களுட் செலுத்தி நிற்கும் ஊன நடனத்தைக் குறிக்கும்; சிவா என்பது அவன் அதனைப் பிறவிக்கடலில் இருந்து எடுத்து, வீட்டு நெறிக்கண் உய்க்கும் ஞான நடனத்தைக் குறிக்கும். ய இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்டு, பிறப்பு நெறிநோக்காது ஞான நெறியில் நோக்குள்ளதாய் நிற்கும் பக்குவ ஆன்மாவைக் குறிக்கும்.

"ஊன நடனம் ஒருபால், ஒருபாலா
ஞானநடம், தான்நடுவே; நாடு"

—(திருவருட் பயன்)

என்பது இக்கருத்தை உணர்த்தும் பாட்டு. இவ்வாறு சாதகனது ஆன்மவளர்ச்சி நிலைக்கு ஏற்ப ஓது நிலைகள் பலவுள்ளன. அவை உபதேச முகத்தால் பெறத்தக்கவை. "ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம்" என்னும் திருமுறை சிந்திக்கத் தக்கது.

சைவத்துள் கூறப்படும் ஞானபாதப் பொருள்நிலையை ஒரு தேமா மரம் என உருவகித்துக் கொண்டால், அம்மரம் முழுவதையும் ஒருங்கே நுட்பமாக அடங்கக் கொண்டுள்ள விதையே திருவைந்தெழுத்து. திருவருளே அவ்விதைக்கு ஆதாரமாகியநிலன்; மெய்யன்பே நீர்; அருணூல்கள் மரம்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை முறையே அரும்பு, மலர், காய், கனி. அக்கனியின் சாறும் தீஞ்சுவையும் முடிநிலைப் பயனைக் கூறப்படும் துரிய அருணிலையும், துரியாதீத ஆனந்தநிலையும் ஆகும் எனக் கூறலாம்.

4. குருலிங்க சங்கம வழிபாடு

முதல்வன் 'அங்கிங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் அருளொடு நிறைந்து' உள்ளவன். ஆயினும், அவன் உயிர்களுக்குத் தன்னை விளக்கி அணுக்கமாக இருந்து, அவ்வுயிர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள்புரியும் இடங்கள். (1) அகத்தே உயிரும், (2) புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளும், ஆசாரிய வடிவம், மெய்யன்பர் திருவேடமும் ஆகும். இறைவன் எங்கெங்கும் பாலில் நெய்போல மறைந்து நிற்பன்; ஆயினும் மேற் குறித்த இடங்களில் தயிரில் நெய்போல விளங்கி நின்று உயிர்களுக்கு அன்பு விளை தற்குக் காரணமாய் இருப்பன். இவ் வடிப் படை உண்மையிலிருந்துதான் திருக்கோயில் வழிபாடும், ஆசான் வழிபாடும், மெய்யன்பர் வழிபாடும் எழுந்தன.

(அ) **திருக்கோயில் வழிபாடு:** திருக் கோயில் வழிபாடு சைவத்தில் மேற்கூறிய அடிப்படை உண்மையாலும், சமயகுரவர்கள் அருளாணையாலும் முதன்மையும் தனிச் சிறப் பும் உடையதாகும். சிவநெறித் தலைவர்கள் நால்வரும் திருக்கோயில் வழிபாட்டைச் சிவ நெறியின் உயிர்க்கொள்கை எனத் தமது மெய்யுணர்வால் கண்டு, அநுட்டித்தும், அறி வுறுத்தியும் உள்ளனர். பொதுவாக இந்து சமய வரலாற்றிலும், சிறப்பாகச் சிவநெறி வரலாற் றிலும் திருக்கயிலை முதல் எண்ணப்படும் சிவபிரான் திருக்கோயில்கள், அன்றும் இன் றும் இனி என்றென்றும், மக்கட்கு உரிய கடவுள் மெய்ந்நெறி, பண்பாடு, கலை, நாகரி கம், ஒழுகலாறு, இலக்கியம் முதலிய வாழ் வியலின் மையமாக உள்ளது என்னும் உண்மை உணரத் தக்கது.

பழைமையாக உள்ள திருக்கோயில்கள் எல்லாம் மக்களால் அமைக்கப்படாமல், முதல்வன், தானே மக்கட்கு அருள்புரிதற் பொருட்டு முற்பட்டு விளங்கித் தோன்றிய அருள்நிலைத் தானங்களாக இருத்தல் அவற் றின் பழைய வரலாறுகளால் விளங்குகின் றது. திருவாதவூர் அடிகள் அருளிச்செய்த கீர்த்தித் திருவகலும், மூவர்கள் அருளிச் செய்த க்ஷேத்திரக் கோவை முதலிய திருப் பதிகங்களும் இவ்வுண்மையை வலியுறுத்து வன ஆகும். மகப்பேறு உள்ள ஒருத்திக்கு, கருவுயிர்த்தபின் மகவுக்கு உண்பித்தற்குரிய தாய்ப்பால், அதற்கு முன்னரே அவள் உடம் பில் அமைவது இயற்கை நியதி. அந் நியதிப் படி, எண்ணிறந்த உயிர்களைத் தன்மாட்டுத் தோற்றி வளர்க்கும் நிலமகட்கும், அவ்வுயிர் கள் மெய்யறிவு பெற்றபின், முதல்வன்றன் திருவருளைப் பெற்று நலன் உறுதற்கு, அவ் வருள் சுரக்கும் அருணிலைத் தானங்களாக இயற்கை முதல்வனுல் அமைக்கப் பெற்ற வையே புண்ணியத் தலங்கள் என்பது சிவ நெறித் தலைவர்களது ஒத்ததுணிபு. இதனுல், நம்மனோர் இறைவனை ஒருவாறு விளங்கக் கண்டு அன்பால் வழிபட்டு உய்தற்குத் திருக் கோயில்களே சிறந்த இடங்கள் ஆகும் என் பது விளங்கும். மெய்யுணர்ந்த முத்தான் மாக்களும் தமது மெய்யுணர்வு காரணமாக இவ்விடங்களில் இறைவனை நேர்படக்கண்டு அன்பினுல் இன்பம் ஆர்ந்துவருதல் வரலாற்று உண்மை. திருக்கோயில் வழிபாடு உடை மையே மெய்யுணர்வின் அடையாளம் ஆகும் என மெய்கண்ட தேவர் அறுதியிட்டுக் கூறு கின்றுர்.

திருக்கோயிலின் அமைப்பும், ஆங்கு நிகழும் வழிபாட்டு முறை முதலியனவும் சிவாகமங்களால் அறியத்தக்கன.

திருக்கோயிலில் மூலக் கருவறையில் உள்ள சிவலிங்கத் திருமேனி சோதிப் பிழம் பாகிய பதிப்பொருளைக் குறிக்கும். முன் சிவலிங்கத்தை நோக்கி நிற்கும் இடபதேவர் வடிவம் தருமதேவதையையும், அறநெறியின் பயனுக மெய்யுணர்வு எய்திய சுத்தான்மாவை யும் குறிக்கும். பலிபீடம் சுத்தான்மாவை அகன்று நிற்கும் பாசத்தைக் குறிக்கும்.

அம்பலவாணர் திருவுருவம் திருவைந் தெழுத்தால் அமைந்து, அவர்தம் அற்புதக் கூத்து ஐந்தொழிலைக் குறிக்கும். திருவாசி ஓங்காரத்தையும் அதன்கண் உள்ள ஐம்பத் தொரு சுடர்கள் அவ் வெண்ணிக்கையுள்ள மாத்ருகாக்கரங்களையும் குறிப்பன ஆகும். அம்பலவாணர் திருமேனி ஆனந்தத்தையும், நிருத்தசபை துரிய அருணிலைத் தானத்தை யும் குறிப்பன.

சோமாஸ்கந்தத் திருவுருவம் வசிய என் னும் முத்திபஞ்சாக்கரத்தின் உருவகமாகும். இவ்வாறு திருக்கோயிலில் உள்ள பிறவும்

வேதாகமப் பொருள் முடிபுகளின் உருவக மாக அமைந்திருத்தல் கருதி உணரத்தக்கது.

முடிவுரை

இதுகாறும் உரைத்தவற்றிலிருந்து ஒரு கருத்து விளங்குதற்கு உரியது. சிவநெறி பிற நெறிகளில் உள்ள நல்லன எல்லாவற்றையும் திருந்தத் தன் அகத்தே இணைத்துக் கொண்டுள்ளதோடு, அவற்றில் அடங்காத பேருண்மைகளையும் விளக்குவதாக உள்ளது என்பதே அது. மேலும் இந்நெறி தனிப்பட்ட மக்களின் மன உணர்ச்சி நிலைகளைப் பற்றி எழுந்த சமயம் அல்லது மதம் என்னும் அளவில் நின்றுவிடாது, அறிவியல் முறை ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறந்த தத்துவக் கொள்கையாகவும் உள்ளது என்பது உணரத்தக்கது. இதன்கண் கொள்ளப்படும் முதல்வனுகிய உருத்திர சிவன் சமயத் தெய்வமாக மட்டுமின்றி வேதாந்தங்களுள் முடித்துக் கூறப்படும் முதற்பொருளாகவும் இருத்தல் மேற்கூறிய வாறு பற்றியும், சுவேதாசுவதரம் முதலிய உபநிடதங்களானும் விளங்கக் கூடியது,

இன்னும், பல சமயங்களிலும் முடிநிலையாகக் கூறப்படும் ஞானநெறி (தத்துவக் கொள்கை) வேருகவும், அதனை அடைதற்கு உபாயமாகக் கூறப்படும் ஒழுக்கம், உபாசனை முதலியவை வேருகவும் அமைந்து, ஞான நெறி எய்தினேர் கர்மம் உபாசனை என்பவற்றை விடுவர் எனக் கூறுவது இயல்பாக உள்ளது. ஆயின், சிவநெறியில் கிரியையும், பத்திநெறியும், ஞானநெறியும் ஒன்ருேடொன்று இணைந்து இயைந்து படிமுறையால் பயன் தருவனவாய் அமைந்திருத்தல் கருதத்தக்கது. இக் கருத்துப் பற்றியே வேதாந்த சித்தாந்த சமரசநிலை நின்ற தாயுமான அடிகள்,

"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமய சங்கே தப்பொருளும் தானென்ருகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்ட(து) இல்லை;
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்த போது அங்கு
என் மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்ப"

என வியந்து கூறுவார் ஆயினர். இதில் எல்லாம் வெளியே என்றது எல்லாம் வெளிப்படை எனவும் எல்லா அடையாளங்களும் திருவருள் விளக்கமாகவே உள்ளன எனவும் இரு பொருள்படும்.

சமய அநுட்டானத்தில், முதற்கண் செய்யப்படும் அத்திரசந்தி கன்மமலநீக்கம் குறித்தும், பின் இயற்றப்படும் ஆசமனம் மாயாமலத்தூய்மை குறித்தும், அதன்பின் செய்யப்படும் திரு நீறணிதல், கரநியாசம் அங்க நியாசம் என்பவை மூல மலநீக்கமும் சிவத்துவ விளக்கமும் குறித்தும், நிகழ்வன ஆம். இவ்வாறே பிற கிரியைகளும் மந்திரம் பாவனை என்பவற்ருேடு இயைத்துக் காணும்போது சன்மார்க்கம் எனப்படும் ஞானநெறியோடு ஒத்து, அதற்கு நிமித்தமாக இருத்தல் இவ்விடத்துச் சிந்தித்தற்கு உரியது.

இவ்வாறு தமிழ்ப் பெருமக்களுடைய மெய்ந்நெறிக் கொள்கை, சமயம், பண்பாடு, கலை என்பவற்றின் இணைப்பு நிலையாக உள்ள சிவநெறியும், அதன் உயிர் நிலையாக உள்ள திருக்கோயில், திருமடம் என்பவையும் தம் பண்டைய சீரும் வீறும் குன்ருமல், இக்காலத்து நமக்குக் கிடைத்துவரும் பொருட்டுறை சமுதாயத்துறை பற்றிய புதுக் கருத்துக்களை ஏற்குமாறு கொண்டு நடந்து உலகில் தீதகன்று நன்மை பெருக அம்மையப்பர் திருவருள் முன்னிற்க!

முற்றிற்று.

செட்டிகுளம், ஸ்ரீ ஏகாம்பரேசுவரர், தண்டாயுதபாணிசுவாமி கோயிலில் அருள்நெறித் திருக்கூட்டம் மூன்ருவது ஆண்டுவிழா 29-12-59 தேதி நடைபெற்றது.

சோளசிம்மபுரம், ஸ்ரீ இலட்சுமி நரசிம்மசுவாமி கோயிலில் "திருவத்யயனேத்சவம்" 30-12-59 முதல் 19-1-60 முடிய சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ வைஷ்ணவம்

(பி. ஸ்ரீ)

வாய்மொழி முதல்வன் (திருவாய் மொழியின் ஒருவித்து)

சங்க இலக்கியங்களில் ஒன்முகிய பரிபாடலில் 'வாய்மொழி' என்ற சொல் வேதம் என்ற பொருளில் வழங்கப்படுவதைக் காண்கிருேம். "வாய் பேசுவதுதானே மொழி: வாய்மொழி என்று கூறுவதில் என்ன சிறப்பு இருக்கிறது?" என்று இன்றைய தமிழ் வாசகர்களில் சிலர் கருதவும் கூடும். சிறப்பு இருக்கத்தான் செய்கிறது; 'வாய்மொழி' என்ருல் வாய்மை+மொழி — அதாவது சத்தியமான சொல். சத்தியமான சொல்லே, செய்தியே, வேதம்.

வாய்மொழி வாய்மைதான்

தமிழ்க் கிறிஸ்தவர்கள் 'சத்திய வேதம்' என்றும் தங்கள் பைபிளைக் குறிப்பிடுவது பலரும் அறிந்ததே. இந்துக்களுக்கோ வேதம் என்ருலே சத்தியம். 'சத்தியம் என்ருல் வேதம்' என்று கூடக் கருதுவது பொருந்துவதுதான். கடவுளே உண்மை என்று பக்தர்கள் கூறுவதை அறியாதார் யார்? உண்மையே கடவுள் என்று காந்தியடிகள் கூறுவதும் பிரசித்தமல்லவா? மெய்ப்பொருளான சத்தியத்தின் மூலப் பொருளான — கடவுளைப்பற்றி பேசுவதால் வேதத்தை வாய்மை மொழி என்கிருர்கள். அதாவது சத்தியமான பேச்சு என்று குறிப்பிடுகிருர்கள். வேதம்=வித்தை, சத்திய வித்தை.

இந்த உலகமெல்லாம் மெய்ப்பொருளாகிய கடவுளின் ஆணைக்குப் பணிந்து நடப்பதாகப் பரிபாடலின் முதற்செய்யுள் தெரிவிக்கிறது. இப்படிக் கூறுவதற்குச் சான்ருக வேதத்தைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த வேதத்தை,

நாவல் அந்தணர்
அருமறைப் பொருளே

[நாவல் அந்தணர் - நாவன்மை வாய்ந்த அருளாளர்களான முனிவர்கள்.]

என்கிறது பரிபாடல். இந்த அருமறையைத் தான் 'வாய்மொழி' என்றும் இந்நூல் குறிப்பிடுகிறது. நாவலர்களான அந்தணுளர்க்கெல்லாம் உரிய அருள்மொழி, சத்தியவித்தை வேதம்.

உண்மையான வித்தையை வேதம் என்றும், உண்மைப் பொருளை வேதமுதல்வணுகிய கடவுள் என்றும் தெரிவிக்கும் பரிபாடலின் முதற்பாடல், இந்த உண்மைப் பொருள் திருமால் என்றும் தெரிவிக்கிறது. இந்தத் திருமாலை 'வாய்மொழி முதல்வன்' என்றும் குறிப்பிடுகிறது. இந்த வாய்மொழி முதல்வனின் வரலாறுதான் என்ன?

ஒரு கொள்கையின் இரு பகுதி

மயக்கமற்ற ஆராய்ச்சியுடைய முனிவர்களுக்கும் இந்த வரவு அல்லது வரலாறு தெளிவாக அறிந்து கொள்ள இயலாதது என்கிருர் பரிபாடலின் முதற்பாடலை இயற்றிய ஆசிரியர். இவர் இன்னுரென்பது இன்று தெரியவில்லை.

தெருள நின்வரவு அறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே

[தெருள - தெளிவாக, நின்வரவு - உன்னுடைய வரலாறு. மருள் அறு - மயக்கம் அற்ற. தேர்ச்சி - ஆராய்ச்சி. முனைவர் - முனிவர்.] என்பது பெயர் தெரியாத—பெயர் விழையாத—இப்புலவர் பெருமானின் வாக்கு.

மயக்கமற்ற தேர்ச்சியுடைய முனிவர்களும் தெளிவாக அறிந்துகொள்ள முடியாத வேதப்பொருள் இத்தகைய முனிவர்கள் வாயிலாகவே உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது என்பது பேரறிவாளர்களின் கருத்து. கவித்துவ சக்தியுள்ள வேதரிஷிகள் தங்கள் உள்ளொளியால் (அறிவால் அல்ல, ஆராய்ச்சியால் அல்ல) அருமறைப் பொருளை அறிந்து கொண்டனர் என்பது கருத்து. வேதரிஷிகள் 'ஆவேச பீடங்க'ளாக அமைந்து அறிவுக்கு எட்டாத உண்மைகளைக் கண்டார்கள் என்பது குறிப்பு. இந்தவிதமாகத்தான் 'வாய்மொழி முதல்வ'னையும் நமக்கு உணர்த்த முயல்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

வேதமும் இறைவனை அறிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகின்றது என்றே பக்தர்கள் கூறுகிறார்கள். திருமாலின் அடியார்களும் சிவனடியார்களும் இப்படியே சொல்லி வருகிறார்கள். சிற்றறிவினராகிய சாதாரண மக்கள் மட்டுமல்ல, மயக்கத்தை அறுத்துக் கொண்ட ஆராய்ச்சி அறிஞர்களான முனிவர்களும் இறைவனுடைய பேராற்றல் கொண்ட பெருமைகளை எடுத்துரைக்க வல்லவர்கள் அல்லர், வேத மந்திரங்களைக் கண்டு உலகத்திற்குக் காட்டும் முனிவர்களும் இறைவனுடைய பெருமைகளை யெல்லாம் எடுத்துரைக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள் அல்லர்: இது நமது பக்தி மதத்தின் பெருங் கொள்கைகளில் ஒன்று. ஆனால் இது இக்கொள்கையின் ஒரு பாதிதான்.

இதன் மறுபாதி எது?—தெரிய வேண்டாமா? அத்தகைய பெருமைகளை யுடைய இறைவன் மெய்யன்பர்களான அடியவர்களுக்கு இரங்கி வந்து அருள் புரிகின்றான். இது கடவுளுண்மையின் மகத்தான ஒரு பகுதி. தத்தம் ஆற்றலுக்கு ஏற்றவாறு மெய்யன்புடன் இறைவனை வழிபடுகிறவர்கள் 'அவனை நாம் எப்படி அறிய முடியும்?' என்று கவலைப்பட வேண்டியதில்லை. அவனே இரங்கி வந்து—இறங்கி வந்து என்பதும் பொருந்தும்—அருள்புரிவான் என்று உறுதியாக நம்பலாம். அன்பர்களுக்கு அன்பாகவும் அருளாகவும் விளங்குகிறவன் என்கிறது பரிபாடலின் முதற்பாட்டு.

இன்பமும் துன்பமும் (வேத போதம்)

இறைவனுடைய அருள் அன்பர்களுக்கு இன்பமாகத்தான் வெளிப்படும் என்பதும் இல்லை: துன்பமாகவும் வெளிப்படும்! ஏன்? நம்முடைய அன்பிற்கு உரியவர்கள், காதலுக்கு உரியவர்கள், நமக்குத் துன்பம் செய்தாலும் நாம் அதை வெறுப்பதில்லை. அப்படியே இறையருளால் ஏற்படும் துன்பத்தை தையும் அன்பர்கள் வெறுப்பதில்லை. விரும்புகிறார்கள் என்று கூடச் சொல்லலாம். இறைவன் துன்பம் செய்வதை இறையருளின் சோதனை என்கிறார்கள். இது நன்மையே தருவதாகும், இது நம்மையும் நமது அன்பையும் சுடச்சுட ஒளிவிடும் தூய ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கம் ஆக்கும் என்பது மெய்யன்பர்கள் துணிவு.

துஷ்ட அசுரர்களை இறையருள் அழிப்பது கூட அருளின் விளைவுதான், எனவே அது மறக்கருணை என்கிறார்கள். இந்த மறக்கருணை அசுரர்களையும் தீயோரையும் திருத்த மட்டும் உபயோகப்படுகிறது என்று கருதுவதற்கு இடமில்லை; தவறான வழியில் செல்லும் அன்பர்களை வழிப்படுத்தவும் பயன்படுகிறது என்று கருதலாம். இது அன்பர்களைச் சோதிக்கவும் பயன்படுகிறது எனலாம்.

இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலும் புரிகின்றானல்லவா? அளித்தலைப்போல் (இரட்சித்தலைப் போல்) அழித்தலும்அருளின் விளைவுதானே? அழித்தல் இல்லாவிட்டால், மரணம் இல்லாவிட்டால், விடுதலை ஏது? முக்திதான் எங்கே? இத்தகைய எல்லா நலன்களும் பொருந்திய குற்றமற்ற அறிவைத் தருகின்றது வேதம் அல்லது வாய்மொழி என்பர்.

வாய்மொழிப் புலவன் யார்?

இந்த வேதம் அல்லது வாய் மொழியை இயற்றிய புலவர்கள் வேதரிஷிகளே யாவர் என்று இன்றைய ஆராய்ச்சிப் புலவர்கள் கருதுகிறார்கள். ஆனால் வேதங்களை உரைத்த புலவன் இறைவன்தான், திருமால்தான் என்கிறது பரிபாடலின் முதற்பாட்டு,

> **வாய்மொழிப் புலவ நின்**
> **தாள்நிழல் தொழுதே**

என்பது பரிபாடலின் முதற்பாட்டின் இறுதி அடி.

வேதத்தின் ஆசிரியன் ஒரு புலவன் அல்லன்; பல புலவர்களும் ஆசிரியர் அல்லர்;

இறைவனே வேதம் சொன்ன ஆசிரியன், வேதரிஷிகள் இறைவன் சொன்னதைச் சொன்னவர்களே! இந்தக் கருத்தை வெளியிடுவதுதான் 'வாய்மொழிப் புலவ!' என்ற விளி.

பரிபாடலின் இரண்டாம் பாடலிலும் வேதம் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். குற்றமற்ற சிறந்த கொள்கைகளை யுடைய உயர்ந்தவர்களால் ஆராயப்படுகின்ற வேதம் என்றும் அழியாதது என்ற கருத்தை இங்கே காண்கிறோம். எனவே வேதம்,

கெடுவில் கேள்வி

என்று இங்கே குறிக்கப்பெறுகின்றது. எழுதப்படாமல் கேள்வியாக வந்ததுதானே வேதம்? வேதரிஷிகளே 'வாய்மொழிப் புலவ'னைக் கேட்டுத் தெரிந்துகொண்டதுதானே?

ஒரு பெருங் கொள்கை

இத்தகைய வேதம் திருமாலைப்பற்றி வெளியிடும் ஒரு பெருங் கொள்கையையும் இப்பாட்டின் முற்பகுதியில் காண்கிறோம். அதாவது, இவ்வுலகத்து உயிர்கள் எல்லாவற்றிலும் அவற்றின் நடுவில் ஒருவர்க்கும் தெரியாமல் திருமால் நிறைந்திருக்கிறான் என்பது தான். இதை அதிசயத்திற்குரிய சிறப்புக்களில் ஒன்று என்று குறிப்பிடுகிறது இப்பரிபாடல்.

இறைவன் இப்படி எங்கும் நிறைந்திருப்பதால், உயிர்களையெல்லாம் ஒன்றாக இணைத்துக் கொண்டிருப்பதால், 'உயிர்க்குலம் ஒன்றே' என்ற தனிப்பெருங் கொள்கை உறுதிப்படுகிறது. 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்ற தத்துவப் பெருங்கொள்கையும் உறுதிப்படுகிறது. இப்பெருங்கொள்கையிலேதான் உலக சகோதர தர்மத்திற்கு உறுதியான அடிப்படை கிடைக்கிறது. இது இந்து சமயம் சிந்தனையுலகத்திற்குத் தந்திருக்கும் ஒரு வரப்பிரசாதம் என்று மேலைநாட்டுப் பேரறிஞர்களில் சிலரும் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்கள்.

முதுமொழி முதல்வன்

பரிபாடலின் மூன்றாவது பாட்டிலே வேதம் 'மாயா வாய்மொழி' என்று சிறப்பித்துப் பேசப்படுகிறது. என்றும் அழியாது விளங்கும் சத்தியத்தை வெளியிடுவது என்பது பொருள். இந்த மாயா வாய்மொழி தான் தத்துவ நூல்களுக்கெல்லாம் தாய் என்பது குறிப்பு. இந்த மாயா வாய்மொழியை 'முதுமொழி' என்றும் இப்பாடல் குறிப்பிடுகிறது. 'முதுமொழி' என்றால் மிக மிகப் பழமை வாய்ந்த சொல். இப்பாட்டு முதுமைக்கும் முதல்வனாகிய திருமாலை,

முதுமொழி முதல்வ!

என்று அழைப்பதையும் காண்கிறோம்.

முதல்வனும் சாமவேதமும்

முதுமொழி முதல்வன் பல துறையாக விரிந்து பரந்துகிடக்கும் வேத ஆகமங்கள் என்ற எத்தகைய பழமையான மொழிகளாலும் அறியப்படாதவன் என்றும் இப்பாட்டல் தெரிவிக்கிறது. இந்த வேத முதல்வனே அமரர்க்கு முதல்வன் என்றும், அசுரர்களுக்கும் முதல்வன் என்றும் இப்பாட்டு அறிமுகப் படுத்துவதையும் காண்கிறோம். இம்முதல்வனுக்கு விருப்பு வெறுப்புக்கள் இல்லை.

இவன் காலங்களுக்கும் முதல்வனாக இருக்கிறான் என்று கூறும் இப்புலவர் வாக்கிலே, திருமாலின் சிறப்புக்கள் பலவற்றையும் சாமவேதம் எடுத்துக் கூறுகிறது என்ற கருத்தையும் காண்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்திலே சாமவேத சாரமாக உள்ளது நம்மாழ்வாரின் திருவாய்மொழி என்று வைணவர்கள் கூறுவதை நாம் நினைவூட்டிக் கொள்ளலாம்.

முதுமொழியான வேதத்தில் மந்திரமாக இருப்பவன் திருமால் என்றும் இப்புலவர் கூறுகிறார். 'மந்திரம்' என்ற சொல்லுக்கு 'மனனம் செய்பவனைக் காப்பது' என்று பொருள். மந்திரத்தை இங்கே 'மறை' என்று சிறப்பித்துப் பேசுகிறார் இவர். பொதுவாக மறை என்றால் வேதம்; சிறப்பாக மறை என்றால் வேத மந்திரம். தொல்காப்பியரும் மந்திரத்தை 'மறைமொழி' என்பர்.

இசையும் இடியும்

பரிபாடலின் 13-ஆம் பாட்டிலே, திருமால் வேதங்களால் கூறப்படும் நல்ல புகழை

உடையவன் என்று வருணிக்கப்படுவதையும், வேதங்கள் ஓதுவதற்கு இனியவை என்று குறிக்கப்படுவதையும் காண்கிறோம். திருமாலுக்கு உரிய அருளின் காரணமாகப் பிறந்த சொல் வலம்புரிச் சங்கு போலவும் வேத கோஷம் போலவும் முழங்குகிறது என்றும் இப்புலவர் தெரிவிக்கிறார். சங்குபோல் வேதத்தின் இசை முழங்கவேண்டும் என்பது குறிப்பு.

இதே புலவர், தர்மாவேசம் என்ற கோபத்தின் காரணமாகப் பிறக்கும் இறைவனது சொல் (குரல்) இடிமுழக்கம்போல் முழங்குகிறது என்றும் தெரிவிக்கிறார். இந்த இரட்டைக் குரலையும் கேட்பது ஞானிகளின் செவிதான்.

'மயர்வற மதிநலம் அருளப்பெற்ற' ஞானிகளின் செவி என்றே கூறலாம். மற்றவர் செவிகளோ அருளின் தெய்வக் குரலையும் கேட்பதில்லை, தெய்வத்தின் கோபக் குரலையும் கேட்பதில்லை. சங்குபோல் முழங்கினால் என்ன, வேதகானம் போல் இசைத்தால் என்ன, இடியாக முழங்கினால்தான் என்ன?- எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான்!

வேதப் புகழ்

பரிபாடலின் 15-ஆம் பாட்டில் வேதம் 'நாம வாய்மொழி' என்று குறிக்கப்படுகிறது. புகழோடு கூடிய வாய்மொழி என்று பொருள்.

நலம்புரீஇ அஞ்சீர்
நாம வாய்மொழி

என்பது இளம்பெரு வழுதியார் என்ற இப் புலவரின் வாக்கு.

தன்னுடைய நன்மையை விரும்பியே (நலம்புரீஇ) வேதம் திருமாலின் சிறப்பை வெளியிடுகிறதாம். திருமாலின் சிறப்பை வெளியிடுவதால் வேதம் நலம்பெற்று அழகிய சிறப்பையும் பெற்றிருக்கிறதாம். 'தேன் பொருந்திய பசுமையான துளசிமாலையை அணிந்துள்ளவன்' என்பது முதலாகப் பல படியாக வேதம் திருமாலைப் புகழ்ந்து பேசுகிறது என்கிறார் இப்புலவர்.

வேதப் பெருவழி

வேதம் காட்டும் வழியிலேயே தாமும் இறைவனைப் புகழ்ந்து வணங்குவதாகத் திருமாலிருஞ் சோலையைப் பாடும் இப்புலவர் கூறியுள்ளார். இறைவனுடைய வாக்கு சத்தியமானது என்பதற்கு வேதமுதல்வன் மாலை அணிந்திருப்பதை ஒரு நினைவுக் குறியாகக் கருதலாம். துளசி பசுமையானது போல் சத்தியமும் என்றும் பசுமையானது தான். தேன் பொருந்திய (கள் அணி) துளசி என்பது கவனிக்கத்தக்கது தேன் அருள் அல்லது அஹிம்ஸை. உணர்விற்கு நினைவுக் குறியாகலாம். அருளுணர்வுடன் கூடிய சத்தியமே இறைவன் காட்டும் பெருவழி என்ற குறிப்பை இப்பாட்டில் கண்டு கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

வேதநெறி தழைத்தது

தொல்காப்பியச் செய்யுள் இயல் 121-ஆம் சூத்திரத்தின் உரையில் உரையாசிரியர்கள் இருவர் மேற்கோளாகக் காட்டியிருக்கும் பரிபாடற் பகுதியொன்று திருமாலைக் குறிப்பிடுகிறது. இருந்தையூர் என்ற திருப்பதியிலுள்ள திருமாலை இச்செய்யுள் குறிப்பிடுவதைக் காண்கிறோம். 'இருந்தையூர் இறைவனே! உன் ஊரின் மற்றொரு பக்கத்தில் தருமத்திலிருந்து தவறாத மக்கள் வாழும் நகரம் ஒன்று இருக்கிறது என்றும், அந்த நகரில் வேதங்கள் கூறும் ஒழுக்கநெறியில் மாறுபடாத அந்தணர்கள் நிறைந்திருக்கிறார்கள் என்றும் இப்பாடல் தெரிவிக்கிறது.

இப்பாட்டில் 'வேதம்' என்ற பெயரையும் காண்கிறோம்; வேதம் கேள்வி (சுருதி) என்ற பெயரால் குறிக்கப்படுவதையும் காண்கிறோம்.

ஒருசார்—அறத்தொடு வேதம்
புணர்தவம் முற்றி,
விறல்—புகழ் நிற்ப,
விளங்கிய கேள்வித்
திறத்தின் திரிவில்லா
அந்தணர் ஈண்டி,
அறத்தின் திரியாப்பதி

[ஒருசார்-ஒரு பக்கத்தில். வேதம் புணர் தவம் முற்றி-வேதங்களில் சொல்லப்படுகிற தவத்தையும் முற்றுப்பெறச் செய்து. விறல் புகழ்-வெற்றியமைந்த புகழ். நிற்ப-நிலேத்து நிற்க. கேள்வித் திறத்தின் - வேதத்தில் சொல்லியிருக்கும் ஒழுக்க நெறியில். திரி வில்லா-மாறுபடாத. ஈண்டி - நிறைந்து. அறத்தின் திரியாப்பதி - அறத்தினின்றும் வழுவாத நகரம்.]

என்பது இப்புலவர் வாக்கு.

இந்த நகரத்தின் ஒரு பக்கத்தில் மலே வளம் உண்டு என்கிருர். பலவகை மரங்கள் நிறைந்த காடும் உண்டு என்கிருர். இந்த நகரத்தின் நீர்வளமும் நிலவளமும் இயற்கை யழகுகளும் இப்புலவரால் வருணிக்கப்படு கின்றன. வயல்களில் உழவு நடக்கிறது; கரும்பாலேகளின் ஓசை காதில் விழுகிறது. ஒரு பக்கத்திலிருந்து வேத முழக்கங்களும் காதில் விழுகின்றனவாம்.

இந்த நகரத்திலே வயிற்றுக்கு வேண் டிய உணவுப் பொருள்களுடன் செவிக்கு இனிய அருமறைப் பொருளும் கிடைக்கிறது. சிறந்த ஆடைகள், சந்தனம், குங்குமம், கஸ் தூரி முதலிய வாசனேப் பொருள்கள், ஆபர ணங்கள், முத்து, பவளம் முதலானவை ஆகிய போகப் பொருள்களும் இங்கே கிடைக் கின்றன. ஞானநெறியில் செல்வதற்குரிய வசதிகளும் இங்கே காணப்படுகின்றனவாம். இத்தகைய நிலைமைக்கு அடிப்படைக் கார ணம் இந்நகரத்தில் வேதநெறி தழைத் தோங்க வைணவ பக்தித் துறையும் விளங்கி யதுதான் என்பது இப்புலவர் கருத்து.

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க' என்பதில் சைவர் குறிக் கோள் ஒன்றைக் காணலாம். வேதநெறி தழைத்தோங்க வைணவப் பக்தித்துறை விளங்கியது என்பது இப் பரிபாடற் புலவ ரின் குறிப்பு. வேதம்தான் வாய்மொழி, இறைவனது வாய்மொழி, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற முனிவர்களின் வாயிலாக வெளிப்பட்ட தெய்வ வாய்மொழி. நம்மாழ் வாரின் திருவாய்மொழி பரிபாடலில் வரும் 'வாய்மொழி'யின் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டு, பரிபாடலில் வாய்மொழி முதல்வ ஞைக் குறிக்கப்படும் திருமாலின் பரத்வ நிலேயை மேலும் தெளிவு படுத்துவதுதான்.

வேதத்தில் காணும் சத்திய வசனம், நல்ல செய்தி, திருமாலின் அருளேக் குறிப்பிடு வதுதான் என்கிறது பரிபாடலில் திருமாலேக் குறிக்கும் பகுதி. இந்த வித்திலிருந்து ஓங் கிய மகாவிருட்சம்போலத் தோன்றும் திரு வாய்மொழி,

நன்னெஞ்சே! நம்பெருமான்
நமக்(கு)அருள்தான் செய்வானே

என்ற நல்ல செய்தியைத் தமிழகத்திற்கும், தமிழகத்தின் வாயிலாக உலகத்திற்கும் தெரி விக்கிறது.

***

மதுரை, ஸ்ரீமீனுட்சி அம்மன்கோயில் இரண்டாம் பிரகாரம் கூடல் குமரர் சந்நிதியில் திருப் புகழ்க் கல்வெட்டுத் திறப்புவிழா அறங்காவலர் குழுத் தலேவர் திரு. A. சிதம்பர முதலியார் அவர்கள் தலேமையில் அறநிலேயத்துறை ஆணேயாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மதுரை செல்லூர் திருவாப்புடையார் கோயிலில் தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா 2-1-60-ல் அறங்காவலர்குழுத் தலேவர் திரு. A. சிதம்பரமுதலியார் அவர்கள் தலேமையில் அறநிலேயத் துறை ஆணேயாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது.

திருவள்ளூர், ஸ்ரீ வீரராகவசுவாமி கோயிலில் தை பிரமோத்சவம் 23-1-60 முதல் 1-2-60 முடிய சிறப்பாக நடைபெற்றது.

சென்னே, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலேயத்தின் ஆருவது ஆண்டு நிறைவு விழா 31-12-59 தேதி டாக்டர் சர். சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள் தலேமையில் சிறப்பாக நடைபெற்றது.

அறநிலையத்துறை அலுவலர் மாநாடு

சென்னை அரசாங்க அறநிலையத்துறை அலுவலர் மாநாடு, அறநிலைய அலுவல் புதுக்கட்டிடத்தில் 23—1—60, 24—1—60 இரண்டு நாட்களும் நடைபெற்றது. அறநிலையத்துறை ஆணையர், துணை ஆணையாளர்கள், ஆணையரின் உறுதுணைவர் (Personal Assistant) முதலியவர்களும், மற்றும் மாநில மாவட்டங்களிலிருந்து எல்லா உதவி ஆணையாளர்களும் கலந்துகொண்டார்கள். சென்னையிலுள்ள நிர்வாக அதிகாரிகளும், இன்ஸ்பெக்டர்களும் வந்திருந்தார்கள். 23—1—60 காலை 11-மணிக்கு அறநிலைய அமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். அப்போது அரசாங்கக் காரியதரிசி திரு. J. சிவானந்தம் ஐ. ஏ. எஸ். அவர்களும் உடன் இருந்தார்கள், அமைச்சரவர்கள், அறநிலையப் புதுச்சட்டத்தின் முக்கியாம்சங்களைப்பற்றியும், அறநிலையத் துறையினர் எப்படி அதைச் செயற்படுத்த வேண்டும் என்பதுபற்றியும் எடுத்துக்கூறி, பொதுவாகச் சில அறிவுரைகளும் பகர்ந்தார்கள். 24—1—60 மறுநாளும் சட்டப் பிரிவுகள், விதிகள் முதலியவற்றின் விளக்கங்களைப்பற்றியும் பேசப்பட்டன.

செய்திகள்

கல்லக்குறிச்சி, ஸ்ரீ கலியுகவரதராஜப் பெருமாள் கோயிலில் திருப்பாவைப் பாசுரக் கல்வெட்டுத் திறப்புவிழா 8-1-60-ல் அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன. தமிழவேள் திரு. P. T. இராஜன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

✦ ✦ ✦ ✦

சங்கரராமநல்லூர், ஸ்ரீ தாண்டவேசுவரசுவாமி கோயிலில் மார்கழித் திருவாதிரைத் திருநாள் 3-1-60-ல் தொடங்கப்பெற்று 14-1-60-ல் சிறப்பாக முடிவுற்றது.

✦ ✦ ✦ ✦

குற்றாலம், திருக்குற்றால நாதசுவாமி கோயிலில் திருவாதிரைத் திருவிழா 4-1-60-ல் ஆரம்பமாகி 13-1-60-ல் சிறப்பாக முடிவுற்றது.

✦ ✦ ✦ ✦

சங்ககிரி, அருள்நெறிக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு விழா சோமேசுவரப் பெருமான் ஆலயத்தில் 14-1-60-ல் சிறப்பாக நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

திருப்பாதிரிப்புலியூர் கருடநதிக்கரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீரஆஞ்சநேய சுவாமி கோயில் அலங்கார மண்டபத்தை சென்னை ஏ. டி. (எம்) பிரைவேட் லிமிடெட் மானேஜிங் டைரக்டர் திரு. கே. ஜே. லிங்கம் அவர்கள் சுமார் ரூ. 2,500 செலவில் கட்டிமுடிக்க ஒப்புக்கொண்டு ஷி மண்டபத்தின் கால்கோள்விழாவை 25-11-59-ல் ஷி மாவட்ட நீதிபதி திரு. கே. இராமசாமி, எம். ஏ., எம். எல்., அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஸ்ரீ வீரஆஞ்சநேய சுவாமிக்கு ஹனுமந்தஜயந்தி மகோற்சவம் 29-12-59 அன்று சிறப்பாக நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

திருமியச்சூர் ஸ்ரீ மேகநாத சுவாமி தேவஸ்தானத்தில் பிரமோத்சவம் 23-1-60 முதல் 5-2-60 முடிய சிறப்பாக நடைபெறும்.

திருக்கடம்பந்துறை—நடராஜர்

திருக்கடம்பந்துறை

(கடம்பர் கோயில்)

பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை
வண்ண நன்ம ரான்பல தேவரும்
கண்ண னும்மறி யான்கடம் பந்துறை
நண்ண நம்வினை யாயின நாசமே

—திருநாவுக்கரசர்.

“காலைக் கடம்பந்துறை, கட்டுச்சிவாட் போக்கி, மாலை ஈங்கோய்மலை” ஆகிய மூன்று தலங்களையும் ஒரே நாளில் வழி பட வேண்டு மென்று சொல்லுவர் ஆன்றோர். அதிலும் கார்த்திகைச் சோமவாரத்தில் தரிசித்தால் மிகுந்த பலன் உண்டாம். அப்படி முதலில் வழிபட வேண்டியபதி திருக்கடம்பந்துறை என்னும் சிவத்தலம். இது சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற பதிகளில் ஒன்று. இது திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில், குளித்தலைப் பகுதியி லிருக்கிறது. குளித்தலை என்ற புகை வண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கல் தொலை வில் இருக்கிறது. தங்குவதற்கு நாட்டாண் மைக் கழகப் பயணிகள் விடுதி (District Board Tourist Bungalow) இருக்கிறது.



திருக்கடம்பந்துறை — சந்திரசேகரர்

திருவாவடுதுறை மடம், பசுமடம் இவைகளும் உள்ளன.

தலத்தின் பெயர் திருக்கடம்பந்துறை என்பது இப்போது கடம்பர்கோயில் என வழங்குகிறது. கடம்பை, கடம்பவனம், தட்சிணகாசி, குழித்தண்டலை முதலிய பெயர்களும் உண்டு. கடம்பமரம் தலவிருட்சமானபடியால் கடம்பவனம் என்றும், காசிக்கோயில் கங்கைக்கரையில் வடக்கு நோக்கி யிருப்பதுபோல் காவிரிக்கரையில் இக்கோயில் வடக்கு பார்த்திருப்பதால் தட்சிணகாசி என்றும், குழிந்த சோலைகளை யுடையதால் குழித்தண்டலை (இப்போது குளித்தலை) என்னும் பெயர்கள் ஏற்பட்டன. திருமயிலாடுதுறை, திருப்பராய்த்துறை, திருப்பாற்றுறை, திருநெல்வாயிலரத்துறை என்று துறை என முடியும் ஆற்றங்கரைக் கோயில்களைப்போல் இதுவும் காவிரியாற்றின் கரையிலிருப்பதால் திருக்கடம்பந்துறை என்றாயிற்று.

கோயிலுக்கு வடக்கே காவிரியாறு ஓடுகிறது. கோயில் வடக்கு நோக்கி யிருப்பது தனிச் சிறப்பு வாய்ந்தது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. இறைவன் சந்நிதி வடக்கு முகமாக இருக்கிறது. கர்ப்பக்கிரகத்தில் இலிங்கமூர்த்திக்குப் பின்புறம் சத்த கன்னியர் உருவச் சிலைகள் உள்ளன. வெளிப்பிரகாரத்தின் வடமேற்குப் பகுதியில் தேவிசந்நிதி கிழக்கு நோக்கியிருக்கிறது. அம்பாள் சந்நிதிக்கு முன் **பரமநாதர்** உருவம் இருக்கிறது. இவரே காவல் தெய்வம். வலக்கையை நெற்றிக்கு நேரே உயர்த்தி சலாம் போடுவதுபோல் காட்சியளிக்கிறார்.

இத்தலத்து இறைவன் திருநாமம் **கடம்பவனநாதர்**. தேவியின் திருப்பெயர் **முற்றிலா முலையம்மை** என்பது. அப்பர் இத்தலத்தைப் பற்றிப் பாடிய பதிகத்தின் முதல் பாட்டில் இப்பெயர் பயிலப்பெறுகிறது.

காவிரியாறும், பிரமதீர்த்தமும் இப்பதியின் தீர்த்தங்கள். பிரமதீர்த்தம் வெளிப் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கிறது. இத்தலவிருட்சம் **கடம்பமரம்**. பிரமன் முருகன், ஏழுகன்னியர், அகத்தியர், கண்ணுவ முனிவர், தேவசன்மன் முதலியவர்கள் இங்கு இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று தலபுராணம் கூறுகிறது.

தைப்பூசத்தில் கடம்பவனநாதரும் உமாதேவியும் இடப வாகனத்தில் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுப்பர். அதே நாளில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள இராசேந்திரம், பேட்டைவாய்த்தலை, இரத்தினகிரி, கருப்பத்தூர்க்கோயில் மூர்த்திகளும், வடகரையிலுள்ள திருஈங்கோய்மலை, முசிரி, வெள்ளூர்க்கோயில் மூர்த்திகளும் எழுந்

தருளி, அன்றிரவெல்லாம் தங்கியிருந்து மறு நாட்காலையில் தங்கள் கோயிலுக்குச் செல்வர். இரவு முழுமையும் ஆடல், பாடல், சொற் பொழிவு முதலியன சிறப்பாக நடைபெறும். மேலும் இரவில் ஒரே நேரத்தில் எல்லா மூர்த்திகளுக்கும் ஆராதனை நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இக்கோயிலில் இரண்டு நடராஜமூர்த்தி களும், இரண்டு சோமாஸ்கந்தமூர்த்திகளும் இருக்கின்றன. முயலகன் இல்லாத நடராஜ மூர்த்தி பூமியின் கீழிருந்து கண்டெடுக்கப் பட்டது.

கடம்பந்துறை, இரத்தினகிரி (வாட் போக்கி), திருஈங்கோய்மலை இம்மூன்று தலங் களுக்கும் சேர்த்து வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட தலபுராணம் ஒன்று உண்டு. நைமிசச்சருக்கம் முதல் யாத்திரைச் சருக்கம்வரை அதில் உள்ளன. திருநாவுக்கரசர் இப்பதிக்குப் பத்துப் பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியுள்ளார். 'கனகப்புன்சடையான் கடம்பந்துறை நினையவல்லவர் நீள்விசும்பாள் வரே', 'காமற்காய்ந்தபிரான் கடம்பந்துறை நாமமேத்த நம் தீவினை நாசமே' என்றருளு கிறார். ஐயடிகள் காடவர்கோன் நாயனார்,

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட் டாவி
யொழுகும் பொழுதறிய வொண்ணா—கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் தென்பால்
குழித்தண் டலையானைக் கூறு

என்று க்ஷேத்திரத் திருவெண்பாவில் இத் தலத்தைப் பாடியிருக்கிறார். அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ்ப் பாடல் இயற்றியுள்ளார். அதில்,

கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குறுமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப்
பெருமாளே

என்று அகத்தியர் கமண்டலத்திலிருந்து உற் பத்தியாகி குடகுமலையிலிருந்து காவிரி ஓடி வந்த செய்தியைக் குறிக்கிறார். சிவநாமப்பல் தொடை வெண்பாவில் "தோன்றுங் கடப்பந் துறை முற்றிலா முலையை ஏன்ற கடம்பவ னேசனே" என்று கூறப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணம் வண்ணைதாமோதரம் பிள்ளை, கடம்பவன மான்மியம் இயற்றியுள்ளார். ஆசிரியர் பெயர் தெரியாத கடம்பர் கோயில் உலா என்ற நூலும் இப்பதியைப்பற்றியதே. இறைவனுக்குரிய தசாங்கங்கள் (பத்துசிறந்த பொருள்கள்) இந்நூலில் கூறப்படுகின்றன. மலை-கயிலாயம், ஆறு-காவிரி, நாடு-சோழ நாடு, நகர்-கடம்பர் கோயில், மாலை-கொன்றை குதிரை-வேதம், யானை-ஐராவதம், கொடி-இடபம், முரசு-பிரணவம், ஆணை-சூரியசந்தி ரர் நிலைபெயராது ஒழுகச் செய்யும் ஆணை இவைகளே அப்பத்துமாவன. பெருமான் உலா வருவதை "குன்றாத சீருடையான் செல் வச் சிறப்புடையான் தென்கடம்பை ஊருடை யான் போந்தான் உலா" என்று அழகுபடக் கூறுகிறது. இன்னும் காளத்தி என்பவர் இயற் றிய அந்தாதி ஒன்றும், திருவாரூர்-முத்து சாமி தீட்சிதர் பாடிய "நீலகண்டம் பஜே" என்ற வடமொழிக் கீர்த்தனமும் இத்தலத் தைப்பற்றியனவாகக் கூறப்படுகிறது.

கோயில் அருகில் வாய்க்காலுக்கு வட கரையில் திருப்பதி சுவாமிகள் என்ற பெரியா ரின் சமாதியிருக்கிறது. அவர் ஞானலோகம், வித்தியாகீதை, பத்திநெறி என்ற நூல்களை இயற்றி யிருக்கின்றார்.

கடம்பவனேசுவரர் மகாமண்டபக் கிழக் குச் சுவரில் விஜயநகர மன்னன் கிருஷ்ண தேவராயனுடைய கி. பி. 1522-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றிருக்கிறது. தென்கரை இராஜகம்பீர வளநாட்டுக் குழித்தண்டலைச் சீமையான கணபதி நல்லூர் என்று குறிக் கிறது. இறைவன் பெயர் திருக்கடம்பந்துறை யுடைய நாயனார் என்றும் காணப்படுகிறது. குரவசேரி அரங்கராசன் மகன் அனந்தாழ் வார் பிள்ளை, கோயில் திருப்பணிகளுக்கும் திருவிழாக்களுக்கும் நிலதானம் செய்யப்பட் டதை அக்கல்வெட்டு அறிவிக்கிறது.

நம்பி மூத்த பிரான்

பலராம அவதாரம்

(பி. ஸ்ரீ.)

ஸ்ரீ வைஷ்ணவப் பேராசிரியர்களில் ஒருவரான ஸ்ரீ வேதாந்த தேசிகன் தாம் அருளிச் செய்த 'தசாவதார ஸ்தோத்திர'த்தில் மீன், ஆமை, வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், ஸ்ரீராமன் என்று அவதாரங்களைக் குறிப்பிட்டுத் தோத்திரம் செய்தபின், எட்டாவது அவதாரமாகப் பலராமனைக் குறிப்பிடுகிறார். பத்து அவதாரங்களில் இராமன் என்ற பெயரால் மூன்று அவதாரங்கள் குறிக்கப் படுகின்றன.

குழந்தைக் கண்ணனும் அண்ணனும்

கண்ணனின் அண்ணன் பலராமன் என்பதைப் பலரும் அறிவர். எனவே, பலராமனை 'நம்பி மூத்தபிரான்' என்று ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் குறிப்பிடுவதுண்டு. கண்ணனும் நம்பிமூத்த பிரானும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத சகோதரர்களாக இளம் பருவத்தைக் கழித்தனர்.

பலதேவன் என்ற பலராமன் 'மொடு மொடு'வென்று முன்னே விரைந்து ஓடுவானாம். அப்படி ஓடத்தெரியாத கண்ணன் பின்னே அடியிட்டுத் தொடர்ந்து போவானாம். இந்தக் காட்சியை மனக்கண்ணால் கண்டு பாடும் பெரியாழ்வார், முன்னே ஒரு வெள்ளி மலை விரைந்தோடப் பின்னே கருமலை ஒன்று பெயர்ந்து தொடர்ந்து அடிவைப்பதுபோலத் தோன்றுகிறது என்று பொருள்படப் பாடியிருக்கிறார். 'பலதேவற்கு ஓர் கீழ்க்கன்று' என்று எவ்வளவு அருமையாகக் கண்ணனைக் குறிப்பிடுகிறாள் ஆண்டாள்!

பெரும்பாலும் கண்ணன் நம்பிமூத்த பிரானோடு சேர்ந்தே விளையாடிப் பொழுது போக்கிய போதிலும், தன்னிச்சைகொண்டு தனிமையாகக் காட்டில் திரிவதும் உண்டு என்பதை நம்மாழ்வார் வாக்கிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம். எனினும், பலராம சரித்திரத்தைப் பொதுவாகக் கிருஷ்ண சரித்திரத்திலிருந்து பிரித்துப் பேசுவதில்லை.

ஆய்ப்பாடி என்ற கோகுலத்தில் வளர்ந்து வந்த இந்தச் சகோதரர்களில் பலராமன் சாதுவாக இருந்தான்; கண்ணனே பொறுக்க முடியாத குறும்புகள் செய்து வந்தான். இக் கருத்தைத் திருமங்கையாழ்வார் பாசுரமொன்றில் காண்கிறோம். கண்ணன் 'அல்லல் விளைத்த பெருமான்'; பலராமனே அதற்கு எதிரான நிலையில் நின்றவன் என்ற கருத்தை ஸ்ரீவேதாந்த தேசிகனின் தசாவதார ஸ்தோத்திரத்திலும் காண்கிறோம்.

ஆண்டாள் அருளிய திருப்பாவையில் கண்ணனைத் துயில் எழுப்பப்போகும் கோபியர்கள்,

> செம்பொற் கழல்அடிச்
> செல்வா! பலதேவா!

என்று நம்பிமூத்த பிரானைக் கூவியழைத்து, 'உம்பியும் நீயும் துயில் உணரவேண்டும்' என்று பிரார்த்திக்கிறார்கள். சாதுவான பலதேவன் குறும்புத் தம்பியைத் துயில் எழுப்ப வேண்டும் என்பது குறிப்பு.

சங்க காலமும் பலதேவனும்

சங்க காலத்திலே கண்ணபிரானுடன் நம்பிமூத்த பிரானாகிய பலராமனும் வழிபடப் பெற்றான் என்ற செய்தியைச் சங்க நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம். பலராமன் நாஞ்சிற் படையை உடையவன், அதாவது கலப்பையை ஆயுதமாக உடையவன் என்றும், பனைக்கொடியை உடையவன் என்றும் புறநானூறு தெரிவிக்கிறது.

கடற் சங்குபோன்ற வெண்ணிறமுடையவன் என்றும் பால்நிற உருவம் உடையவன் என்றும் புறநானூறு குறிப்பிடுவதையும் காண்கிறோம்.

பால்நிற உருவின்
பனைக்கொடி யோனும்

என்று புறநானூறு 58-ஆம் பாடல் கூறுகிறது. இந்த நிறத்தையும் கொடியையும்,

கடல்வளர் புரிவளை
புரையும் மேனி,
அடல்வெந் நாஞ்சில்
பனைக்கொடி யோனும்

[கடல்வளர் புரிவளை-கடற்சங்கு. புரையும் - ஒத்திருக்கும். அடல்வெந்நாஞ்சில் - கொடிய ஆற்றல் உள்ள கலப்பைப் படை.]
என்று புறநானூறு 56-ஆம் பாட்டு வருணிக்கிறது.

சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் தோன்றிய பரிபாடலில் பலதேவன் சிறப்பாகக் குறிக்கப்படுவதைக் காண்கிறோம். திருமாலே பலராமனாகவும் தோன்றியதாகப் பரிபாடல் தெளிவாய்க் கூறுகிறது. குற்றமற்ற சங்கு போன்ற வெண்ணிற மேனி பலராமன் திருமேனி என்றும் பரிபாடல் தெரிவிக்கிறது :

மையில்வால் வளைமேனி

[மையில்-குற்றமற்ற. வால்வளை - வெண்சங்கு.]

அழகான யானையின் உருவம் பொறித்த கொடியை ஏந்தியவன் பலராமன் என்ற குறிப்பையும் பரிபாடலின் முதற்பாட்டில் காண்கிறோம். வளைந்த வாயையுடைய கலப்பையைப் படைக்கலமாக உடையவன் என்ற கருத்தையும் இங்கே காண்கிறோம்.

வாய்வாங்கும் வளைநாஞ்சில்

என்பது இப்புலவர் வாக்கு.

பலராமன் ஒற்றைக் காதணியை உடையவன் என்றும் பரிபாடலின் முதற்பாட்டு அறிவிக்கிறது :

ஒருகுழை ஒருவனை

'பலராமனாகவும் தோன்றிய ஒப்பற்றவனே!' என்று திருமாலை விளித்து முன்னிலைப் படுத்திக் கொள்கிறார் இவ்வாசிரியர்.

பரிபாடலின் இரண்டாம் பாட்டினும் பலராமனைப் பற்றிய பிரஸ்தாபம் வருகிறது. திருமால் காலத்தால் முதியவனாயினும், பலராமனுக்கு இளையவனாகப் பிறந்தான் என்கிறது இப்பாட்டு.

நீயே, வளையோடு புரையும்
வாலி யோற்குஅவன்
இளையன் என்போர்க்கு
இளையை யாதலும்

என்பது கீரந்தையார் என்ற இப்புலவரின் வாக்கு.

'வளையோடு புரையும் வாலியோன்' என்றால் சங்கை ஒத்த வெண்ணிறமுள்ள பலராமன். இவன் நிறைந்த இருட்டை ஒத்த கருநிறம் பொருந்திய ஆடையை அணிந்து கொண்டு இருப்பானாம். இந்த ஆடையைப் புலவர்,

புதையிருள் உடுக்கை

என்கிறார்.

பலராமனின் பனைக்கொடியை அழகிய பனைக்கொடி என்கிறார். 'பொலம்பனைக் கொடி' என்பது இவர் வாக்கு. இத்தகைய பலராமனுக்குக் கண்ணன் இளையவனாகத் தோன்றிய போதிலும், திருமாலின் முழு அவதாரமானதால் பலராமனைக் காட்டிலும் மூத்தவன் என்று கூறுவதும் பொருந்துவதே என்கிறார்.

புதையிருள் உடுக்கைப்
பொலம்பனைக் கொடியோற்கு
முதியை என்போர்க்கு
முதுமை தோன்றலும்

என்பது இவர் வாக்கு.

ஒருவன் அண்ணனுக்குத் தம்பியாகத்தான் இருக்கமுடியும்; ஆனால் அண்ணனுக்கு அண்ணன் ஆவது எப்படி? கண்ணன் என்ற திருமாலோ அண்ணனுக்குத் தம்பியாகவும் இருக்கிறான்; அண்ணனுக்கே அண்ணனாகவும் இருக்கிறானாம். இந்த நிலை அதிசயத்திற்குரிய நிலை என்கிறார் புலவர். இதனால், பலராமன் அவதார புருஷன் ஆயினும் கண்ணனைப் போல் பூர்ண அவதாரமூர்த்தி அல்லன் என்று ஊகிக்கலாம்.

பரிபாடலின் மூன்றாம் பாட்டில் திருமாலின் நால்வகை வியூகநிலை குறிக்கப்படுகிறது,

வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற நான்கு உருவங்களையும் திருமாலின் வியூகமிலை என்பர். கரிய கண்களையும் வெண்ணிற உடம்பையும் உடைய பலராமனைச் சங்கர்ஷணன் என்கிறார்கள். 'கருங்கண் வெள்ளை' என்பது இப்பாட்டின் ஆசிரியரான கடுவன் இளவெயினனாரின் அருமை வாக்கு.

பரிபாடலின் நான்காம் பாட்டிலே, பலராமனுக்குரிய பனைக்கொடி திருமாலுக்குரிய உயர்ந்த கொடிகளில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. கலப்பைக் கொடியும் யானைக் கொடியும் இங்கே பிரஸ்தாபிக்கப்படுகின்றன. எனினும், இத்தனை கொடிகள் திருமாலுக்கு உரியனவாக இருப்பினும் இவற்றுள் ஒப்பற்றதாக உயர்ந்து விளங்குவது கருடக் கொடிதான் என்றும், கருடக் கொடிக்கு வேறு எந்தக் கொடியும் ஒப்பாவதில்லை என்றும் புலவர் கூறுகிறார். இதனாலும் பலராமாவதாரத்தைக் காட்டிலும் கிருஷ்ணாவதாரமே பூரணமானது என்று ஊகித்துக் கொள்ளலாம்.

பரிபாடலின் பதின்மூன்றாம் பாட்டில் ஒரே தெய்வம் பாற்கடலில் துயிலும் திருமாலாகவும், கலப்பைப் படையையுடைய பலதேவனாகவும், உலகை நிலைபெறச் செய்த வராகமூர்த்தியாகவும் மூன்று விதமாகக் காட்சி வழங்குகிறது என்ற கருத்தைக் காண்கிறோம். பலராமனை இச்செய்யுள் அறநெறியைக் கடந்து போர்புரியவரும் பகைவர்களின் மார்பில் உழுகின்ற கலப்பையை உடையவன் என்று வருணிக்கிறது. அந்தப் பகைவர்கள் எத்தகைய வீரர்களாயினும், ஆரவாரம் மிகுந்தவராயினும், எத்தகைய சேனைகளை உடையவர்களாயினும், அவர்களுடைய உயிரைப் போக்கி வெற்றியடைந்து விடுவானாம் பலராமன்.

பரிபாடலில் பதினைந்தாம் பாட்டாகிய திருமாலிருஞ்சோலைப் பாட்டிலிருந்து, அக்காலத்துத் திருமாலிருஞ்சோலையில் கண்ணன் பலதேவன் என்ற இரட்டைத் தெய்வமாகத் திருமால் காட்சியளித்தான் என்று தெரியவருகிறது. கண்ணனையும் பலராமனையும் தாங்கிக்கொண்டு நிற்பது சோலைமலையின் தனிப்பெருஞ் சிறப்பு என்கிறார் இளம்பெருவழுதியார் என்ற இப்புலவர் பெருமான்.

இந்த இரட்டைத் தெய்வத்தில் கண்ணனைத்தான் இப்புலவரும் திருமால் என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார். கல்லென ஒலிக்கும் கடல்போன்ற கருநிறமுடையவன் கண்ணன் என்றால், கடற்கரைச் சோலையில் பரந்திருக்கும் மணல்போன்ற வெண்ணிறமுடையவன் பலராமன் என்கிறார். 'கல்அறை கடலும் கானலும் போலும்' என்பது இவர் வாக்கு.

'கல்அறை கடல்' என்றால் கல் என்று ஒலிக்கும் சமுத்திரம். கானல் என்றால் கடற்கரைச் சோலை. கடலும் கடற்கரைச் சோலையும்போல் இருக்கிறார்களாம் கிருஷ்ண பலதேவர்கள். இவர்கள் நிறத்தால் வேறுவேறு உருவினராயினும் மக்களைக் காப்பாற்றும் தொழிலில் சொல்லும் பொருளும்போல் ஒன்றுபட்டிருக்கிறார்களாம். திருமாலிருஞ்சோலையில் கோயில் கொண்டிருக்கும் கண்ணனையும் பலதேவனையும் மக்கள் தியானித்துப் பேறுபெற வேண்டும் என்கிறார் இப்புலவர்.

பலதேவன் மார்பில் வெண்கடப்ப மலர் மாலை அணிந்திருக்கிறானாம். அந்த மாலை போலக் காட்சி தருகிறது நூபுரகங்கை என்ற சிலம்பருவி. (திருமாலிருஞ்சோலை மலையின் அருவி) என்கிறார் இப்புலவர். திருமாலையும் பலதேவனையும் சிறந்த வேதம் ('நாமவாய்மொழி') ஒருங்கே போற்றுவதாக இப்புலவர் குறிப்பிட்டு, 'இந்த இருவரையும் வணங்கி, இவர்கள் எழுந்தருளியுள்ள மலையடியில் வாழும் வாழ்வு எங்களுக்குக் கிட்டவேண்டுமென்று விரும்புகிறோம்' என்று பொருள்படப் பாடி முடிக்கிறார்.

கலித்தொகையிலும் நம்பிமூத்த பிரானின் பிரஸ்தாபம் வருகிறது. இந்தப் பலதேவன் கண்ணனுக்கு மூத்தவன் என்று கவிஞர் குறிப்பிடுகிறார். 'முதுமுறைப் பால் அன்ன மேனியான்' என்பது இவர் வாக்கு.

சிவன், முருகன், திருமால், பலதேவன் என்னும் நால்வர்கள் உலகத்திற்கு இடையூறு வராமல் காப்பாற்றும் வலிமையும் புகழும் உள்ளவர்கள் என்ற பழந்தமிழர் நம்பிக்கையைப் புறநானூற்றில் காண்கிறோம். இந்தப் புறநானூற்றுச் செய்யுள், கடைச்சங்க காலத்துத் தமிழ்மக்கள் சிறப்பாகக் கொண்ட தெய்

வங்களில் பலதேவனும் ஒருவன் என்பதைத் தெளிவாக நினைவூட்டுகிறது.

பலராமனின் கதைச் சுருக்கம்

ஸ்ரீராமாவதாரத்தில் ஆதிசேஷன் இலட்சுமணன் என்ற தம்பியாகத் தோன்றி இராமபிரானுக்குப் பணிசெய்தான். அந்தப் பணிவிடையை உகந்து பாராட்டிய திருமால் அந்தச் சேஷனை நோக்கி, 'வேறொரு அவதாரத்தில் உனக்கு நான் தம்பியாகப் பிறந்து மரியாதை செலுத்துவேன்' என்று வரங் கொடுத்தானாம். எனவே, ஆதிசேஷன் கண்ணனுக்கும் முன்பே வசுதேவனுக்குப் பிள்ளையாகப் பிறக்கவேண்டும் என்று தேவகியின் கருவில் புகுந்தானாம்.

பிறகு திருமால் தன்னுடைய யோக மாயை என்ற சக்தியை அழைத்து, 'ஆதிசேஷன் புகுந்திருக்கிறானே, அந்தக் கருப் பிண்டத்தை அப்படியே வசுதேவருடைய முதல் மனைவியும் நந்தகோபருடைய ஆய்ப் பாடியில் வசிக்கிறவளுமாகிய ரோகிணியின் கர்ப்பத்தில் வைத்துவிடு!' என்று கட்டளையிட்டானாம். அந்த ஆறுமாதத்துக் கருப் பிண்டத்தை யோகமாயை தேவகியிடமிருந்து ரோகிணிக்குச் சேர்த்துவிடப் பலராமன் பிறந்தான் என்கிறது புராணம்.

இந்தப் பலராமன் கண்ணனிடத்தில் மிகவும் பிரியமுள்ளவனாகி இணைபிரியாது வாழ்ந்தான். தான் தம்பியாகப் பிறந்து திருமால் ஆதிசேஷனைக் கௌரவிக்க விரும்பியபோதிலும், அண்ணனாகப் பிறந்தும் ஆதிசேஷன் பகவானுக்குப் பாதுகாப்பாக இருந்து பணி புரிந்தான் என்பர். பணிபுரிய வேண்டும் என்பது தனிப்பெரு நோக்கமாகும்போது மூத்தவனாக இருந்தால் என்ன, இளையவனாக இருந்தால் என்ன? பணிபுரிய ஆசையும் ஆற்றலுமே தேவை. பலராமனுக்கு ஆற்றல்தான் கொஞ்சமா?

ஒரு சமயம் பலராமன் பக்கத்தில் ஓடுகிற யமுனையை நோக்கி, 'ஓ, யமுனா நதியே! நீ இங்கே வா, நான் நீராடவேணும்' என்று அழைத்தானாம். யமுனா அப்படிச் செய்யாததால் பலராமன் கோபித்துத் தன் கலப்பையைக் கையில் எடுத்து அதன் முனையால் அந்த ஆற்றைத் தன் பக்கமாக இழுத்தானாம். அப்படிப் பலதேவன் இழுக்கவே, யமுனா தான் போகும் வழியைவிட்டுப் பலராமன் தங்கியிருந்த இடத்திற்கே வந்துவிட்டதாம். பிறகு பலராமன் அதில் நீராடினான், அந்த நதியையும் மன்னித்துவிட்டான் என்கிறது புராணம். பலராமனுடைய கலப்பைப் படையின் வைபவம் குறித்து வேறுசில கதைகளும் உண்டு. இத்தகைய பேராற்றலைப் பணிபுரியப் பயன்படுத்திக் கொண்டான் இந்த அவதார மூர்த்தி—நம்பி மூத்தபிரான்.

புத்த அவதாரம்

பலராமாவதாரத்திற்குப் பதில் திருமால் புத்தனாக அவதரித்தான் என்று அந்த அவதாரத்தைக் குறிப்பிடுவோரும் உண்டு. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜயதேவர் தமது கீதகோவிந்தம் என்ற பிரசித்திபெற்ற இசைப் பாட்டினிடையே திருமாலின் பத்து அவதாரங்களைக் குறிப்பிடுகிறார். முதல் முதல் பகவான் மீனாகி வெள்ளத்திலிருந்து வேதத்தைக் காப்பாற்றினான் என்ற அந்த அவதாரச் செயலைக் குறிப்பிடுகிறார். பிறகு ஆமையுருவில் உலகத்தை நிலைபெறச் செய்த செயலைக் குறிப்பிடுகிறார். பன்றியாகிப் பூமியைத் தந்தத்தில் தாங்கிக் கொணர்ந்த நிகழ்ச்சியையும் குறிப்பிடுகிறார். நரசிங்கமாகி அசுரவதம் செய்ததைக் குறிப்பிட்டபின் அதிசயக் குள்ளனாகி உலகை அளந்த நிகழ்ச்சியையும் பேசுகிறார். அப்பால் பரசுராமாவதாரத்தையும் ஸ்ரீ இராமாவதாரத்தையும் கொண்டாடுகிறார். பலராமாவதாரத்தை ஜயதேவர் குறிப்பிடவில்லை.

கிருஷ்ணாவதாரத்தைக் குறிப்பிட்டபின் புத்தாவதாரத்தைக் கொண்டாடுகிறார். புத்தரை ஜீவகாருண்ய மூர்த்தி என்கிறார். வேதங்களே வேள்விகளில் பிராணிவதத்தை அனுமதித்த போதிலும் அந்த வேதங்களை அருளிய பகவானே கருணை மிகுதியால் புத்தனாகத் தோன்றி ஹிம்ஸையை அறவே கண்டித்து வேத வேள்விகளைத் தடுத்ததாகக் கூறியுள்ளார்.

புத்தரும் பலதேவனும்

புத்தாவதார தத்துவம் அவிசொரிந்து ஆயிரம் வேள்வி செய்வதைக் காட்டிலும் ஒரு பிராணிக்கும் ஹிம்ஸை செய்யாமலிருப்பது

– விறன்மிண்ட நாயனர் –

விரிபொழில்சூழ் குன்றையார்
விறன்மிண்டர்க் கடியேன்
—சுந்தரர்.

பேசும் பெருமையவ் வாரு
ரனையும் பிரானவனு
மீசன் றனையும் புறகுதட்
டென்றவ னீசனுக்கே
நேச னெனக்கும் பிரான்மனைக்
கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற
மேய விறன்மிண்டனே
—நம்பியாண்டார் நம்பி.

தமிழ் நூல்களை, தொகை, வகை, விரி என மூன்று பாகுபாடு செய்து கூறுவர். தொகை, தொகுத்துக் கூறுவது; வகை, வகுத்து இயம்புவது; விரி, விரிவாகச் சொல்வது. நம்பியாரூரர் அடியார்களைப்பற்றி ஓதியது திருத்தொண்டத் தொகை. நம்பியாண்டார் நம்பிகள் சிறிது விளக்கமாக இயற்றியது திருத்தொண்டர் திருவந்தாதி. இவ்விரண்டின் துணைகொண்டு சேக்கிழார் பெருமான் விரிவாக அருளியது திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடக் காரணமாக இருந்த வரலாற்றையே இங்கு கூறப் போந்தது.

சிவபெருமானிடம் பரசுபெற்ற பரசுராம னுடைய நாடு மலைநாடு. கடல் வளமும், நில வளமும், மலைவளமும் பெருகிய நாடு. செழித்த சேர நாட்டிலுள்ள ஊர்களில் சிறந்த பழைய ஊர் திருச்செங்குன்றூர். அப் பதியில் வேளாளர் குடி விளங்க அவதரித்தவர் விறன்மிண்டர் என்பவர்; சிவபெருமான் திருவடிப் பற்றினையன்றி மற்ற பற்றில்லாதவர்; சிவனடியார்களிடத்து உண்மை யன்பு உடையவர். இவருக்கு இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களை வணங்க வேண்டுமென்ற விருப்பம் எழுந்தது. புறப்பட்டார்; எதிர்ப்படும் அடியார் திருக்கூட்டத்தை முன் வணங்கிப் பின்னர் இறைவரைப் பணியும் நியதியை மேற்கொண்டார். மலைநாடு கடந்து பல தலங்களையும் வழிபட்டுத் திருவாரூர் சென்றடைந்தார்.

நம்பியாரூரர் நாள்தோறும் திருவாரூர்ப் பெருமானை வணங்கிச் செல்வது வழக்கம். ஒருநாள் அவர் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியுள்ள அடியார்களை வணங்காமல் ஒருபுறமாக ஒதுங்கி இறைவனை வணங்கக் கோயிலுக்குட் சென்றனர். இதைப் பார்த்திருந்த விறன்மிண்டர்க்கு அது குற்றமாகத் தோன்றியது. "சிவனடியார்களை வணங்காதேகும் வன்றொண்டர் புறகு, அவருக்குப் பிராணகிய இறைவனும் புறகு" என்றுரைத்தார் விறன்மிண்ட நாயனர். அதையறிந்த நாவலர்கோன் திருத்தொண்டத் தொகை பாடி திருக்கூட்டத்தை வந்தணைந்து வணங்கினர். இறைவனும் "அடியார்களுடன் நாம் உள்ளோம்" என்று அருளிச் செய்தார். இவ்வாறு சைவ நெறிகாத்துத் திருத்தொண்டியற்றிய விறன்மிண்டர் திருவருளினலே கணநாயகராகும் பேறுபெற்று, இறைவன்

நல்லது என்ற திருவள்ளுவர் கொள்கைதான். பலராமாவதார தத்துவத்திலே கைங்கரிய நெறியே பெரிது என்ற கொள்கை புலனுகிறது.

இந்தக் கொள்கை ஒரு வகையில் இரட்டைக் கொள்கைதான். அடியவனுக்கு அடியனுகி ஆண்டவன் பணிசெய்ய முற்படுகிறுன்; அப்படி ஆண்டவன் முற்படும் அந்த வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு பணிசெய்து கிடப்பதே தன் கடனெனத் துணிகிறுன் மெய்யன்பனுகிய அடியவன். இந்த இரட்டைக் கொள்கையைக் கிருஷ்ண பலராமர் என்ற இரட்டை அவதார நிகழ்ச்சியில் காண்கிறேம்.

திருவடிக்கீழ் வாழும் இன்பம் எய்தினர். சுந்தரர், அடியார் பெருமையைக் கூறக் காரணராயிருந்த விறன்மிண்ட நாயனர் புகழ் என்றும் நின்று நிலவும்.

விறன்மிண்ட நாயனரைப்பற்றிய ஒரு கர்ண பரம்பரைச் செய்தியும் வழங்குகிறது. திருவாரூர்வடக்குத்தேர்த்தெருவில் திருமடம் அமைத்து வாழ்ந்தார். சுந்தரரையும், தியாகேசரையும் புறகென்று நாயனர் சொல்லிய பின், பெருமான் மறைந்திருந்து நம்பியாரூரருக்குக் காட்சிநல்கினர். அதனை 'ஒட்டுத் தியாகர் கோயில்' என்றிருப்பது குறிக்கிறது. இதனாலேயே நம்பிகள் "ஒட்டி யாட்கொண்டு போயொளித்திட்ட உச்சிப் போதனை" என்று கூறினர் போலும். இறைவன் ஒளிந்து காட்சி கொடுத்தது கண்ட விறன்மிண்டர் திருவாரூரில் இனி அடியெடுத்து வைப்பதில்லை யென்று உறுதிகொண்டு அதன் எல்லை கடந்து புத்தாற்றங் கரையில் பந்தல் அமைத்து அடியவர் பூசை நடத்தி வந்தார். அதை இப்போது ஆண்டிப்பந்தல் என வழங்குகின்றனர். அடியவர் எவரும் திருவாரூர் என்றால் அவர் கால்களை வெட்டிவிடும் சபதமும் பூண்டார். இறைவனே ஒரு அடியாராக வந்து "நாம் இருப்பது நிறைசெல்வத் திருவாரூர்" என்ன, நாயனர் அவர் கால்களைத் துணிக்க மழு எடுத்துத் துரத்த இருவரும் திருவாரூர் எல்லைக்குள் போய்விட்டனர். சிவபெருமான் "வந்தோமிப்பால்" என்றுகூற, சபதம் கடந்ததால் நாயனர் தம் கால்களைத் தாமே வெட்டிக் கொண்டனர். இறைவன், நாயனர்க்கும் அவர் மனைவியார்க்கும் காட்சி கொடுத்துப் பேறளித்தனர். அந்த இடத்தில் நாயனர் உருவமும், காட்சி தந்த கோலமும் உள்ளன. வந்தோமிப்பால் என்ற அவ்விடம் இப்போது வெண்டாம்பாலை என்ற ஊர்ப்பெயராக வழங்குகிறது. பெரியபுராணத்தில் இதுபற்றிய குறிப்பில்லை.

சேக்கிழார் பெரியபுராணத்தில் விறன்மிண்ட நாயனர் வரலாற்றைப் பதினொரு பாடல்களில் கூறியுள்ளார். நாயனர் அவதாரம் செய்த தலம் சேரநாட்டில் திருச்செங்குன்றூர் என்பது. கொங்குநாட்டுத் தலமான திருச்செங்கோடு என்னும் திருக்கொடிமாடச் செங்குன்றூர் இதனின் வேறுபது என்பது ஈண்டு குறிக்கத்தக்கது. கேரள நாட்டில் கோட்டயத்திற்கும் கொட்டாரக் கரைக்கும் இடையில் இப்போது செங்கண்ணூர் என வழங்கும் ஊரே நாயனர் அவதரித்த பதி. கொல்லம் எர்ணுகுளம் பாதையில் இப்போது அப்பெயருடன் ஒரு புகைவண்டி நிலையமும் இருக்கிறது. அங்கே சிவன் கோயிலும் பகவதி கோயிலும் இருக்கின்றன. அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரத் திருத்தாண்டகத்தில் "கொடுங்கோளூர் அஞ்சைக்களம் செங்குன்றூர்" என வரிசைப்படுத்திக் கூறியிருக்கின்றனர்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் 'விரிபொழில் சூழ் குன்றை' என்று இவ்வூரைக் குறிக்கிறார். சேக்கிழார், "சேரர் திருநாட்டூர்களின் முன் சிறந்த மூதூர் செங்குன்றூர்" என்று புகழ்கிறார். அவருடைய பின்வரும் இனிய பாடல் ஒன்று சுவைத்தின்புறத்தக்கது:—

ஞால முய்ய நாமுய்ய நம்பி
சைவ நன்னெறி யின்
சீல முய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓல மிடவு முணர்வரியா ரடியா
ருடனுமுள தென்றால்
ஆல மமுது செய்தபிரா னடியார்
பெருமை யறிந்தா ரார்.

விறன்மிண்டர் பெயர் இயற்பெயரோ என்று விளங்கவில்லை. ஆனால் அவர் செய்த தொண்டு விறலும் மிண்டும் கொண்டு இருந்தமையால் அப் பெயர் பெற்றிருக்கலாமோ என்பது சிந்திக்கத்தக்கது. சேரமான் பெருமாள் நாயனர், ஏயர்கோன் கலிக்காம நாயனர், விறன்மிண்ட நாயனர் இவர்கள் சுந்தரருடன் ஒரு காலத்திருந்தவர்கள்.

விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண் டொன்மை
விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்
வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும்
வன்றொண்டன் புறகவனை வலிய வாண்ட
துளங்குசடை முடியோனும் புறகென் றன்பாற்
சொல்லுதலு மவர்தொண்டத் தொகைமுன் பாட
உளங்குளிர வுளதென்று ரதனு லண்ண [பாட
லுவகைதர வுயர்கணத்து ளோங்கி னரே.
—திருத்தொண்டர் புராணசாரம்

"ஆணை நமதே"

திரு. K. M. வேங்கடராமையா M.A., B.O.L.,—திருப்பனந்தாள்.

இறைவனுடைய திருவருள் பெற்ற பெரியோர்கள், "இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும் கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்; காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை யாவதும் அறியா இயல்பினர்" என்று திருமுருகாற்றுப் படையில் கூறிய வண்ணம் திகழ்பவர் ஆவர். அன்னோர்தம் செயல்கள் எல்லாம் இறைவனுடைய செயல்களாகவே கருதப்படும். அவர்களும் ஆணையிடும் நிலைகள் ஏற்படக்கூடும்! மன்பதைகளிடத்து அவர்களுக்குள்ள எல்லையற்ற கருணை காரணமாகவே அவர்கள் ஆணையிட வேண்டி வருகின்றது. அப்பொழுது அவர்கள் யார் பேரில் ஆணையிடுவது? இறைவன் பேரில் ஆணையிடலாம்! ஆனால் அவர்கள் வேறு இறைவன் வேறு அல்லவே! அவர்கள் சொல்லும் செயலும் எல்லாம் இறைவனது செயலாகுமே! ஆகவே இறைவன் பேரில் அவர்கள் ஆணையிடார். அவர்கள் இடும் ஆணையும் உறுதி கூறும்பொருட்டே நிகழ்வதாகலின் அவர்கள் "ஆணை நமதே" என்று கூறுவராவர். இங்ஙனம் "ஆணை நமதே" என்று திருஞான சம்பந்தர் நான்கிடங்களில் கூறியுள்ளார்.

திருநனிபள்ளியில்

திருஞானசம்பந்தர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர்; சீகாழிப் பதியில் திருவவதாரம் செய்தார்: மூன்றாவது வயதிலேயே சீகாழிப் பிரமதீர்த்தக் கரையில் உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றுச் சிவஞான சம்பந்தர் ஆயினர்; இவரது முதலாவது தலயாத்திரை திருக்கோலக்காவிற்குச் சென்றமையாகும். அங்குச் சிவபெருமான் திருவருளால் திருவைந்தெழுத்து எழுதப்பெற்றசெம் பொற்றாளங்களைப் பெற்றார். இனி இவரது இரண்டாவது தலயாத்திரை திருநனிபள்ளிக்குச் சென்றமையாகும். திருநனிபள்ளி இவரது தாயாகிய பகவதியாரின் பிறந்தகமாகும். திருநனிபள்ளி மறையவர்கள் சம்பந்தரைத் தம் திருப்பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டிக்கொண்டனர். சம்பந்தரும் தம் தந்தையாராகிய சிவபாதவிருதயரின் தோள் மீது அமர்ந்து திருநனிபள்ளிக்கு எழுந்தருளினார். அங்குக் "காரைகள் கூகைமுல்லை" என்ற திருப்பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்தின் இறுதிப் பாடலில் தாம் தந்தையாரின் திருப்புயங்களில் அமர்ந்து திருப்பதிகம் பாடியதையும், 'திருநனிபள்ளியை நினைப்பவருடைய வினைகள் கெடுவதற்கு ஆணை நமதே' என்றும் குறித்தருளினார். இதோ அப்பாடல்:—

கடல்வரை ஓதம்மல்கு காழிகானல் பானல்
கமழ்காழி என்று கருதப்
படுபொரு ளாறுநாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்றஅத்தர் பியன்மேல் இருந்(து)
இசையால் உரைத்த பனுவல் [இன்
நடுவிரு ளாடும்எந்தை நனிபள்ளி உள்க
வினைகெடுதல் ஆணை நமதே

[பொருளாறு நாலும்-ஆறு அங்கங்களும், நான்கு வேதங்களும்; பதியான - பதியில் உதித்த; ஞானமுனிவன்-திருஞான சம்பந்தர்; பியல் - தோள்; பனுவல் - பதிகம்; நடுவிருள் ஆடும் எந்தை-சிவபெருமான்; உள்க-நினைத்தால்.]

திருவேதிகுடியில்

திருஞானசம்பந்தர் (ஐந்தாவது தல யாத்திரையில்) காவிரி யாற்றின் வடகரையிலே மேற்கு நோக்கிச் சென்றார்; திருவையாறு முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டே திருநணு வரையில் சென்று, பின்னர்க் காவிரியின் தென்கரையிலுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டே திரும்பித் திருக்கண்டியூர், திருச்சோற்றுத் துறை முதலிய தலங்களைத் தரிசித்துப் பாடிப் பரவி, வேதியர் வாழும் திருவேதிகுடியை அடைந்தார்; அங்குப் பாடிய பதிகத்தில் பதினோராவது பாடலில் "திருவேதிகுடியிலுள்ள சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தை செய்ய வல்லவர்கள் நல்லவர்கள் என்று கருதப்பெறுவார்கள்; அம்மையில் தேவருலகெய்தி அரசாள்வர்;

அது உண்மை; ஆணை நமது'' என்று குறித்தார். அப்பாடல் வருமாறு:—

கந்தம்மலி தண்பொழில்நல் மாட மிடை
காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு
வேதிகுடி ஆதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள்
என்னநிகழ் வெய்திஇமையோர்
அந்தவுல கெய்தியர சாளும்அது
வேசரதம் ஆணைநமதே.

[கந்தம்மலி-வாசனைமிகுந்த; ஆதிகழல் - சிவபெருமானுடைய திருவடிகள்; நிகழ்வு எய்தி - இம்மையில் அடைந்து; இமையோர்-தேவர்; சரதம்-உண்மை.]

திருமறைக்காட்டில்

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டிற்குச் சென்று மறைகளால் மூடப்பெற்றிருந்த திருக்கோயில் திருக்கதவினைப் பாட்டுப்பாடித் திறந்தும் மூடியும் அற்புதம் நிகழ்த்தினர்; நாளும் இன்னிசைப் பாமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி இறைவனைப் போற்றித் திருமறைக் காட்டில் தங்கியிருந்தனர். இங்ஙனம் நிகழும் நாளில், பாண்டி நாட்டில் பாண்டிய அரசனாக இருந்தவன் நெடுமாறன் என்ற பெயரினன்; சமண சமயச் சார்பினன்; அவன் மனைவி மங்கையர்க்கரசியரசியார், மந்திரி குலச்சிறையார்; இவ்விருவர் மட்டும் சைவ சமயத்தைச் சார்ந்தவராய் இருந்தனர். 'சமண சமயத்தைப் போக்கிச் சைவத்தை நிலைநாட்டக் கூடியவர் திருஞானசம்பந்தரே' என்று உணர்ந்து இவ் விருவரும் சிலரைச் சம்பந்தரிடம் அனுப்பினர்; அவர்கள் வேண்டுகோட்படி சம்பந்தரும் மதுரைக்குப் போக இசைவு தந்தார். சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளும் செய்தியை அறிந்த திருநாவுக்கரசர் சம்பந்தரை நோக்கி, "பிள்ளாய்! சமணர்கள் மிக்க வன்மை மிக்கவர்கள்; இப்பொழுது கோள்களும் தீமை பயக்கும் நிலையில் உள்ளன; ஆகவே தாங்கள் மதுரைக்கு ஏகுவது தகாது'' என்று கூறினர். உடனே திருஞான சம்பந்தர், "நாம் சிவபெருமானின் திருவடிகளைத் துதிக்கிறோம்; ஆதலான் அடியார்களாகிய நம்மைக் கோள்களும் நாளும் துன்புறுத்த மாட்டா; இதற்கு ஆணை நமதே'' என்றபொருள் பொதிந்த ஒரு பதிகம் பாடினர். இது கோளறு பதிகம் எனப்பெறும். இப் பதிகத்தின் பதினோராவது பாடல் பின் வருமாறு:—

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல்
வளர்செம்பொன் எங்கும் நிகழ [துன்னி
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

சீர்காழியில்

திருஞானசம்பந்தர் சீகாழியில் வீற்றிருந்த பொழுதெல்லாம் பல திருப்பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று 'மடல்மலி கொன்றை' என்பது; இதன் இறுதிப் பாடலிலும் 'ஆணையும் நமதே' என்று கூறப்பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு:—

கானலங் கழனி ஓதம்வந் துலவுங்
கழுமல நகருறை வார்மேல்
ஞானசம் பந்தன் நற்றமிழ் மாலை
நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊனசம் பந்தத் துறுபிணி நீங்கி
உள்ளமும் ஒருவழிக் கொண்டு
வானிடை வாழ்பவர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற்கு ஆணையும் நமதே.

ஆணை நமதென்ன வல்லான்

இங்ஙனம் நான்கு இடங்களில் திருஞானசம்பந்தர் "ஆணை நமதே'' என்று கூறியுள்ளமை இது காறும் கண்ட பாடல்களால் அறியப் பெறும். திருநாரையூர்ச் சைவ அந்தணரும், சிவபாத சேகரனாகிய முதலாம் இராச ராச சோழன் திருமுறைகளை வகுத்ததற்கு உதவி புரிந்தவராகிய நம்பியாண்டார் நம்பிகள் இச் சிறப்பினை நன்குணர்ந்தவர்; ஆகவே அவர் தாம் பாடிய "ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை''யில் திருஞானசம்பந்தரை 'ஆணை

நம தென்னவலான்' என்று குறித் தருளினர். அந் நூற்பகுதி பின் வருமாறு :—

"முத்திப் பகவ முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தர்எதிர் ஆணைநம
தென்னவலான்"
(வரி 44—5)

ஆணைநம தென்ற பெருமாள்

"ஆணை நமது" என்றவர் திருஞான சம்பந்தர் என்பது உறுதியாகலின் திருஞான சம்பந்தரைத் தமிழ்நாட்டுச் சைவப்பெரு மக்கள் "ஆணைநம தென்ற பெருமாள்" என்றும் குறிப்பிடலாயினர். அப் பெயரைத் தாமும் பூண்டனர் என்பதைக் கல்வெட்டு ஒன்றிலிருந்து அறியலாம்.

கல்லெழுத்தில்

"ஆணை நமதென்ற பெருமாள்" என்ற பெயர் பிரான்மலைக் கல்வெட்டு ஒன்றில் காணப் பெறுகின்றது. பிரான்மலை, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ளது. இவ்வூர்ச் சொக்கநாதர் கோயிலில் அரசன் பெயர் குறிக்கப்படாத கல்வெட்டொன்றுண்டு. இக் கல்வெட்டு 1903-ஆம் ஆண்டுக்குரிய 152 எண் கொண்ட சாசனமாகத் தென்னிந்திய சாசனங்கள் VIII-வது பகுதியில் 440 எண் கொண்ட சாசனமாக வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வூர், திருமலை நாட்டுத் திருக்கொடுங்குன்றம் என்று குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வூர் அழகியசிற்றம் பலமுடைய நாயனர் திருக்கோயிலும் திருக்குளமும், மடமும் திருமடைவிளாகமும் பதினெண் விஷயத்தார் ரக்ஷையாக இருந்தது. இக்கோயில் பெருமானுக்குத் திருப்படி மாற்றுக்கும் திருப்பணிக்கும், திருப்பரிவட்டம் திருமேற்பூச்சு மற்றுமுள்ள நிபந்தங்களுக்கும் ஆகச் சில வரிகளைக் கோயிலாரே வசூலித்துக் கொள்ளுமாறு திசை ஆயிரத்தைஞ்ஞூற்று வரும் பதினெண் விஷயத்தாரும் உத்தரவு கொடுத்தார்கள். இத்தன்ம சாசனத்தில் கையெழுத்திட்ட பதினெண் விஷயத்தாருள் ஒருவர் பட்டமுடையார் ஆணை நமதென்ற பெருமாள் எனப்பெற்றார்.

கல்லெழுத்தில் கண்ட பிற பெயர்கள்

கையெழுத்திட்டவர்களுள் இன்னொருவர் கோவிலூர் உடையார் சிவபத்தர்; மற்றொருவர் உறத்தூருடையார் திருத்தொண்டத் தொகையுடையார்; பின்னும் ஒருவர் அழிசிற் பாக்கமுடையார் பத்தர்க்கருள்செய்வார்; இன்னும் ஒருவர் நாட்டார் பள்ளி யுடையார் திருநீறு பரப்பினர் என்பவர்.

பெயர் விளக்கம்

ஆணை நமதென்ற பெருமாள் என்பது திருஞான சம்பந்தரைக் குறிக்கும். சிவபக்தி மிக்குள்ளமையைக் குறிப்பதாய் அமைந்தது சிவபத்தர் என்ற பெயர். திருத்தொண்டத் தொகை என்பது சுந்தரர் பாடிய திருப்பதிகங்களுள் ஒன்று; சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற் கடிப்படை நூலாயமைந்தது. அப் பதிகம் சிவனடியார்களைத் துதிக்கு முகத்தான் சிவபெருமானைப் பாடியதாகலின் "திருத் தொண்டத் தொகையான்" என்பது சிவபெருமானைக் குறிக்கும். திருத்தொண்டத் தொகையைப் பாடிய காரணத்தான் சுந்தரரைக் குறிப்பதாகக் கொண்டாலும் அமையும் திருத் தொண்டத் தொகையின் பெயரால் குகை, திருமடம், கோயில் முதலியன பண்டைக் காலத்தில் அமைக்கப் பெற்றிருந்தன.

முடிவுரை

இதுகாறும் கூறியவாற்றான் 'ஆணைநமது' என்று கூறியவர் சம்பந்தர் என்பதும், அதனானே 'ஆணைநம தென்ற பெருமாள்' என்று சம்பந்தர் அழைக்கப்பெற்றார் என்பதும் அறிகின்றோம். பிற்காலச் சோழப் பேரரசு சிறப்புற்ற காலத்தில்—சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில்—மக்கள் சமயச் சார்பான பெயர்கள் பூண்டனர்; அப் பெயர்கள் தாமும் சமயக் குரவர் வரலாறுகளை நினைவூட்டுவனவாய் அமைந்தன. இச்செய்திகள் சமய அறிவு படைத்த தமிழ்ப்பெரு மக்களுக்கு இன்பம் பயக்கும் என்பது உறுதி.

பூழியர் கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல்போற்றி !

நவதிருப்பதி அநுபவம்

தென்குளந்தை (பெருங்குளம்)

[திரு. கி. பட்சிராஜன் B. A., B. L.,]

விசுவசகனின் ஆர்வம் பெருகி வருவதைக் கண்ட சனகர் மேலும் கூறுவார். அரசனே! உன் பக்தி பாராட்டுதற்குரியது. இன்னும் கேள்! பூமிபால க்ஷேத்திரத்திற்கு (புளிங்குடி) வடகிழக்கே, தென்குளந்தை என்ற பெயர்பெற்ற க்ஷேத்திரம் இருக்கிறது. அங்குள்ள பெரிய தடாகத்தை வைத்து அந்த க்ஷேத்திரம் அப் பெயர்பெற்றது. அவ்வூரில் முன்னுளில் வேதசாரன் என்ற ஒரு அந்தணன் குமுத்வதி தேவி என்ற தன் மனைவியுடன் வாழ்ந்துவந்தான். அவன் சிறந்த வைணவன். வெகு காலம் மகப்பேறில்லாமல் வாடிய அவ்வந்தணனும், அவனது மனைவியும் கடவுளை வேண்ட கடவுளருளால் அவளுக்குக்கமலாவதி என்றபெண்குழந்தைபிறந்தது. திருமகள்போல் அழகுடைய அப் பெண் கொடியை அவர்கள் மிகவும் செல்வமாக வளர்த்தார்கள். அவளும் தன் வளர்த்தியோடு பகவானிடம் அன்பும் வளர உரிய பருவம் எய்தினுள். மணம் கொள்ளும் பருவமடைந்த மகளை, உரிய கணவன் ஒருவனுக்கு மணம் செய்விக்க வேண்டுமென்று தக்கான் ஒருவனைத் தேடத் தலைப்பட்டனர், தாய் தந்தையர். இதையறிந்த கமலாவதி மனம் புழுங்கினுள். அவளுடைய உள்ளத்தில் மாதவனை மணாளனுக வரித்து, அடைந்தால் அவனையே கணவனுகப் பெறவேண்டும், இல்லையேல் மணமின்றியே உயிர் துறப்பது என்று உறுதி கொண்டிருந்தாள். தன் உள்ளக்கிடக்கையை அறியாத தாய் தந்தையரிடம் ஒருநாள் துணிந்து "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று வெளியிடவும் செய்தாள். ஆனல் அவர்கள் இது இளம்பிள்ளையின் வெற்று மொழி என்று அசட்டைசெய்து தங்கள் முயற்சியிலேயே ஈடுபட்டார்கள். அதுமட்டுமல்ல, மகளுக்கும் அவள் உறுதியில் ஏலாத் தன்மையையும் பற்றி உபதேசிக்கத் தலைப்பட்டார்கள். இதனுல் மனம் வெதும்பிய கமலாவதி அவர் உறவை அறுத்துக்கொண்டு, தன் உறுதிப்படி பலன்பெற வேண்டி, கொடிய நோன்பியற்றினுள். அவள் உறுதியைக் கண்டு வியந்த அச்சுதன், அவள் முன்னே தோன்றி, "ஏன் இவ்வாறு தவம் செய்கிருய்" என்று வினவினுன். அவ்விளங்கொடியும், தன்னுடைய மன உறுதியையும், பின் நிகழ்ந்தவற்றையும் இறைவனிடம் கூறினுள். இறைவனும் பலவாருக அவள் உறுதிப்பாட்டை சோதித்து தெளிந்துகொண்டு, அம்மங்கையை அருளுடன் அணைத்து தன்னுடைய மார்பிலே விளங்கும் கௌத்துப மணியோடு அமர்த்திக்கொண்டான்.

இதைத் தரிசித்த தேவர்கள், மலர் சொரிந்து வாழ்த்தி, அத்தலத்திற்கும் 'பாலிகாவனம்' என்று பெயர் சூட்டிச் சென்றுர்கள். இவ்வரலாற்றை அறிந்த கமலாவதியின் பெற்றேர்கள், அங்கு வந்து இறைவன் திருமார்பில் தங்கள் மகள் விளங்குவதைக் கண்டு பெருமகிழ்ச்சி எய்தினர்.

இவ்விதம் மகிழ்வெய்திய அப்பெற்றேர்கள் அங்கு எம்பெருமானை நாள்தோறும் மலர் தூவி, அர்ச்சித்து, அதன் பலனுக பல புத்திர பௌத்திரர்களைப் பெற்றுக் குறைவின்றி வாழும் நாளில் ஒருநாள் அவ்வந்தணன் மனைவியான குமுத்வதியானவள் குளத்தில் நீராடச் சென்றிருந்தாள். வழியில் அசுமசாரன் என்ற ஓர் அரக்கன் அவளை வலிந்துபற்றி விண்வழியே சென்று இமயச் சாரலில் ஒரு குகையில் அவளைச்சிறை வைத்துவிட்டான். இதைக் கேள்வியுற்ற வேதசாரன் இறைவன்பால் சென்று கலச தீர்த்தத்தால், திருமஞ்சனம் செய்து, தன் மனைவிக்கு நேர்ந்த கதியை, எம்பெருமானிடம் விண்ணப்

பித்து "எம்பெருமானே! மனைவியில்லாதவன் ஒருவித நற்செயலுக்கும் உரியன் அல்லனே! நான் என் நாட்களை எவ்வாறு கழிப்பது? தேவரீர்தான் அவளை மீட்டுத் தரவேண்டும்" என்று பிரார்த்தித்தான். இறைவனும் உடனே அங்கிருந்த கலுழன்மீது ஏறி இமயம் சென்றான். அசுமசாரன் வெளியே சென்றிருந்தான். குகையில் சிறையிருந்த குமுத்வதியை எம்பெருமான் கொண்டுசென்று, வேதசாரரிடம் ஒப்புவித்தான். அரக்கன் திரும்ப வந்து, குகையில் குமுத்வதியைக் காணுமல் நடந்ததை ஞானத்தினுல் தெரிந்து நேரே பாலிகாவனம் வந்து எம்பெருமானுடன் போர் புரிந்தான். இறைவனும் விளையாட்டாக அவனேடு போராடி அப்பால் அவனைத் தூக்கித் தரையில் அறைந்து காளியன் தலையில் நடமாடியதுபோல அவ்வரக்கன் தலையில் நடனமாடினுன். இதைக் கண்ட விண்ணவர்கள் எம்பெருமான் திருவடிகளைக் கங்கா ஜலத்தினுல் அபிஷேகம் செய்து வணங்கினுர்கள். ஏற்கனவே பெரிதாக இருந்த தடாகம் மேலும் பரந்து பெருக்கெடுத்துப் 'பெருங்குளம்' என்றும் பெயர்பெற்றது. மாயம் செய்த அரக்கன் தலையில் நடனம் செய்த இறைவனுக்கு தேவர்கள் "மாயக் கூத்தன்" என்று பெயர்சூட்டி மகிழ்ந்தார்கள். அதிலிருந்து அத்தலம் தென்குளந்தை எனப் பெயர்பெற்றது.

[எம்பெருமான் பெயர்-மாயக்கூத்தன்; தாயார் திருநாமம் - குளந்தைவல்லி; பெருங்குள தீர்த்தம்; ஆனந்தநிலைய விமானம்; நின்ற திருக்கோலம்; பிரஹஸ்பதிக்குப் பிரத்தியக்ஷம்.]

இங்கும் பிரஹஸ்பதிக்கு பிரத்தியக்ஷமான வரலாறு என்ன என்பது தெரியவில்லை.

4, 5 துலைவில்லிமங்கலம்—இரட்டைத் திருப்பதி

திருப்புளிங்குடிக்கு கிழக்கே சுமார் 3 கல் தூரத்தில் துலைவில்லிமங்கலம் என்ற க்ஷேத்திரம் இருக்கிறது. இதனை இரட்டைத் திருப்பதி எனவும் கூறுவர். இரண்டு இடங்களில் இறைவனுக்குக் கோயில் உள்ளமையால் இரட்டைத் திருப்பதிஎன்றுபெயர்பெற்றது. ஆதியில் இத்தலம் 'கேதார நிலையம்' என்னும் பெயரை உடையதாய் இருந்தது. முன்னெரு காலத்தில் ஆத்திரேய சுப்பிரபர் என்பவர் அங்கே ஒரு வேள்விச்சாலையை நிறுவி, அதில் ருத்துவிக்குகளுடன் அந்த வேள்விச்சாலையைச்சோதனம்செய்யும்போது, அங்கு ஒளி மயமான ஒரு தராசும், வில்லும் கிடைக்கக் கண்டனர். சுப்பிரபர் மிகவும் ஆச்சரியமுடையவராய் இவ்வில்லும், துலையும் எம்மானுடையதோ என்று ஐயுற்று மிகுந்த பயபக்தியோடு அவற்றை எடுக்கச் சென்றுர். அவர் கைப்பட்ட அளவில் அத் தராசு ஒரு எழில்மிக்க மங்கையாக மாறியது. சுப்பிரபர் வியப்பு மேலிட்டு வில்லைத் தொடலும் அது ஒரு அழகிய ஆண்மகனுக மாறியது. அங்கு கூடியிருந்தோர் அவ்விருவரையும் பார்த்து 'நீங்கள் யார்? எதனுல் இத்தகைய நிலையை அடைந்தீர்கள்'? என்று வினவினர். அந்த ஆண்மகன் அவர்களை வணங்கி, "பெரியோர்களே! நாங்கள் விஞ்சையர்கள். இவள் என் அருமை மனைவி. நானும் இவளும் கேளிக்கையாக இருக்கும் பொழுது அவ்வழி வந்த குபேரனை எங்கள் இன்ப மயக்கில் கவனியாது இருந்துவிட்டோம். குபேரன் கோபங்கொண்டு என்னையும், என் மனைவியையும் வில்லும் தராசுமாகும்படி சபித்துவிட்டான். நாங்கள் பதறிப்போய் எங்கள் பிழையைப் பொறுத்தருளி இச்சாபம் நீங்க, வழியும் கூறவேண்டும் என்று வேண்டினேம். குபேரன் இந்த தண்டனை உங்களுக்குத் தக்கதே என்ருலும், கேதாரநிலைய க்ஷேத்திரத்தில் ஒரு வேள்விச்சாலையில் அந்தணன் கைதீண்டப் பெறும்போது உங்கள் முன்னைய வடிவைப் பெறுவீர்கள் என அருளிப்போனுன். அன்று முதல் இன்றளவும் நாங்கள் மிகவும் துன்பமுற்று, இன்று உங்கள் அருளால் மீண்டும் எம் வடிவுபெற்றேம். எங்களுக்குப் போக விடையருள வேண்டும்" என்று அவர்களை வணங்கித் தம் இடம் சென்றனர். இந்த அதிசயத்தில் மூழ்கின அவ்வந்தணர்கள் துலையும், வில்லுமாகத் தோன்றி எல்லோரையும் மகிழ்வித்தபடியால் அவ்விடத்திற்கு, துலைவில்லி மங்கலம் எனப்பெயர் சூட்டினர். அப்பால் அவர்கள் தொடங்க இருந்த வேள்வியைக் குறைவற நடத்தினுர்கள். தேவதைகள் ஒவ்வொருவரும் தங்கள் அவியைப் பெற்றுச் செல்ல, முடிவில் தோன்றிய தேவநாதனை அவ்வந்தணர்கள் அப்புண்யத் தலத்திலேயே

நித்யவாசம் செய்யும்படி வேண்ட, அத்தேவ நாதனும் அவ் வேண்டுகோளை ஏற்று, அங்கேயே அர்ச்சயாக எழுந்தருளினன்.

இத்தலத்திற்கு வடக்கே பத்மாகர தடாகம் என்ற ஒரு தாமரைப் பொய்கை இருந்தது. வேள்விச்சாலையில் எழுந்தருளிய பகவானை குளிர்நீராட்ட சுப்பிரபர் எழுந்தருளிவித்தார். அங்கே பகவானை உபசாரம் பண்ணி அவனை நோக்கி இப்பொய்கையில் செந்தாமரைகளையும் தேவரீர் திருக்கண் தாமரைகளையும் ஒத்திட்டு அழகு பார்த்து சேவிக்கும்படி இங்கும் நித்தியமாய் எழுந்தருள வேண்டுமென்று வேண்டினர். எம்பெருமானும் அவ்வந்தணனது பத்தியையும், ரசனையையும் பாராட்டி அவர் விருப்பத்தின்படி அரவிந்தலோசனன் என்னும் திருநாமத்தோடு அங்கு கோயில் கொண்டருளினர். பகவானின் நியமனத்தின்பேரில் அந்த சுப்பிரபர் நாள்தோறும் தாமரை மலர்களால் எம்பெருமானை அருச்சித்து வந்தார்.

முன் சுப்பிரபர் செய்த வேள்வியில் அசுவினி தேவதைகளுக்கு அவிசு கொடுக்கப்படவில்லை. அவர்கள் நான்முகனை நண்ணி, தங்களுக்கு வேள்வியில் அவியுணு கிடைக்கும்படி அருளவேண்டும் என்று வேண்டினர்கள். நான்முகன், "உங்களைப்போல் இரட்டையராக எம்பெருமான் கோயில்கொண்டிருக்கும் தொலைவில்லி மங்கலப்பதிக்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் தேவபிரானையும், அரவிந்தலோசனனையும் நோக்கித் தவம் செய்வீர்களானல் உங்கள் எண்ணம் ஈடேறும்" என்று கூறினர். அசுவினி தேவர்களும் அப்படியே இத்தலத்திற்கு வந்து செந்தாமரைப் பொய்கையில் நீராடி, இரு கோயில்களிலும் உள்ள எம்பெருமான்களைத் தொழுது தவம் செய்யத் தலைப்பட்டனர். இறுதியில் எம்பெருமான் அவர்கள் முன் தோன்றினர். அவனிடம் அசுவினி தேவர்கள் தங்கள் குறையைக்கூறி அதை நீக்க வேண்டுமென்று எம்பெருமானை வேண்டினர். இவர்கள் தவமுடிவைக் காணத் தேவரும், முனிவரும், அந்தணரும் கூடியிருந்தனர். எம்பெருமான் அவர்கள் பத்தியை மெச்சி, மற்றைய தேவர்களைப்போலவே அசுவினி தேவர்களுக்கும், வேள்வியில் அவியுணு அருளப்பட வேண்டுமென்று உறுதி செய்தான். தவிர அவர்கள் தினம் நீராடி பலன்பெற்ற அத்தாமரை தடாகத்திற்கு 'அசுவினி தீர்த்தம்' என்று பெயர் விளங்குக என்று அருளி இறைவன் மறைந்தான். அசுவினி தேவர்களும் மனநிறைவு பெற்றவர்களாய் தம்மிடம் சென்றனர்.

இமயத்திற்குத் தெற்கில், கங்கை நதிக்கரையில் அகளங்கம் என்று ஓர் ஊர் இருந்தது. அதில் சத்தியசீலன் என்ற ஒரு அந்தணன் இருந்தான். அவனுக்கு வன்னிசாரன், சுவர்ணகேது, விபீதகன் என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் விவாகமாகி இல்லறம் புக்கபின் சத்தியசீலன் மரணமானுன். அம்மூன்று பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் மிக நேசமுடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவர்களில் விபீதகனுக்கு எப்படியோ குஷ்டரோகம் ஏற்பட்டது. அவனுடைய மற்ற இரு சகோதரர்களும் எவ்வளவோ சிகிச்சை செய்த போதிலும் விபீதகனுடைய நோய் சிறிதும் குறையாமல், மாருக நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. சகோதரர்கள் மிகவும் வருந்தி கையற்று நிற்கையில் நாரத முனிவர் அவர்கள் முன் தோன்றினர். அவ்விரு சோதரரும் அவரை உபசரித்து வணங்கி விபீதகனுடைய நோயின் கொடுமையை அவர்க்கு உரைத்து, அது தீரும் உபாயம் கூறவேண்டும் என்று வேண்டினர். நாரதர் தன் ஞானக்கண்ணல் நோக்கி, 'இவன் முற்பிறவியில் அந்தணுகவே பிறந்தான். இருந்தும் குருவினுடைய பசுவை அபகரித்தான். குருவின் சாபத்தினல் இந்த நோயை அனுபவிக்கிருன். இதற்கு மருந்து கிடையாது. ஆனல் ஒரே ஒரு கழுவாய்தான் உண்டு. இவனை எப்படியாவது தென்திசையில் பொருநையாற்றின் கரையில் உள்ள துலைவில்லிமங்கலம் கொண்டு சென்று அங்குள்ள அசுவினி தீர்த்தத்தில் தினந்தோறும் நீராட்டி, அங்கு கோயில் கொண்டிருக்கும் தேவபிரான், அரவிந்தலோசனன் என்ற இரு எம்பெருமான்களை வழிபடச் செய்தால் இந்நோய் படிப்படியாக நீங்கும் என்று கூறி மறைந்தார். சகோதரர்கள் இருவரும் சிறிதும் மனம் சலிக்காமல் இமயத்திலிருந்து தென்கோடிக்கு வருவதில் உள்ள சிரமத்தையும் பொருட்படுத்தாமல் விபீதகனை அசுவினி தீர்த்தத்தில் நீராட்டி, கோயிலில் எம்பெருமானைச் சேவிக்கப் பண்ணினர். இப்படியே சிலநாள் நடக்க

திருக்கடிகை

(சோளிங்கர்)

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்-வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் தன்விண்ணகர்

—பேயாழ்வார்.

திருக்கடிகை என்னும் மங்களசாசனம் பெற்ற திவ்யதேசம் தொண்டை நாட்டிலுள்ள இருபத்திரண்டு திருப்பதிகளில் ஒன்று. இப்போது சோளிங்கர் என்றும், சோளிங்கபுரம் என்றும் வழங்குகிறது. இது சோளிங்கர் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒன்பது கல் தொலைவிலிருக்கிறது. திருத்தணிகையிலிருந்து 18 கல் தொலைவிலும், அரக்கோணத்திலிருந்து 17 கல் தொலைவிலும் இருக்கிறது. வடஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜாபேட்டைப் பகுதியில் உள்ளது.

இப்பதி சோழதேசம்போல் வளம் மிகுந்து நரசிங்கப்பிரான் எழுந்தருளுவதற்கு ஏற்ற இடமாக இருந்ததுபற்றி சோழசிம்மபுரம் என்ற பெயர் வழங்கலாயிற்று. திருமங்கை மன்னனும், பேயாழ்வாரும் தங்கள் பாசுரங்களில் கடிகை என்றே இந்த திவ்விய தேசத்தின் பெயரைக் கூறியிருக்கின்றனர். நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் பிள்ளைப் பெருமாளையங்காரும் இப்பெயராலேயே பாடியுள்ளார். பிரமகைவர்த்த புராணம் உத்தர காண்டத்தில் கடிகாசலம், சிந்தாமணி என்று இப்பதியிலுள்ள மலையைக் கூறப்பட்டிருக்கிறது. வடமொழியில் கடிகா என்றால் பல்கலைக்கழகம் என்று பொருள். இத்தலத்தில் ஒரு கடிகை நேரம் இருந்தாலும் அல்லது ஒரு கடிகை காலமாவது நினைத்தாலும் முத்தி கிடைக்கும் என்பது பெரியோர் கூற்று. மணவாளமாமுனிகள் வடதிருவரங்கம் என்று பெயரிட்டருளினர்.

இந்தப் பதியில் மூன்று கோயில்கள் உள்ளன. ஊருக்குள்ளே பக்தவத்சலப்பெருமாள் கோயில் இருக்கிறது. இங்கே உற்சவர் தான் எழுந்தருளியுள்ளார். கிழக்கு நோக்கிய சந்நிதி. இரண்டு நாலுகால் மண்டபங்களும் அழகிய கோபுரமும் முன்னால் காட்சியளிக்கின்றன. பக்தவத்சலர் சந்நிதிக்குப் பின்புறம் இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. ஒன்றில் ஆதிகேசவப்பெருமாள் சேவை சாதிக்கிறார். மற்றொன்றில் சோழபுரீசர் (சிவலிங்கம்) இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்போது ஒன்றுமில்லை. ஆண்டாள், ஆழ்வார்கள், உடையவர், மணவாளமாமுனிகள், தொட்டயாசாரியார் முதலியவர்களுக்குத் தனிச் சந்நிதிகள் இருக்கின்றன.

ஊருக்குத் தெற்கே அரக்கோணம் செல்லும் சாலை பக்கம் இரண்டு மலைகளில் யோக நரசிம்மர் கோயிலும், ஆஞ்சநேயர் கோயிலும் இருக்கின்றன. நரசிம்மர் கோயில் மலைமேல் சுமார் 400 அடி உயரத்தில் இருக்கிறது. வெகு தூரம் வரையில் நாலுபக்கத்திலும்

அவன் நோய் முற்றும் தீர்ந்து அவன்தன் பண்டைய வடிவைப் பெற்றான்.

[இரட்டைத் திருப்பதி எம்பெருமானின் இரு மூர்த்திகளின் திருநாமங்கள்-தேவபிரான், அரவிந்தலோசனன்; திருத்தாயார் திருநாமம் - கருத்தடங்கண்ணி; குப்தவிமானம்; தாமிரவருணிநதி - அசுவினி வருண தீர்த்தங்கள், கிழக்கே திருமுகமண்டலம் - நின்ற, வீற்றிருந்த திருக்கோலங்கள்; இந்திரன், வருணன், வாயு இவர்களுக்குப் பிரத்தியக்ஷம்]

இதில் இந்திரன், வருணன், வாயு இவர்களுக்கு பிரத்தியக்ஷமான வரலாறும், வருண தீர்த்தம் வந்த வரலாறும், கிடைக்கப் பெறவில்லை.

(தொடரும்)

தெரிகிறது. ஏறிச்செல்லப் படிகள் அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. வடக்கிலிருந்து படியேறி மேலே செல்லவேண்டும். கோயில் வாயிலைக் கோபுரம் அழகு செய்கிறது: எம் பெருமான் யோகபாவத்தில் வீற்றிருந்த திருக் கோலத்துடன் கிழக்கே திருமுகமண்டலமாக ஏமகோடி விமானத்தில் சேவை சாதித்தருளு கிருர். தாயார் சந்நிதி பெருமாள் சந்நிதிக்குத் தெற்கே இருக்கிறது; கிழக்கு நோக்கிய சந்நிதியே. இந்த மலையை மக்கள் பெரிய மலை என்கின்றனர். சின்னமலையில் சிறிய திருவடியின் கோயில் இருக்கிறது. நரசிம்மப் பெருமாள் சந்நிதிக் கெதிரிலுள்ளது இம்மலை.

சின்னமலை ஏறுவதற்கும் வடபுற மிருந்தே படிகள் இருக்கின்றன. மேலே கோயிலுக்கு முன்கோபுரமும் பின்னுல் ஒரு சிறு கோபுரமும் இருக்கின்றன. முதலில் மேற்கு நோக்கிய ஆஞ்சநேயர் சந்நிதி இருக் கிறது. ஆஞ்சநேயர் சங்குச் சக்கரம் தாங்கி நிற்பது தனிச்சிறப்புடையது. மற்றும், தெற்கு பார்த்த பள்ளிகொண்ட அரங்கநாதர் சந்நிதியும், மேற்கு நோக்கிய கோதண்ட ராமர் சந்நிதியும் இருக்கின்றன. இராம பிரான் சீதாபிராட்டி, இலக்குவருடன் எழுந் தருளி யிருக்கிருர்.

பெரியமலையில் எழுந்தருளியுள்ள பெரு மாளின் திருநாமம் **யோகநரசிம்மர்**. ஆழ்வார், **தக்கான் அக்காரக்கனி** என்றழைக்கிருர். தாயார் திருப் பெயர் **அமிருதவல்லி** என்பது.

இந்த திவ்விய தேசத்தில் பல சிறந்த தீர்த்தங்கள் இருக்கின்றன. ஊருக்குள்ளே பக்தவத்சலர் கோயில்முன் சீனிவாச புஷ் கரிணி இருக்கிறது. மலைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் தக்கான்குளம் (பிரமதீர்த் தம்) உள்ளது. அதற்குப் பக்கத்தில் பைரவ மலையில் ஹலாவிருத்த தீர்த்தம் (சிறிய நீர் வீழ்ச்சி)—பைரவ தீர்த்தம் (சுனை) இருக்கின் றன. பெரியமலைக்குப் படியேறும் இடத்தில் நரசிம்ம தீர்த்தம் என்ற திருக்குளம் இருக் கிறது. மலைமேல் கோபுரத்துக்குப் பக்கத் தில் அம்ச தீர்த்தம் உண்டு. கோயிலுக்குப் பின்புறம் சில படிகள் இறங்கிச் சென்றுல் திருவடி தீர்த்தம் என்ற ஒன்றிருக்கிறது. இதை மக்கள் வால்சுனை என்று வழங்குகின் றனர். சின்னமலையில் இராமர் சந்நிதிக் கெதிரில் அனுமத்தீர்த்தம் (குளம்) இருக்

சோளிங்கர் மலைக்கோயில்

கிறது. சின்னமலைக்குப் போகிற வழியில் நந்தவனத்திற்குமுன் பாண்டவ தீர்த்தம் (குளம்) இருக்கிறது. எல்லா கோயில்களுக் கும் வேண்டிய பூக்கள் இந்த நந்தவனத்தி லிருந்தே கிடைக்கின்றன. துறவி யொருவர் அங்கிருந்துகொண்டு நல்ல திருப்பணியைச் செய்து வருகிருர். பலவகைப் பூச்செடிகள் வைத்து நன்கு காப்பாற்றப்பட்டு வருகிறது. சோளிங்கர்—அரக்கோணம் சாலையில் நாலு கல் தொலைவில் மலைமேல் சேஷதீர்த்தம் இருக்கிறது. பாம்புபோல் தீர்த்தமிருக்கின் றது. வால் பக்கம் சனிக்கிழமைகளில் நீராடினுல் சர்ப்பதோஷம் நீங்கும் என்பர்.

சித்திரைப் பிரமோற்சவம், நவராத்திரி உற்சவம், தை 2, 3 தேதிகளில் மலைவலம் வருதல், முக்கோடி துவாதசியன்று கண் ணன் குளத்திற்கு எழுந்தருளி தீர்த்தம் சாதித்தல் முதலியவை முக்கியமான திரு விழாக்கள். ஊர்க்கோயிலில் மூன்று கால பூசையும், மலைக்கோயில்களில் இரண்டு வேளை பூசையும் நடைபெறுகின்றன. சின்ன மலையில் ஞாயிற்றுக்கிழமையிலும், பெரிய மலையில் வெள்ளிக்கிழமையிலும் திருமஞ்ச னம் நடைபெறும்.

இத்திருப்பதிக்கு **பேயாழ்வார்** இயற்பா மூன்ருந் திருவந்தாதியில் 'பண்டெல்லாம்' என்று தொடங்கும் பாசுரம் ஒன்று அருளி யுள்ளார். **திருமங்கையாழ்வார்** பெரிய திரு மொழியில்,

மிக்கானை மறையாய்
விரிந்தவிளக்கை என்னுள்
புக்கானைப் புகழ்சேர்
பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத்
தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
அடைந்துய்ந்து போனேனே

என்றும், "கண்ணார்கண்ணபுரம் கடிகை" என்றும், இயற்பா சிறிய திருமடலில் "காரார் குடந்தை கடிகை கடன்மல்லை" என்றும் கூறியிருக்கிறார். நம்மாழ்வார்,

எக்காலத் தெந்தையாய் என்னுள்
மன்னில்மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேதவிமலர் விழுங்கும் என்
அக்காரக்கனியே உன்னை யானே

என்ற பாசுரத்தை அருளியுள்ளார்.

வடமொழியில் பிரம கைவர்த்த புராணத்தில் உத்தரகாண்டத்தில் பிருகுபராசர சம்வாதத்தில் கடிகாசல மகிமையில் இப்பதியைப் பற்றி இருபத்திரண்டு அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இது கடிகாசல க்ஷேத்திர மான்மியம் என்ற உரை நடை நூலாகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் தம்முடைய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் இப்பதிக்கு ஒரு பாடல் ஓதியுள்ளார். இன்னும், மாறனகப்பொருள் திருப்பதிக் கோவை, சடகோபர் திவ்விய சரித்திரம் - நூற்றெட்டுத் திருப்பதிப்படலம், குரவை-இராமானுஜதாசரின் நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ், தென்திருப்பேரை அனந்தகிருஷ்ணய்யங்காரின் திவ்விய தேசப் பாமாலை, அனுமந்தநகரம் - சீனிவாசய்யங்காரின் "திருக் கடிகை நரசிங்கப்பெருமாளந்தாதி" முதலியனவும் இப்பதியைப்பற்றி விதந்தோதியுள்ளன. எறும்பிலப்பன், வடமொழியில் அமிர்த பலாவல்லி சதகம் என்ற 100 சுலோகங்களையுடைய ஒரு நூலை இயற்றியுள்ளார்.

எறும்பிலப்பனும், தொட்டயாசாரியரும் அவதரித்த தலமும் இதுவே. மேலும் உடையவர், நாதமுனிகள் இவர்களால் உகக்கப்பட்டதுமாகும். தீராநோய், மனக்குறை, கிரகதோஷம் முதலியன உடையவர்கள் தக்கான் குளத்தில் நீராடி பெரிய மலைக்கோ, சின்னமலைக்கோ சென்று 108 முறை வலம் வந்து, பல நாட்கள் அங்கே தங்கியிருந்து தங்கள் சொப்பனத்தில் சாதிக்கிறபடி பிராத்தனைகள் நிறைவேற்றி நலன் பெற்றுச் செல்கின்றார்கள். இவைகள் நாள்தோறும் நாம் கண்கூடாக அங்கே பார்க்கும் காட்சிகள். மலைவலம் வருவோர் கூட்டமும், பேய் பிசாசு பிடித்தோர் ஆட்டமும், வழிபடுவோர் கூட்டமும் இடைவிடாது இருந்து வருவது எம்பெருமான், ஆஞ்சநேயர் இவர்களின் மகிமையை விளக்கி நிற்கின்றது.

சோளிங்கரில் குளக்கரைப் பாறையொன்றில் முதற்பராந்தக சோழனுடைய கிரந்த - தமிழ்க் கல்வெட்டு இருக்கிறது. குளத்தைப் பாதுகாக்க நெல் வயல் வழங்கப்பட்டதை இது அறிவிக்கிறது. நரசிம்மர் கோயிலுக்கு வடகிழக்கே ஒரு கல்லில் தமிழ்க்கல்வெட்டும், மலைமேல் ஆஞ்சநேயர் கோயிலிலுள்ள பாறையில் விஜயநகரமன்னன் இராமதேவமகாராயரின் சகம்-1542 (கி. பி. 1620)-ஆம் ஆண்டுத் தெலுங்குக் கல்லெழுத்தும் காணப்படுகின்றன. பிற்காலத்தில் சோளிங்கரில் ஒரு போர் நடந்ததென்பது வரலாறறிந்ததொன்று.

கன்னலங் காவுங் கழனியுஞ்
சூழ்தென் கடிகையில்வாழ்
மன்னனக் காரக் கனியெம்
பிரான்றன் மணிவரைவாய்
நன்னலங் காவலர் போனவெந்
தீச்சுர நாடியதற்
கின்னலெய் தாதிங் கெனைத்தெருட்
டாநிற்ப ரேழையரே

—மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்

சீர்அருளால் நம்மைத் திருத்திநாம்
முன் அறியாக்
கூர்அறிவுந் தந்துஅடிமை
கொண்டதற்கே—நேரே
ஒருகடிகை யும்மனமே
உன்னுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத்
தான்.

—பிள்ளைப்பெருமாளையங்கார்

திருஈங்கோய்மலை

வானத் துயர்தண் மதிதோய்
சடைமேல் மத்த மலர்சூடித்
தேனெத் தனமென் மொழிமான்
விழியாள் தேவி பாகமாக்
கானத் திரவி லெரிகொண்
டாடுங் கடவு ளுலகேத்த
ஏனத் திரள்வந் திழியுஞ்
சார லீங்கோய் மலையாரே

—திருஞானசம்பந்தர்.

சோழநாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள பாடல்பெற்ற பதிகளில் ஒன்று திரு ஈங்கோய்மலை என்பது. காலையில் கடம்பர் கோயிலையும், நடுப்பகலில் இரத்தினகிரியையும் மாலையில் திருஈங்கோய்மலையையும் வழிபடுதல் சாலச் சிறந்ததென்று பெரியோர் கூறியிருக்கின்றனர். திரு ஈங்கோய்மலை இப்போது திருவிங்கநாதமலை, திருவேங்கிமலை என்று மக்களால் வழங்கப்படுகிறது. இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிரிப் பகுதியில் இருக்கிறது. குளித்தலை புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே ஒருகல் தொலைவிலுள்ள மணத்திட்டை என்ற இடத்தில் பரிசில் ஏறி காவிரியாற்றைக் கடந்து மறுகரைக்குச் சென்று திரு ஈங்கோய் மலையை அடையலாம். அல்லது திருச்சிராப்பள்ளியிலிருந்து சேலம் செல்லும் நெடுவழியில் 27-ஆவது கல்லில் இருக்கும் இத்தலத்தை பஸ் மூலம் சேரலாம்.

கோயில் மலைமேல் இருக்கிறது. வெகு தூரம் வரை அழகிய காட்சியளிக்கிறது. ஊர் ஒருகல் கிழக்கே இருக்கிறது. மலையருகே குடியிருப்பு இல்லை. மலைமேல் திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. காவிரியாற்றின் வடகரையில் செல்லும் நெடுஞ்சாலை பக்கம் தெற்கிலிருந்து மலை ஏறவேண்டும். உச்சி செல்ல சுமார் 500 படிகள் இருக்கின்றன. கோயில் பிரகாரத்தில் விநாயகர், முருகன் சந்நிதிகள் உள்ளன. சுவாமி, அம்பாள் சந்நிதிகள் கிழக்கு நோக்கியிருக்கின்றன. இவைகளுக்கிடையே சண்டேசுரர், தண்டபாணி சந்நிதிகளும் உள்ளன.

சுவாமி பெயர் மரகதாசலேசுவரர்; அம்பிகையின் திருநாமம் மரகதாம்பிகை. இறைவன் பச்சை மரகத இலிங்கமூர்த்தம்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்குப் பதினொரு பாடல்களுடைய ஒரு பதிகம் பாடியிருக்கின்றனர். "வினையாயின தீர்த்தருளே புரியும் விகிர்தன்......... எனையாளுடையான் உமையாளோடும் ஈங்கோய் மலையாரே" என்றும், "சிறை வண்டறை பூஞ்சாரல் ஈங்கோய் மலையாரே" என்றும், "எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய் மலையீசன்" என்றும் அழகுபடக் கூறியிருக்கிறார்.

திருநாவுக்கரசர் "இடைமருது ஈங்கோய்.... கயிலாயநாதனையும் காணலாமே" என்று ஓதியுள்ளார். இத்தலத்தில் சுந்தரருக்குப் பொன்னுக்காகப் புளியங்காய் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. "சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுகாண் அம்மானை. சுந்தரருக்குப் புளியங்காய் ஈந்ததுவே யாமாயின் அத்தனையும் சொர்ணங்காணம்மானை" என அம்மானை கூறுகிறது.

மாணிக்கவாசகர், "ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி" என்றும், "ஈங்கோய்மலையில் எழிலது காட்டி" என்றும் கூறியிருக்கிறார்.

நக்கீரதேவ நாயனார், "ஈங்கோய்மலை எழுபது" என்ற அரிய நூலை இயற்றியிருக்கின்றனர். எழுபது பாடல்களில் 15 பாடல்கள் இப்போது கிடைக்கவில்லை. இந்நூலில் குறமகளிர் செயல்களும், மந்திகள் விளையாட்டும்; மற்றும் இயற்கைக் காட்சிகளும் மிகவும் அழகுபடக் கூறியுள்ளார். எடுத்துக் காட்டாக ஒருபாடல்:

சந்தனப்பூம் பைந்தழையைச்
செந்தேனில் தோய்த்தியானை
மந்தண் மடப்பிடியின்
வாய்க்கொடுப்ப—வந்ததன்
கண்களிக்கத் தான்கலிக்கும்
ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு.

ஒவ்வொரு பாடல் இறுதியும் மலை, குன்று,

சிலம்பு, வெற்பு, பொருப்பு, கடறு, வரை என்ற ஒன்றால் முடிகிறது. அண்மையில் திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் இயற்றிய 'ஈங்கோய் அந்தாதி' என்ற நூலும் இத்தலத்துக்கு அணி செய்கின்றது.

கடம்பந்துறை, வாட்போக்கி, மரகதமலை இம்மூன்றையும் ஒரே நாளில் மக்கள் வணங்க வேண்டுமென்பதன் காரணம் அவை சோமாஸ்கந்த மூர்த்தமாய் அமைந்திருப்பதே. கந்த ரூபமாகக் கடம்பந்துறையும், சிவரூபமாக வாட்போக்கியும், சக்தி ரூபமாக ஈங்கோய் மலையும் விளங்குவதாகக் கூறப்படுகிறது. அகத்தியர் ஈ உருவத்துடன் இம்மலையில் எழுந்தருளிய பெருமானை வழிபட்டதால் ஈங்கோய் மலை என்ற பெயர் ஏற்பட்டது. மேலும் இங்கே உமை, வீதிகோத்திரன், இயமன், இந்திரன், நவசித்தர்கள் எல்லாம் பூசித்துப் பேறு பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தல விருட்சம் புளியமரம். இப்பதியில் சுத்தபுஷ்கரிணி, காவிரி, சர்ப்பநதி, இயம தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், அமிர்தபுஷ்கரிணி முதலிய தீர்த்தங்கள் இருக்கின்றன. பங்குனி மாதத்தில் பெருவிழா நடைபெறுகிறது. கோயிலுக்கு விமானம் கோபுரம் முதலிய கட்டப்பெற்று அண்மையில் கும்பாபிஷேகம் நடந்தது. இன்னும் மதில்கள், பிரகாரங்கள் இவை திருப்பணி நடந்து வருகிறது.

கொஞ்சம் தொலைவிலுள்ள திருலிங்க நாதமலை என்ற ஊர்க் குடியிருப்பின் நடுவில் சிவன் கோயில் அழகிய கோபுரத்துடன் விளங்குகிறது. அங்குள்ள இறைவன் இறைவியின் திருநாமங்கள் கைலாசநாதர், கருணை கடாட்சி என்பன.

முகம்மதிய வரலாற்றாசிரியர்கள் திரு ஈங்கோய்மலையை மர்ஹத்பூர் என்றும், விஜய நகர ஆட்சியில் 'மரகத நகரம்' என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. மரகதமலை என்ற பெயரே அப்படி வழங்கக் காரணமாயிருந்திருக்கிறது. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் விஜயநகராட்சியில் இவ்வூர், ஒரு பகுதியின் தலைநகராகவும் இருந்திருக்கிறது.

மலைக்கோயில் கோபுரத்தின் கிழக்குப் பக்கத்திலும், சுவாமி கோயில் கர்ப்பக்கிரகத் தென் வடபுறச் சுவர்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. கோபுரத்திலுள்ளது விஜய நகரமன்னர் கிருஷ்ணதேவ மகாராயரின் கி.பி. 1517-ஆம் ஆண்டுக் கல்வெட்டு. கிருஷ்ண வேணி ஆற்றங்கரையில் அவ்வரசர் தங்கியிருந்தபோது மகரசங்கராந்தியில் உண்டவல்லி அனந்தசயனர், விஜயவாடா மல்லிகார்ச்சுனர் இவர்கள் திருமுன்னர் சோழ மண்டலத்திலுள்ள பல சிவ விஷ்ணு கோயில்களுக்காக பதினாயிரம் வராகன் பொன் சர்வமானியமாக விட்டதைக் குறிக்கிறது. அதில் திரு ஈங்கோய்மலைக் கோயிலும் இடம் பெற்றிருக்கிறது. கர்ப்பக்கிரகச் சுவரிலுள்ள கல்வெட்டு இராஜேந்திர சோழன் காலத்தது. "தென் கரை இராசாதிராசன் சூரலூர் கூற்றம் உடைய மரகதாசலமுடைய நாயனாருக்கு திருவிளையாட்டுக்காகவும், ஸ்தானிகம், பிராமணாள், பண்டாரி, மெய்காவல் முதலான பரிசனங்களுக்கும் சர்வமானிய பூதான சாசனம் செய்து கொடுத்ததை" த் தெரிவிக்கிறது.

கண்கொள்நுதலார் கறைகொள்மிடற்றார்
கரியின்உரி தோலார்
விண்கொள்மதிசேர் சடையார் விடையார்
கொடியார் வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும்
பெம்மான் எமையாள்வார்
எண்கும்அரியுந் திரியுஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே

—திருஞானசம்பந்தர்.

வான மதிதடவல் உற்ற இளமந்தி
கான முதுவேயின்க ண்ணேறித்—தானங்
கிருந்துயரக் கைநீட்டும் ஈங்கோயே நம்மேல்
வருந்துயரந் தீர்ப்பான் மலை

—நக்கீரதேவ நாயனார்.

சிக்கல் சிங்காரவேலர் கோயிலில் இலட்சார்ச்சனை மகோத்சவம் 27-1-60 முதல் தொடங்கி 12-2-60 வரை நடைபெறும்.

திருவெம்பாவை - திருப்பாவை மாநாடுகள்

தேதியும் இடமும்	தலைவர்	சொற்பொழிவாளர்கள்
	திரு.	திரு.
1-1-60 சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம். ...	சந்தரகாந்த சாஸ்திரியார், எம்.ஏ.	சவுந்தரம்கைலாசம், கீ. இராமலிங்கம், எம்.ஏ., விசுவநாத சிரௌதிகள்.
2-1-60 ,, ,,	கே பாலசுப்பிரமணிய ஐயர், பி.ஏ.பி.எல், எம்.எல்.சி.	எஸ். இராஜலட்சுமி, பி.ஏ, (ஆனர்ஸ்), நா. ஞானசம்பந்தம், பி.ஏ (ஆனர்ஸ்), சாமிநாத சிவாசாரியார்.
3-1-60 ,, ,,	ஆர். சதாசிவம், பி.ஏ.எம்.எல்.	டி. என். அநந்த நாயகி, பி.ஏ.பி.எல்., டி. ஏ. வி. நாதன், டி. என். கோபால சர்மா.
4-1-60 ,,	கனம் எம். பக்தவத்சலம், பி.ஏ.பி.எல்.	ஆர். சரோஜினி, எம்.ஏ., பி.ஓ.எல்., டி. முத்து கண்ணப்பர், பி.ஏ,, எம்.எல்.சி., இராமா சாஸ்திரிகள்.
31-12-59 பெருஞ்சேரி, ஸ்ரீ வாகீசுவரர் கோயில்.	டி. இராமாநுஜாசாரியார், பி.ஏ.பி.எல்.	வி. சா. குருசாமி தேசிகர், ம. சிவசம்பு, தி. இராமலிங்கம், டி. ஆர். கமலாமூர்த்தி, (கதாகாலட்சேபம்)
2-1-60 திருவாதவூர், திருமறைநாத சுவாமி கோயில்.	அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்.	ஆறுமுகநாவலர், கோ. சிவஞானம், ஏ. எஸ். அரங்கநாதாச்சாரியார்.
2-1-60 தல்லாகுளம், பிரசன்ன வெங்கடாஜலபதி கோயில்.	அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்.	ஆறுமுகநாவலர், அய்யம்பெருமாள் கோனர். வெ. சந்தானம், கோ. சிவஞானம், அரங்கநாதாச்சாரியார்
31-12-59 தேரழுந்தூர், ஆமருவிப் பெருமாள் கோயில்.	மு. அருணசலம், எம்.ஏ,	மு. இரத்தினதேசிகர், கே. எம். பாலசுப்ரமணியம், பி.ஏ.பி.எல். என். எஸ். தாத்தாச்சாரியார்.
5-1-60 காளையார்கோயில், சொர்ண காளீசுவரர் கோயில்.	சேவு. மெய்யப்ப செட்டியார்.	வீரசிவம். பாபு. நாராயணசுவாமி, எஸ். முத்து, க. சேதுராமலிங்கன்.

தேதியும் இடமும்	தலைவர் திரு.	சொற்பொழிவாளர்கள் திரு.
1-1-60 சிவகெங்கை, விசுவநாத சுவாமி கோயில்.	வி. நல்லசாமிபிள்ளை, எம்.ஏ., பி.எல்.	ஆறுமுகநாவலர், எஸ். இராமச்சந்திரபத்தர், பி.ஏ. என். சுப்பையாபிள்ளை, எம்.ஏ. வி. ஆர். நாகராஜன், பி.ஏ.பி.டி.
10-1-60 நெற்குப்பை, மனமொத்த கண்டீசுவரர் மரகதவல்லி அம்மாள் ஆலயம்.	கே. ஆர். ராமாமி ...	கா. தேசிகன், நாராயணசாமி, பஞ்சநதம் பிள்ளை, அம்பலவாணன்.
13-1-60 சிங்கம்புணரி, சேவுகப் பெருமாள் அய்யனூர் கோயில்.	டாக்டர் கே. எஸ். எஸ். சர்மா.	பஞ்சநதம் பிள்ளை, அம்பலவாணன், பி. பாண்டியன், பி.ஏ., பி.டி.
9-1-60 திருக்கோஷ்டியூர். சௌமிய நாராயணப்பெருமாள் கோயில்.	பி. துரைக்கண்ணு, எம்.ஏ., எம்.ஏ., எல்.டி.	ஐயன்பெருமாள் கோனார், ஆர். பஞ்சநதம் பிள்ளை, ஆர். அரங்கராஜன், பி.ஏ., பி.டி.
9-1-60 திருச்சிராப்பள்ளி, தாயுமான சுவாமி கோயில்.	கனம் அமைச்சர் எம். பக்த வத்சலம், பி.ஏ.பி.எல்.	அ. நடேச முதலியார், கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.
4-1-60 மேலூர், கல்யாணசுந்தரேசு வரர் கோயில்.	எஸ். பூவணலிங்கம், பி.ஏ.	எஸ். இராமச்சந்திரன், பி.ஏ. சடகோபன், பஞ்சநதம் பிள்ளை.
2-1-60 தல்லாகுளம், பிரசன்ன வெங்கடாஜலபதி கோயில்.	அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்.	ஐயன்பெருமாள் கோனார், ஆறுமுக நாவலர், சந்தானம்.
8-1-60 திருவரங்கம், அரங்கனாத சுவாமி கோயில்.	கனம் அமைச்சர் எம். பக்த வத்சலம், பி.ஏ., பி.எல்.	உ. வே. எம்பார் விஜயராக வாச்சாரியார், அ. நடேச முதலியார்.
10-1-60 திருவலிவலம், இருதய கமலநாதர் கோயில்.		கே. எம். வெங்கடராமையா, எம்.ஏ., பி.ஓ.எல்., வை. மு. சண்முகதேசிகர், வி. பக்கிரிசாமி: பி.ஏ. (ஆனர்ஸ்) பி.டி.
10-1-60 சீகாழி, சட்டநாதசுவாமி கோயில். திருஞானசம்பந்தர் கோயில்.	R. ஹரி ஹர ஐயர், பி.எஸ்.ஸி, பி.எல்.	ஜி. கலியாணம் பிள்ளை, எம்.ஏ., தி. செ. வெங்கடராம செட்டியார், வை. சுந்தரேசவாண்டையார், சொ. சிங்காரவேலனார்.
11-1-60 ,, ,,	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்.	சௌந்தரம் கைலாசம், ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல்., முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,

தேதியும் இடமும்	தலைவர்	சொற்பொழிவாளர்கள்
	திரு.	திரு.
10-1-60 காஞ்சீபுரம், ஏகாம்பரநாதர் கோயில்.	இ. வி. சோமசுந்தரம், பி.ஏ. பி. & பி.ஏ.	திருஞானசம்பந்த முதலியார், கே. கலியாணசுந்தரம், சி. ஆர். தியாகராஜப் பிள்ளை.
10-1-60 திருமீயச்சூர், மேகநாத சுவாமி கோயில்.		மு. இரத்தின தேசிகர், என். இலட்சுமிநரசிம்மன், ஏ. வி. பக்தவத்சலம்.
10-1-60 தேவூர், மதுரபாசிணி உடன்கூடிய தேவபுரீசுவரர் கோயில்.	எஸ். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.டி.	நா. ஸ்ரீ காந்தராமாநுஜம். க. வெள்ளைவாரணன்.
10-1-60 பெரம்பூர், சுப்பிரமணிய சுவாமி கோயில்.	சிவத்திரு. மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்.	ம. சிவசம்பு, தி. இராமலிங்கம்.
	தவத்திரு. மாணிக்கவாசக சுவாமிகள்.	மு. க. தங்கவேலனார், எம்.ஏ., R. சண்முகசிகாமணி, M.A. (பரிசு வழங்கினார்)
11-1-60 தெற்குப் பொய்கைநல்லூர், சுவர்ணபுரீசுவரர் கோயில்.	......	கு. மாணிக்கவாசகம், ஆ. வே. பக்தவத்சலம்.
10-1-60 தஞ்சை, பரிதிநியமம், பாஸ்கரேசுவரர் கோயில்.	டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.	திலகவதியார், சிவராசன், கோமதி.
10-1-60 திருவாஞ்சியம், வாஞ்சிநாதர் கோயில்.	கே. வெங்கட்ராமன், எம்.ஏ., எல்.டி.	வை. பக்கிரிசாமி, தி. சோம. சுவாமிநாதபிள்ளை, ஆ. சுவாமிநாதனார்.
1-1-60 காஞ்சிபுரம், தேவராஜசுவாமி கோயில்.	டாக்டர் பி. எஸ். சீனிவாசன்.	உ. வே. டி. இராமசுவாமி அய்யங்கார். உ. வே. டி. நரசிம்மதாதாசாரியார், திருஞானசம்பந்த முதலியார்.
6-1-60 அம்பல், பிரம்மபுரீசுவரர் கோயில்.	எச். சிவராஜவேலாயுதம் பிள்ளை.	இரத்தினதேசிகர், ஸ்ரீகாந்தராமாநுஜம்.
11-1-60 திருக்கண்ணபுரம், சௌரிராஜப்பெருமாள் கோயில்.	......	எஸ். வரதராஜ அய்யங்கார், கே. மாணிக்கவாசகம்.
10-1-60 திருவாழ்கொளிப்புத்தூர், மாணிக்கவாசகசுவாமி கோயில்.	எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர், பி.ஏ.பி.எல்.	பு. ர. சுவாமிநாதன், எம்.ஏ. எல்.டி., கே. கோவிந்தசாமி பிள்ளை, ஆ. இராமசாமி பிள்ளை, எம்.ஏ., எல்.டி., எம். பூவராகம் பிள்ளை.
13-1-60 அம்பாசமுத்திரம், கிருஷ்ணசாமி கோயில்.	அ. சீனிவாசராகவன், எம்.ஏ.	கு. நா. சிவராமகிருஷ்ணன், பி.ஓ.எல். (ஆனர்ஸ்) பி.டி.

தேதியும் இடமும்	தலைவர் திரு.	சொற்பொழிவாளர்கள் திரு.
12-1-60 திருக்கொள்ளம்பூதூர், வில்வாரண்யேசுவரர் கோயில்.	பி. எஸ். வெங்கடகிருஷ்ண பிள்ளை.	ஜி. தனவேல் பிள்ளை, த. சா. இராமராவ், என். எஸ். தாதாச்சாரியார், வேல்சம்பந்தமூர்த்தி, கா. கோமதி.
30-12-59 சாத்தூர், வெங்கடாஜல பதிகோயில்.	எஸ். ராமசாமி நாயுடு. எம்.ஏ., பி.எல்,, எம்.எல்.ஏ.	அரங்கநாதாச்சாரியார், ஐயன்பெருமாள் கோனார்.
8-1-60 காமாட்சிபுரம், கோபிநாத சுவாமி கோயில்.	ஏ. வெங்கடாஜலம், பி.எஸ்ஸி., பி.எல்.	பி. கே. சண்முகநாதன், முருகானந்த அடிகள்.
31-12-59 திண்டுக்கல், காளகஸ்தீசுவரர் கோயில்.	அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்.	ஏ. எஸ். அரங்கனாதாச்சாரியார், கோ. சிவஞானம்.
12-1-60 திருமருகல், இரத்தினகிரீசுவரர் கோயில்.	.....	வை. மு. சண்முகதேசிகர், எஸ். வரதராஜ அய்யங்கார், ஏ. சுவாமிநாதன், எஸ். கணபதி தேசிகர், கோ. சிவஞானம்.
13-1-60 சிதம்பரம், தில்லையம்மன் கோயில்.	ஆர். ஏ. வரதராஜன், பி.ஏ. ...	ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை, எஸ். அரங்காச்சாரியார், ச. தண்டபாணி தேசிகர்.
9, 10-1-60 பெரியகுளம், வரதராஜப்பெருமாள் கோயில்.	ஏ. சக்கரை, பி.ஏ., பி.எல். ...	ஏ. வி. சங்கரன், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ. கே. வி. சேஷாசல சர்மா, வீரசிவம், வி. சிவக்கொழுந்து, அலங்காரப்பட்டர்.
12-1-60 செம்பியன்மாதேவி, கைலாசநாதசுவாமி கோயில்.	ஏ. ஆர். கோவிந்தசாமி பிள்ளை.	கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.
11-1-60 திருப்புகலூர், அக்னீசுவரர் கோயில். (முற்பகல்)	ஜி. இராமாநுஜ முதலியார் ...	கே. ஆர். சம்மந்தம், எம்.பி. ஜி. நாராயணசாமி நாயுடு, எம்.எல்.ஏ. கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ.பி.எல்., சி. முத்தையா பிள்ளை, எம்.எல்.ஏ. மு. இரத்தின தேசிகர், கே. சோமசுந்தர தேசிகர், எம்.ஏ
(பிற்பகல்)	தண்டபாணி செட்டியார் ...	ஆர். கிருஷ்ணசாமி கோபாலர். M.L.A. அய்யாக்கண்ணு, M.P. பி. ஆர். இராமாமிருதத் தொண்டைமான், M,L.A., கோ. சிவஞானம், கோமதி.

தேதியும் இடமும்	தலைவர்	சொற்பொழிவாளர்கள்
	திரு	திரு
10-1-60 அம்பாசமுத்திரம், ஸ்ரீ காசி நாதசுவாமிகோயில்.	... ..	பட்சிராஜன், பி.ஏ,, பி.எல்., முத்தரசு, எம்.ஏ., பி.டி.
29-12-59 தேரழுந்தூர், ஸ்ரீ ஆமரு விப்பெருமாள்கோயில்.	......	அனந்தராம தீக்ஷிதர்.
30-12-59 ,, ,,	......	பஞ்சு சாஸ்திரிகள்.
31-12-59 ,, ,,	மு. அருணசலம், எம் ஏ. ...	மு. இரத்தின தேசிகர்.
12-1-60 களக்காடு, ஸ்ரீ சத்தியவா கீசுவரர்கோயில்.	ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.	பூ. சாம்பசிவனர்,எம்.ஏ,பி.டி. ஞான உலகம்மாள், பொ. முத்தரசு, எம்.ஏ., பி.டி.

திருவேடகம்—ஏடகநாதசுவாமி கோயில்—தேவாரக்கல்வெட்டுத் திறப்புவிழா.

செட்டிகுளம் பால தண்டாயுதசுவாமி கோயில்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், செட்டிகுளம் ஸ்ரீ ஏகாம்பரேசுரர்—தண்டாயுத பாணி கோயிலில் அருள்நெறி திருக்கூட்ட சமயச்சொற்பொழிவுகள் 30—1—57-லிருந்து ஒவ்வொரு அமாவாசை தினமும் நடைபெற்று வருகின்றன. 29—12—59-ல் மூன்ருவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. 16—10—59 முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலே 7 மணி முதல் 8 மணி வரை வழிபாடு நடந்துவருகிறது. மண்டகப்படிதாரர்களின் ஒத்துழைப்போடு தைப்பூசத்திருவிழா 2—2—60 முதல் 14—2—60 வரை நடக்கவிருக்கிறது.

குத்தாலம், ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 28—1—60-ல் தொடங்கி 1—2—60-ல் சிறப்பாக நடைபெற்றது.

திருவேடகம், ஸ்ரீ ஏடநாதசுவாமி கோயிலில் தல தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா மேற்படி கோயில் அறங்காவலர் திரு உ. ராம. மெ. சு. செ. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தலைமையில் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் 3—1—60-ல் திறந்து வைக்கப்பெற்றது. அத்துடன் திருமுறைக் கோயில் திறப்புவிழாவும் நடைபெற்றது.

திருமண்டங்குடி, அரங்கநாதப்பெருமாள் கோயிலில் ஜீர்ணோத்தாரண, அஷ்டபந்தன மகா சம்ப்ரோக்ஷணம் 22—1—60-ல் தொடங்கி 25—1—60-ல் சிறப்பாக நடைபெற்றது. 25-1-60 காலை தொண்டரடிப்பொடியாழ்வார் மங்களசாசனம் செய்துள்ள திருமாலை, திருப்பள்ளி எழுச்சிப்பாசுரக் கல்வெட்டுகளை அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ், அவர்கள் திறந்து வைத்தார்கள்.

திருப்பாம்புரம் ஸ்ரீ சேஷபுரீசுவரசுவாமி கோயிலில் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 27—1—60-ல் தொடங்கி 1—2—60-ல் சிறப்பாக நடைபெற்றது.

எண்கண், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் தைப்பூச விழா 1—2—60 முதல் தொடங்கப்பெற்றிருக்கிறது. 11—2—60 அன்று தைப்பூச விழா. 14—2—60 வரை தைப்பூச விழா தொடர்ந்து நடைபெறும்.

8—2—60 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு மேற்படி கோயிலில் ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் முதன் முதலாகத் திருமுறைக்கோயில் பிரதிஷ்டை சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் நிகழ்த்தப் பெறும்.

திருவெறும்பியூர்

இன்பமும் பிறப்பும் இறப்பின் ஞெடு
துன்பமும் உடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு
இன்பனுகும் எறும்பியூர் ஈசனே.

—திருநாவுக்கரசர்.

இறைவன் எண்பத்து நான்கு இலட்சம் உயிர்களைப் படைத்து அவற்றுள் உயிர்க்குயிராய் நின்று காக்கிருன் என்பதைத் திருஞானசம்பந்தர், "உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனிபேதம் நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்ருன்" என்று அழகுபடக் கூறியிருக்கிருர். மக்களேயன்றி, யானை, சிலந்தி, கரிக்குருவி, நாரை முதலிய விலங்கு பறவைகளும் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றன என்ற செய்தியைப் புராணங்கள் மூலம் அறிகிருேம். "அத்தி முதல் எறும்பீருன உயிர் அத்தனைக்கும் சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகன்" என்றும், "யானைமுதல் எறும்பீருய ஊனமில்யோனியின்" என்றும் பெரியோர் அருளியுள்ளனர். மிகப் பெரிய உயிர் யானை; மிகச் சிறியது எறும்பு. யானை, திருவானைக்கா இறைவனை வழிபட்டுப்பேறு பெற்றது. அது போல், எறும்பும் கடவுளை வழிபட்டுத் திருவருள் பெற்ற இடம் திருவெறும்பியூர் என்பது.

இத்தலம் சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் பாடல்பெற்ற சிவப்பதிகளில் ஒன்று. திருச்சிராப்பள்ளியிலிருந்து ஐந்து கல் கிழக்கே யுள்ளது. திருவெறும்பூர் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து அரை கல் தொலைவிலிருக்கிறது. இவ்வூருக்கு மணிகூடம், இரத்தினகூடம் என்ற பெயர்களைப் புராணம் கூறுகிறது. தேவாரத்தில் எறும்பியூர் என்றே சொல்லப்படுகிறது. தேவர்கள் எறும்பு உருவத்தில் இறைவனை வழிபட்டதால் திருஎறும்பியூர் என்ற பெயர் உண்டாயிற்று.

கோயில் சுமார் நூறு அடி உயரமுள்ள சிறுமலைமேல் இருக்கிறது. 114 படிகள் ஏறி மலை உச்சியை அடையலாம். வடக்கு வாயில் வழியாகத்தான் கோயில் உள்ளே போக வேண்டும். உள்ளே நுழைந்ததும் வெளிப் பிரகாரத்தில் அம்பாள் சந்நிதி இருக்கிறது; தெற்கே பார்க்க இருக்கிறது. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கி யிருக்கிறது. உட்பிரகாரத்தில் விநாயகர், முருகர், இலக்குமி, நால்வர் முதலியோர் எழுந்தருளியுள்ளனர். இத்தலத்து விநாயகருக்கு, பாலசந்திர விநாயகர் என்று பெயர். இறைவன் திருநாமம் எறும்பீசர் என்பது; தேவியின் திருப்பெயர் நறுங்குழல் நாயகி.

திரிசிரனின் சகோதரன் கரன் என்பவன் எறும்பு வடிவத்தில் இங்கு பூசித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனல் தலபுராணத்தில் இந்திரன் எறும்புருக்கொண்டு இறைவனை வழிபட்டான் என்று கூறப்பட்டிருக்கிறது.

இத்தலத்தில் பிரமதீர்த்தம், பதுமதீர்த்தம் (இலக்குமி தீர்த்தம்), மதுதீர்த்தம், குமாரதீர்த்தம், சூரியசந்திர தீர்த்தங்கள், கல்யாணதீர்த்தம் முதலிய இருக்கின்றன. பிரமதீர்த்தம் கோயிலுக்கெதிரில் மலையடிவாரத்தில் உள்ள திருக்குளம். அதன்பக்கத்தில் மலை ஓரமாக நந்தவனம் இருக்கிறது. பல வகைப்பூச்செடிகள் வைத்து நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மலைமேல் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமான் திருமுடி சிறிது சாய்ந்திருக்கிறது. மடைப்பள்ளியருகிலும், பிரகாரம் தென்மேற்கு மூலையிலும் சுரங்கங்கள் இருக்கின்றன. மலைமேலேயே கோட்டை போல மதில்கள் இருக்கின்றன. திருச்சிராப்பள்ளி முற்றுகை காலத்தில் இது பாசறையாகப் பயன்பட்டதாகத் தெரிகிறது. இந்தியத் தொல்பொருள்துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மலைமேல் கோயிலுக்குச் சற்று கீழே வடபுறம் மண்டபத் தூண்கள் நிற்கின்றன. முன்னல் அம்மன்கோயில் இங்கு இருந்ததாக எண்ணப்படுகிறது. அதற்கும் சற்று கீழே பாறையில் கைலாசநாதர்கோயில் இருக்கிறது. வடக்குத் தெருவில் கட்டைக்கழிச் சுவாமிகள் என்ற பெரியாரின் சமாதி இருக்கிறது. இவர் பல அற்புதங்கள் நிகழ்த்தினராம். மலைக்கோயிலில் நான்கு கால பூசை,

வைகாசி மாதத்தில் பெருந்திருவிழா நடைபெறுகிறது.

திருநாவுக்கரசர் இத்தலத்திற்கு திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் ஆகிய இரு பதிகங்களை ஓதியுள்ளார்; இருபது பாடல்கள் இருக்கின்றன. திருக்குறுந்தொகையில் 'எறும்பியூர் மலையான் எங்கள்ஈசனே' என்று அருமைப்பட முதல் ஐந்து பாடல்களின் ஈற்றடியில் கூறி யிருக்கிறார். நறுங்குழல் மடவாள் என்று தேவியின் பெயரைக் குறிக்கிறார். திருக்குறுந்தொகைப் பத்துப் பாடல்களிலும் கடைசியில் "எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே" என்றும் சொல்கிறார்.

திருஎறும்பியூர்ப் புராணம் என்ற தலபுராணச் செய்யுள் நூல் ஒன்று இருக்கிறது. வசன நூல் ஒன்று உண்டு. அண்மையில் கோயிலார் வெளியிட்டிருக்கும் "திருவெறும்பூர்க் கோயில் வரலாறு" என்ற நூலும் இருக்கிறது. தலபுராணத்தில் நைமிசாரணியப் படலம் முதல் முனிவர்கள் பூசித்தபடலம்வரை 17 படலங்கள் இருக்கின்றன. பிரமன், இந்திரன், திருமகள், இரதி, அக்கினி, முருகன், அகத்தியன், தேவர்கள், முனிவர்கள் இவர்கள் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றதைக் கூறப்பட்டிருக்கிறது.

கோயிலில் பல கிரந்த தமிழ்க்கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவை இராஜராஜ சோழன்-I, இராஜேந்திரசோழன்-I, குலோத்துங்கசோழன்-I, விக்கிரமசோழன், பராந்தகன்-I, மாறவர்மன்சுந்தரபாண்டியன், இராஜதேவன்-II, விஜயநகர விருபாக்ஷ உடையார் முதலிய மன்னர்களின் காலத்தவை. தென்கரைப்பாண்டி குலாசனி வளநாட்டு வடகவீரநாட்டுத் திருவெறும்பியூர் என்று அவை ஊர்ப்பெயரைக்குறிக்கின்றன. திருமலை ஆள்வார், திருமலை ஆண்டார், திருவெறும்பியூர் ஆள்வார், தென்கயிலாயத்து மகாதேவர், ஆதித்தபட்டாரகர், திரிபுவனசுந்தரர் என்று இறைவன் பெயரையும், உமாபட்டாரகி என்று தேவியின் பெயரையும் குறிக்கின்றன. மலைமேலுள்ள சத்திரத்தில் அந்தணர், சிவயோகிகளுக்கு உணவளிக்கவும், கோயிலில் விளக்கெரிக்கவும் பொன், ஆடு, நிலம் முதலிய தானங்கள் செய்ததைக் குறிக்கின்றன. இராஜராஜசோழன் இங்கு வந்தபோது காழி ஆதித்தன் என்பவனைக்கொண்டு கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்தான்; திம்மிகுடி அம்மையார் ஒருவர் மலைமேல் கோயிலில் திருப்பணிகள் செய்தார்; சிருதாவூர் செம்பியன்வேதி வேளான் கோயில் விமானத்தைக் கட்டினான்; அவனே கோயிலில் திருப்பதிகம் (தேவாரம்) உடுக்கை, தாளம் இவற்றோடு பாடுதற்கு நிலதானம் செய்தான்; பாண்டி மண்டலத்துத் திருநெல்வேலிக்காரர் ஒருவர் விளக்கு அளித்தார்; எருமைக்குளம் என்ற கிராமம் பிள்ளையார்பகவதி ஆள்வார் திருவிழாவுக்காக வழங்கப்பட்டது; யாத்திரீகர்களுக்கு அமுதளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது; கோயிலுக்குச் சொந்தமானவைகளின் பேரில் வரிவிலக்கு செய்தது; வேதம்வல்ல அந்தணருக்கு உணவளிக்க நிவந்தம் ஏற்படுத்தியது; பூசை நைமித்திகம் முதலியவை நடைபெறத் தானங்கள் வழங்கியது; அரண்மனை வேலைக்காரி ஒருத்தி கோயிலுக்குக் குத்துவிளக்கு செய்தளித்தது; குளம், கால்வாய் இவைகள் வெட்ட ஏற்பாடு செய்தது; சிறுவாலிநாட்டு சாத்தன் தணக்கன், தேவியின் சிலையை எடுப்பித்தது; கோயில் திருமஞ்சனத்துக்கு ஆற்றிலிருந்து நாள்தோறும் நீர் கொண்டுவர ஏற்பாடு செய்தது; இன்னும் பல அரிய செய்திகளை அக்கல்லெழுத்துக்கள் அறிவிக்கின்றன.

அறிவிலங்கு மனத்தானை
அறிவார்க்கன்றி அறியாதார்
தந்திறத்தொன் றறியாதானைப்

பொறியிலங்கு வாளரவம்
புனைந்துபூண்ட புண்ணியனைப்
பொருதிரைவாய் நஞ்சமுண்ட

குறியிலங்கு மிடற்றானை
மடல்தேன் கொன்றைச் சடையானை
மடைதோறுங் கமலமென்பூச்

செறியெறும்பியூர் மலைமேல்
மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்
சென்றடையப் பெற்றேன் நானே.

—திருநாவுக்கரசர்.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

[பெண்ணே! திருமால், நான்முகன், தேவர்கள் இவர்களிடம் இல்லாத பேரின்பத்தை நாம் அடையும்படியாக, நம்மைக் குற்றம் நீக்கி ஆதரித்து, நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளித் தம் திருவடிகளைத் தரிசிக்கச்செய்த சிவபிரானைப் பாடி நீராடுவோமாக].

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்

[உடை, நீர், சோறு இவற்றை அறமாக அளிக்கும் நந்தகோபாலா! எழுந்திருப்பாயாக. பெண்களுக்கெல்லாம் முதன்மையாய் மங்களதீபம்போன்ற யசோதைப் பிராட்டியே! எழுந்திருப்பாயாக. வானிடம் அறச்செய்து ஓங்கி உலகளந்த தேவாதி தேவனே! தூங்காமல் எழுந்திருப்பாயாக. பலதேவனே! உன் தம்பி கண்ணனும் நீயும் உறங்காதெழுந்திருக்கவேண்டும்.]

600 008
158336

அடியவர் திருநட்சத்திரங்கள்

விகாரி—மாசி

சைவம்

4உ—எறிபத்த நாயனார்
11உ—காரி நாயனார்
14உ—கோச்செங்கட்சோழ நாயனார்

வைணவம்

25உ—குலசேகர ஆழ்வார்

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Nungambakkam, Madras-6.